Registered as a News Paper

# மன்னா

பொழிவு - 12
குவிப்பு - 09
பக்கங்கள்- 20
விலை ரூபா 40.00
செப்ரம்பர் - 2009
(ISSN 1800-2641)

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/131/News/2009

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

## முட்கம்பிக்குள் சிறைக்கைதிகள்போல் வைக்கப்பட்டிருக்கும்

# மக்களை விடுதலை செய்யுங்கள்

### மடுமாதா ஆவணித்திருவிழாவில் ஆயர்கள் உருக்கமான வேண்டுகோள்

**இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் முட்கம்பிக்குள் சிறைக்கைதிகள் போன்று வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை விடுதலை செய்யுமாறும் கத்தோலிக்க மதத்தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**




மன்னார் மடுத்திருப்பதியின் வருடாந்த ஆவணித் (15ம் திகதி) திருவிழாவின்போது கொழும்பு மற்றும் யாழ் ஆயர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

திருவிழாவை முன்னிட்டு யாத்திரிகர்கள் தேவாலயத்திற்குச் செல்வதற்கான தடைகளை அரசாங்கம் நீக்கியிருந்தது. பல்லாயிரக் கணக்கானோர் மடுமாதாவைத் தரிசிப்பதற்காக வருகை தந்திருந்தபோதும் மடுத்திருப்பதியைச் சூழவுள்ள கிராமங்கள் வெறுமையாகவே காட்சி தந்தன. அந்தப் பகுதியைச்சேர்ந்த மக்கள் வவுனியாப் பகுதியிலுள்ள முகாம்களுக்குள் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

மடுத் தேவாலயப் பகுதியை 16 மாதங்களுக்கு முன்னர் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருக்கின்றபோதிலும் அப்பகுதி மக்களை மீளக்குடியேற்றுவதற்கு கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியிருப்பதாக அரசாங்கம் இன்றுவரை கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருவுளப் பணியாளர் சபையின் நிறுவுனர் இறையடி சேர்ந்தார்



திருவுளப் பணியாளர் சபையின் (IVD) நிறுவுனர் அருட்தந்தை லூயி மரிபரன் அடிகளார் கடந்த மே மாதம் 17ம் திகதி இறைபதமடைந்தார்.

இலங்கையில் உள்ள திருவுளப் பணியாளர் சபையினருக்கு மன்னாவின் ஆழ்ந்த அனுதாபங்கள்!

இவருடைய இறப்பின் 31ம் நாள் நினைவில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை திருவடி நிலையத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## இடம்பெயர்ந்த மக்கள் மழை வெள்ளத்தினால் பெரும் அவதி



தற்போது ஆரம்பித்திருக்கும் பருவ மழையினால் வவுனியா, செட்டிகுளம் பகுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ள வன்னி மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவிக்கின்றனர்.

## சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குனராக அருட்பணி. டலிமா நியமனம்



மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் கி. அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குனராக நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த யூன் மாதம் 19ம் திகதி சுவிஸ் நாட்டில் காலடி பதித்த இவர் ஓரிரு மாதங்களில் தன் பணியை ஏற்கவுள்ளார். சுவிஸ் ஆன்மீக பணியகத்தின் இயக்குனராக இருந்துவரும் அருட்பணியாளர் பீற்றர் மனோகரன் தன் பணிக்காலத்தை நிறைவுசெய்வதை அடுத்து டலிமா அடிகளார் இப்பொறுப்பை ஏற்க உள்ளார். பீற்றர் அடிகளாருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு டலிமா அடிகளாருக்கு நல்வாழ்த்துக்களை மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## மடு ஆவணித் திருவிழா நிகழ்வுகளின் நிழல்கள்
















# திருத்தந்தை குருக்களுக்கு விடுக்கும் அறைகூவல்

(முன்னாள் சென் பவ்லோ மறைமாவட்டப் பேராயரும், வத்திக்கான் ஆலயப்பீட ஆணைக்குழுத் தலைவருமான கருதினால் கிளெவ்டியோ கூமெஸ், அவர்களால் அருட்பணியாளர் வருடத்திற்காக வெளியிடப்பட்ட மடலைத் தழுவி எழுதப்பட்டது)

### ஆரவாரமில்லாமல் கடந்து சென்ற பொதுநிலையினர் வருடம்

2008ஆம் ஆண்டு பொதுநிலையினரின் வருடமாக திருத்தந்தையால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தபோதிலும் பெருமளவில் அதற்கு பொதுநிலையினராலும் துறவிகளாலும் முக்கியத்துவம் கொடுக்கப்படாமலேயே அது ஓடி மறைந்துவிட்டது. வருட நிகழ்வுகளையும் அதற்கான ஆயத்தங்களையும் திருத்தந்தையால் பிரகடனம் செய்து வைக்கவும் அது குறித்து அறிக்கைகளை வெளியிடவுமே முடிகின்றது. ஆனால் அவரின் சிந்தனைகள், கொள்கைகளை மேலும் மெருகூட்டி அதை இறைமக்களுக்கு பகிர்ந்துகொள்வதில் முக்கிய பொறுப்பு ஏனையவர்களைவிட கத்தோலிக்க ஊடகங்களுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் உள்ளது என்றால் அது மிகையாகாது.

### அருட்பணியாளருக்காக 2009 அர்ப்பணிப்பு

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் 2009ஆம் வருடத்தை அருட்பணியாளர்களின் வருடமாக கடந்த யூன் 19இல் பிரகடனப்படுத்திச் சிறப்பித்துள்ளார். இவ்வருடத்தில் இறையடி சேர்ந்து 150 வருடத்தை நிறைவுசெய்யும் புனிதரான அருட்பணியாளர் மரிய வியான்னி அவர்கள் நினைவுகூரப்படுவது இப்பிரகடனத்தை மேலும் சிறப்பூட்டுகின்றது. இவ்வாறு இவ்வருடத்தை அருட்பணியாளரின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியமை பல்வேறு மட்டங்களிலிருந்தும் ஆதரவைப் பெற்றுள்ளதுடன் முக்கியமாக அருட்பணியாளர்கள் மத்தியிலிருந்தும் சாதகமான குரல்களை எழுப்பியுள்ளது.

### நன்றியும் பேருவகையும்

இந்த ஒரு வருட காலத்தில் நாம் அருட்பணியாளர்களுக்கு மட்டுமில்லாது அனைத்து கிறிஸ்தவ சமூகத்திற்கும் அத்துடன் அனைத்துலக ஊடகங்களுக்கும் கூற விரும்புவது என்னவென்றால், எமது கத்தோலிக்க அருட்பணியாளர்கள் பற்றி நாம் பெருமைப்பட்டுக்கொள்வதுடன் அவர்களை நாம் அன்பு செய்து, உயர் நிலையில் மதித்துக் கொள்கின்றோம். அவர்கள் எமக்காக மேற்கொள்ளும் ஆன்மீகப் பராமரிப்பிற்காகவும், தமது வாழ்வை எமக்காகத் தியாகத்துடன் அர்ப்பணித்து கிறிஸ்துவின் கொள்கைகளுக்குச் சாட்சிகளாய் வாழும் இவர்களுக்கு இவ்வேளையில் எமது உயர்வான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்பதேயாகும்.

### பாராட்டு மட்டுமல்லாது குறைகளையும் சுட்ட வேண்டும்

அருட்பணியாளர்கள் என்போர் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் இல்லாமல், முக்கியமாக அவர்கள் யார் என்பதிலேயே தங்கியுள்ளது. நிச்சயமாக சிலவேளைகளில் ஒருசில அருட்பணியாளர்கள் தண்டனைக்குரிய குற்றச்செயல்களில் ஈடுபடுவதுடன் பிரச்சினைகளை உருவாக்குபவர்களாகவும், ஒருசிலரின் கதைகளைக் கேட்டுக்கொண்டு மற்றவர்களைப் பழிவாங்கும் எண்ணம் கொண்டவர்களாகவும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இப்படியானவர்கள் நிச்சயமாகச் சட்டத்தினாலும், திருச்சபையின் உயர்பீடத்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது மிகவும் குறைந்த வீதத்தினரே இப்படியாக உள்ளனர். பெரும்பாலான அருட்பணியாளர்கள் மதிக்கப்பட வேண்டிய மனிதர்களாகவும், தமது பணிகளை நிறைவேற்றுவதில் பண்பானவர்களாகவும், செப, தப வாழ்வை விருப்புடன் மேற்கொள்பவர்களாகவும், ஆன்மீகப் பராமரிப்பில் அயலவர்களை மிகவும் அன்பு செய்பவர்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் தமது குருத்துவ அழைப்பிற்காகவும், கொடுக்கப்பட்ட பணிக்காகவும் பல வேளைகளில் பல தியாக அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதுடன் இப்பணிக்காகத் தமது முழு வாழ்நாளையும் அர்ப்பணித்துக் கொள்கின்றனர். அத்துடன் அவர்கள் இறை இயேசுவிலும், ஆலயப் பீடத்திலும், இறை மக்களிலும் கொண்டுள்ள அன்பால், ஏழைகள்மீதும் துன்பத்தில் வாடுபவர்கள்மீதும் மிகுந்த அக்கறை கொள்கின்றனர். எனவேதான் உலகம் முழுவதுமுள்ள அருட்பணியாளர்கள் குறித்து நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம்.

### சீடர்களாக அடையாளப்படுத்திக்கொள்ளுதலும் இறையியல் ஆழமும் அவசியம்

இறை அழைத்தலில் பங்கேற்றுள்ள அருட்பணியாளர்களுக்-காகப் பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வருடம் தம்மை இறை இயேசுவின் அன்புச் சீடர்களாக அடையாளப்படுத்திக் கொள்ளவும் கத்தோலிக்க இறையியலில் நன்கு ஆழமான அறிவை பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

தாம் எப்பணிக்காக இறைவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் மேலும் உணர்ந்துகொண்டு அதை ஆலய வட்டத்திலும் சமூக வட்டத்திலும் வளர்ச்சியடையச் செய்வதும் அந்த மதிப்பீடுகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்வதும் இன்றைய தேவையாக உள்ளது. இதற்காக ஆயர்களின் ஏற்பாட்டில் மேலதிக இறையியல், மெய்யியல் கருத்தரங்குகளும் இன்றைய சூழமைவுக்கேற்ப ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பொதுநிலையினரின் கருத்துகளும் கேட்கப்பட்டு அவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். (தொடர்ச்சி அடுத்த இதழில்)



# வாசகர் எண்ணங்கள்



### வாசலில் காத்து நிற்கின்றேன்!



என்னில் பாசம் கொண்டு தேடி வரும் மன்னாவே,
என் இனிய இதயத்தில்
இறை செய்தியை விதைக்கின்றாயே!
சிந்தனையைச் செயலாக்கி
சிந்திக்க வைத்துவிடும் நீ
ஊரெல்லாம் சிட்டாய்ப் பறந்து
ஒவ்வொரு உள்ளங்களிலும் பதிய வேண்டும்.
உனக்காக உள்ளங்கள் ஏங்க வேண்டும்
நீ தொடர்ந்த பாதையை
மீண்டும் மீண்டும் தொடர
உன்னை வாழ்த்துகின்றேன்.
உன்னை மீட்டுகின்ற - நல்
உள்ளங்களுக்கு நன்றி பல.
உன்னைக்காண நான் மாதாந்தம்
வாசலில் காத்து நிற்கின்றேன்
வருவாய் மன்னாவே வருவாயென்று!



*- டி. கிறிஸ்ரினா - சாந்திபுரம், மன்னார்.*

### பல்வேறு திசைகளிலே ......!

என்றும் என் அன்புக் காதலன் மன்னாவுக்கு,
என் இதயத்தினைக் கவர்ந்து
உன் பக்கமாக இழுத்தெடுத்தாய்!
இயற்கை வளம் பொருந்திய மன்னாவே
மல்லிகையாய் நறுமணம் பரப்பினாய் - இன்று
பல கடல்களைத் தாண்டி, பல இடங்களைத் தாண்டி
பல்வேறு திசைகளிலே தென்றல்
காற்றாக சுகந்தம் வீசுகின்றாய்.
அன்பான நண்பன், அழகான ஆசான்
அறிவான அறிஞன், கவியான கவிஞன் நீ!
என்றும் உன்பணி தொடர எல்லோர் இதயத்திலும்
நம்பிக்கையின் சின்னமாய்த் திகழ
என் இனிய வாழ்த்துக்கள்.



*- செ. நிலாந்தினி - C8, மடுக்கோவில், மடு*

### இனியும் இந்த ஈனவாழ்வு வேண்டாம்!



உன் கரங்களை
பற்றிப் பிடிப்பதும்
ஆரவாரிப்பதும் - உன்
வர்ணத்திற்காய் அல்ல
நீயாவது - எம்
இறைமையைக் காப்பாய்
என்பதற்காகத்தான்.
அன்புக் கரங்களை - நீட்டி
ஆதரவு காட்டுகின்றாய்
இனியும் எங்களுக்கு இந்த
ஈன வாழ்வு வேண்டாமய்யா.
உன்னால் முடிந்தால்
உலகிற்கு எடுத்துச் சொல்லி
ஏற்றிவை எம் மக்களின்
வாழ்வில் ஒளியை!

*- அ. டிப்னா சாளம்பன், கட்டைக்காடு, நானாட்டான்.*

### எட்டாவது அதிசயமாக ........



என்றும் என் அன்பிற்கினிய தோழன் மன்னாவிற்கு
அன்பற்ற இதயத்திலே அன்பாக
பண்பற்ற இதயத்திற்கு அன்பான பாசக் கரமாய்
என்றுமே என்னுடைய நல்நண்பனாகக்
கூடவே வழிநடந்தாய்!
என் வெற்றிப் பயணங்களிலே
நீயும் நல்ல ஆதரவாளனாக ஆகினாய்.
அழகான இம்சையாய் அறிவான பக்கங்களிலே
பல சுவையான ஆக்கங்களாய் வெளிவந்தாய்.
இதயத்திலே இடம்பிடித்துவிட்ட என்னுடைய தோழனாய்
இன்று எட்டுத்திசைகளிலும் எட்டாவது அதிசயமாக
சிறகு விரித்துப் பறக்கின்றாய்.
உன்பணி முழுவதும் நல்ல ஆதரவாளனாக என்னுடைய
மனப்பூர்வமான இனிய வாழ்த்துக்கள்


*எப். மதுசாலினி - D/1, மடுக்கோவில், மடு*

# யார் இந்த வியான்னி?

குருக்களுக்கான ஆண்டினைச் சிறப்பாகக் கொண்டாடத் தொடங்கியிருக்கின்ற இந்தத்தருணத்திலே உலகில் உள்ள எல்லாக் குருக்களுக்கும் முன்மாதிரிப் பாதுகாவலராகத் திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டுள்ள தூய ஜோன் மரிய வியான்னியைப் பற்றி அறிந்துகொள்வது சாலச் சிறந்தது.

**"துறவற ஒறுத்தல் வாழ்வுக்கும், நற்கருணைநாதர்மீதான பக்திக்கும், பணி ஆர்வத்திற்கும் தூய ஜோன் மரிய வியான்னியே சிறந்த எடுத்துக்காட்டு"** என்பார் திருத்தந்தை 23ம் அருளப்பர். **"கிறிஸ்துவால் நிரம்பியிருக்கும் வியான்னி இறை மக்களை கிறிஸ்துவில் கொண்டு வருவதற்குக் கஷ்டப்படவில்லை, அது எளிதாயிருந்தது"** என்பார் திருத்தந்தை 13ம் அருளப்பர்.

அப்படிப்பட்ட புனித வாழ்வு வாழ்ந்த வியான்னியின் வாழ்க்கையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



### பிறப்பும் சூழ்நிலையும் :

கி.பி 1786ஆம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திலே லியோன் நகரத்தின் அருகிலுள்ள டார்டில்லி என்னுமிடத்தில் விவசாயக்குடும்பத்தில் 6 பிள்ளைகளில் 4வது பிள்ளையாகப் பிறந்தார். அது மாவீரன் நெப்போலியன் போனபர்ட் மற்றும் பிரெஞ்சுப் புரட்சியின் காலம்.

### குடும்பம்:

சிறுவயதிலேயே படிப்பு ஏறாததால் பள்ளியைவிட்டு நின்றவர். குருவாக ஆசைப்பட்டதால் மீண்டும் பள்ளிக்குச் சென்று தன்னைவிட பாதி வயதுடைய சிறு குழந்தைகளோடு இலத்தீன் படித்தார். குருமடத்திலே இலத்தீன் மொழி அவருக்குச் சரியாக வராததால் அவரைக் குருமடத்தில் இருந்து அனுப்ப முடிவு செய்தார்கள். ஆனால், அவரது பங்குத்தந்தை "அவருக்கு நான் உத்தரவாதம்" என்று சொல்லிக் கற்றுக்கொடுத்தார். அதனால்தான் அவருக்குக் குருப்பட்டம் வழங்க அனுமதி வழங்கப்பட்டது. எந்த அளவுக்கு என்றால் எதிர்காலத்தில் சாத்தான் அவரைச் சோதனை செய்தபோது "சாத்தானே அப்பாலே போ" என்று இலத்தீன் மொழியில் இலக்கணப் பிழையோடு கத்தியபோது சாத்தான் கேலி செய்துவிட்டுச் சென்றதாம். கடைசியாக 1815ஆம் ஆண்டு தனது 29வது வயதில் குருப்பட்டம் பெற்றார்.

### குருத்துவப் பணி:

1818ஆம் ஆண்டு 230 இறைமக்களை மட்டுமே கொண்டிருந்த சிறிய பங்காகிய ஆர்ஸில் உதவிப் பங்குத்தந்தையாக மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பிறகு 40 ஆண்டுகளுக்கு மேலாக அதே பங்கிலே பங்குத் தந்தையாகப் பணியாற்றினார்.

பிரெஞ்சுப் புரட்சியின் காரணமாக கத்தோலிக்கர்கள் மறைமுகமாக வாழ்ந்தனர். கிறிஸ்தவ ஆன்மீக ஒழுங்கு மங்கி இறைமக்கள் திருச்சபையை விட்டு விலகிச் சென்றனர். வியான்னி போதனையைவிடத் தன்னுடைய செப தவம், அயரா உழைப்பின் மூலம் மக்களின் சூதாட்டம், குடிவெறி, நாத்திகம் ஆகியவற்றை அகற்றினார். அவருடைய குணமாக்கலும், அற்புதங்களும் அவரிடம் மக்களை ஈர்க்கவில்லை. அவரது செபத்தால் இறை நெருக்கம், தவம், சொல்லமுடியாத அமைதி, புகழ்ச்சியின் மத்தியிலும் தாழ்ச்சி ஆகிய புனிதத் தன்மையால்தான் ஈர்க்கப்பட்டனர்.

### செபமும் தாழ்ச்சியும்:

ஒருமுறை ஆலயத்தில் ஓர் ஏழை எந்தவித செபத்தையும் முணுமுணுக்காமல் நற்கருணைப் பெட்டியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, "எந்தச் செபமும் சொல்லாமல் சும்மா உட்கார்ந்திருக்கிறாயே" என்று வியான்னி கேட்டபோது, அந்த ஏழை "நான் இயேசுவைப் பார்க்கிறேன், அவர் என்னைப் பார்க்கிறார்" என்றார். அவரிடமிருந்து வியான்னி காட்சித் தியானத்தைக் கற்றுக்கொண்டார். பல மணி நேரங்கள் நற்கருணை நாதர் முன்பு அமர்ந்திருப்பார். இந்த இறைவனோடு கொண்ட உடனிருப்புத்தான் மக்களைப் பாவத்திலிருந்து மனந்திருப்பியது

அவித்த உருளைக்கிழங்கையே தினமும் உண்டு எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார் . ஒருமுறை சாத்தான் அவரைச் சோதித்தபோது வியான்னியிடம், "உருளைக்கிழங்கு உண்பவனே, உன்னைப்போல இந்த உலகத்தில் இன்னும் மூன்று பேர் இருந்துவிட்டால் எங்களது அரசே அழிந்துபோகும்" என்று அலறியதாம்.

ஒருமுறை வியான்னியின் கல்வித் திறனை மட்டும் பார்த்துவிட்டு ஆயர், "உன்னை வைத்து நான் என்ன செய்வது?" என்று கேவலமாகப் பேசியபோது, "சிம்சோனை வைத்து கழுதையின் காய்ந்து போன முகத்தாடை எலும்பைக் கொண்டு ஆயிரம் பெலிஸ்தியர்களைக் கொன்ற இறைவன் முழுக் கழுதையான என்னை வைத்து எவ்வளவு செய்ய மாட்டார்?" என்று தாழ்ச்சியுடன் சொன்னார் வியான்னி.

### ஒப்புரவு அருட்சாதனம்

"இறைவன் கொடூரமானவரல்ல, அன்பானவர். தண்டனை கொடுப்பவரல்ல, ஆசீர்வாதம் அருள்பவர்" என்று இயேசுவின் பிரதிநிதியாக பாவசங்கீர்த்தனத் தொட்டியிலிருந்து பலரை மன்னித்து மனமாற்றினார். ஏராளமான மக்கள் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு வந்ததால் களைப்பும், வெறுப்பும் அடைந்தார் மூன்று முறை அப்பங்கிலிருந்து தப்பி ஓடினார். ஆனால் மக்கள் அவரைப் பிடித்துவந்து பாவசங்கீர்த்தனத் தொட்டியில் அமர்த்தினர். (தொடர்ச்சி 18ம் பக்கம்)

# கொழும்பு மறைமாவட்டத்தின் 9வது பேராயராக மல்கம் றஞ்சித் ஆண்டகை பணியேற்பு

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் 9வது புதிய பேராயராக மேதகு டொன் அல்பேற் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த 05.08.2009 அன்று காலை இறைவழிபாட்டு சம்பிரதாயத்தோடு தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பரினால் பேராயராக நியமிக்கப்பட்ட இவரிடம் கொழும்பின் முன்னாள் பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக காலை 9.30 மணியளவில் ஒப்படைத்தார். கொழும்புப் பேராயராகப் பொறுப்பேற்கும் நிகழ்வு கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தில் விசேட திருப்பலி ஆராதனையுடன் நடைபெற்றது.







பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை புதிய பேராயரிடம் தன் பொறுப்புக்களைக் கையளித்து கைலாகு கொடுக்கின்றார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் புதிய பேராயருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.

## மடுத்திருப்பதியில் நீர் ஊற்று

மடுத்திருப்பதியில் ஆவணித் திருவிழா இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தேவாலய வளாகத்தில் பெரிய் நீர் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நீர் ஊற்றில் இருந்து நிமிடத்திற்கு 7000 லீற்றர் நீர் பெற முடியும் என்று வட மத்திய மாகாண பிரதம நீரியல் விஞ்ஞானி உப்புல் விக்கிரமரத்ன தெரிவித்தார். பெரியதொரு ஊற்று காணப்பட்டமை இலங்கையில் இதுவே முதல் தடவை என உப்புல் விக்கிரமரத்ன தெரிவித்தார். நீரூற்றில் இருந்து கிடைக்கும் நீர் பாவனைக்கு உகந்தது என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## மல்கம் ஆண்டகை சமாதானத்திற்கு ஆதரவு

கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய பேராயராகப் பொறுப்பேற்ற மல்கம் ஆண்டகை உரையாற்றும்போது கடந்த 50 வருடங்களாக எமது நாடு பல்வேறு பிரச்சனைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியிருந்தது என்றும் அத்துடன் பயங்கரவாதப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்ட ஜனாதிபதி மற்றும் ஏனைய அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமாதான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கு உறுதிபூணுகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

சர்வமதத் தலைவர்களினால் முன்னெடுக்கப் -படுகின்ற செயற்றிட்டங்களுக்கும் ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருப்பதையும் தெரிவிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மடுமாதா திருத்தல ஆவணித் திருவிழாவில் இரண்டு லட்சம் மக்கள் பங்கேற்பு

### தமிழ் மக்களின் வரவு மிகவும் குறைவு!

மன்னார் மடுமாதா திருத்தல வருடாந்த திருவிழா கடந்த 15.08.2009 அன்று இடம்பெற்றது. இதில் சுமார் இரண்டு இலட்சம் யாத்திரிகள் கலந்துகொண்டனர்.

தென்பகுதியிலிருந்து பெருமளவிலானவர்கள் வருகை தந்திருந்தனர். உணவு, குடிநீர், சுகாதாரம் என அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. வருடாந்த ஆவணி மாத திருவிழாவில்தான் பெருமளவு மக்கள் கூடுவது வழக்கமாகும். சுமுக நிலைக்குப் பின்னர் நடைபெறும் இந்த விழாவிற்கு பாதுகாப்புப் படையினர் பூரண ஒத்துழைப்பினை வழங்கினார்கள். பொது மக்களுடைய பாதுகாப்பினை முன்னிட்டு சுமார் மூவாயிரம் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் என மடுவிற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். இறுதிநாள் திருவிழாத் திருப்பலியில் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயவர்த்தனா, வன்னி எம்.பி.க்கள் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இருமொழிகளிலும் விசேட கூட்டுத் திருப்பலிப்பூசை நடைபெற்று மாதாவின் சொரூபம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ஆசீர்வாதத்தினைத் தொடர்ந்து காலை 10.00 மணியுடன் திருவிழா நிறைவுபெற்றது. கடந்த 6ம் திகதி கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. 15ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் மடுவிலிருந்து அனைத்து யாத்திரிகர்களும் வெளியேறிவிடவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## யேசுநேசன் (அ.ம.தி.) அடிகளார் இறைபதம்




அமலமரித்தியாகிகள் சபையின் மூத்த குருக்களில் ஒருவரும் அமதிகளின் உயர் சபையின் முன்னாள் ஆசிய ஆலோசகருமான அருட்பணியாளர் பி. இயேசுநேசன் அடிகளார் கடந்த 13.08.2009 அன்று கொழும்பில் காலமானார். இவருடைய நல்லடக்க நிகழ்வுகள் கடந்த 17.08.2009 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்றது.

இவர் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்தவர். காலம் சென்ற வேளையில் யாழ்ப்பாணம் கொழும்புத் - துறையில் உள்ள அமதிகளின் உயர்குருத்துவ மாணவர்களின் பயிற்சியகத்தின் அதிபராகக் கடமையாற்றியவர்.

சிறந்த அறிவாளியும், நற்பண்பாளருமாகிய அடிகளாரின் இழப்பு தமிழ் கத்தோலிக்க திருச்சபைக்கு பாரிய இழப்பாகும்.

அன்னாருக்கு மன்னா ஆழ்ந்த அஞ்சலிக்ளைத் தெரிவிக்கின்றது. அடிகளாரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

சகோதரர் வி. என். கிசோக் அவர்களைத் தலைவராக கொண்டு கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் “இயேசு ஆண்டவருக்கு மகிமை குழுமம்” (Glory to Lord Jesus Community) கடந்த யூலை மாதம் மன்னார், பேசாலை, எழுத்தூர் ஆகிய பங்குகளில் நடாத்திய செபவழிபாட்டு நிகழ்வுகளின் பதிவுகள்.









## மன்னார் மறைமாவட்ட செய்திகள்

# மன்னார் மறைமாவட்ட அன்பியப் பணியாளர்களுக்கான நான்கு நாள் வலுவூட்டல் பயிற்சிநெறி







நற்செயதி அறிவிப்பு ஆண்டை (2009) முன்னிட்டு அன்பியப் பணியாளர்களுக்கான நான்கு நாட்கள் வலுவூட்டல் பயிற்சி அன்பிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் ஆரம்ப நாளில் (16.07.2009) மாலை 6.00 மணிக்கு அன்பியக் கொடியை ஏற்றி சம்பிரதாயபூர்வமாக இப்பயிற்சிநெறியை ஆரம்பித்து வைத்தார்.

அவர் தனது ஆசியுரையில் அன்பிய ஆணைக்குழு மாதாந்தம் பல பங்குகளுக்குச் சென்று அங்கு அன்பியப் பணியாளர்களுக்கு பயிற்சியும் ஊக்கமும் அளித்துப் பணியாற்றி வருவதைக் குறிப்பிட்டுக் கூறினார். நற்செய்தி அறிவிப்பு ஆண்டின் செயற்பாடாக புதிய அன்பியப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கி அன்பியப் பணியை பங்குகளில் ஊக்குவிக்கும் முகமாக இப்பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்தார்.

பல பங்குகளிலிருந்து நாற்பது அன்பியப் பணியாளர்கள் இப்பயிற்சிப் பாசறையில் பங்கெடுத்திருந்தனர். இப்பயிற்சியின்போது அன்பிய வாழ்வைச் சுட்டிக்காட்டும் ஆன்மீக உரைகள் அருட்தந்தையர்களினால் வழங்கப் - பட்டது. அருட்பணியாளர்கள் எஸ். கே. தேவராஜா, ஏ. யூட் குரூஸ், எஸ். கிறிஸ்ரியன் வாஸ், ஸ்ரனி அன்ரனி (அமதி), தமிழ் நேசன், அருட்சகோதரி றெஜி ஆகியோர் உரைகளும் பயிற்சிகளும் வழங்கி வலுவூட்டினர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகை இப்பணியாளர்களை பயிற்சியின்போது சந்தித்து ஊக்கமளித்து ஆசீர் வழங்கினார். பயிற்சியின்போது தாங்கள் பெற்றுக் -கொண்ட அனுபவங்களையும், பங்குகளுக்குச் சென்று பணியாற்றவுள்ள வழிமுறைகளையும், பின்னணியாகக்கொண்டு கலை நிகழ்ச்சிகளை இப்பயிற்சியாளர்கள் தயாரித்து இறுதிநாளின் - போது வெளிப்படுத்தியமை சிறப்பான நிகழ்வாக அமைந்தது. சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. அலெக்ஸ்சாண்டர் சில்வா (பெனோ) அடிகளார் பயிற்சியின் இறுதி நாள் (19.07.2009) ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றி அன்பிய வாழ்வின் அவசியம் பற்றி மறையுரையாற்றினார்.

இப்பயிற்சி இனிதே நிறைவேற பல பங்குத்தந்தையர்கள் பலவிதமான பொருட்களை வழங்கி பகிர்வினை புடமிட்டுக் காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார் உடனிருந்து உதவிக்கரம் அளிக்க, அன்பிய இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் இப்பயிற்சிநெறியை நெறிப்படுத்தினார்.

தொடக்கத்திருச்சபை வாழ்வை முன்னுதாரணமாகக் கொண்டு பங்குகளில் அன்பியங்கள் வளர இதுபோன்ற பயிற்சி நெறிகள் மீண்டும் பரவலாக்கப்படவுள்ளதையும் அன்பிய இயக்குனர் சுட்டிக்காட்டினார். பங்கெடுத்தவர்களில் அனேகர் புதிய பணியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பம்பைமடு பங்கில் புதிய பங்கு அருட்பணி பேரவை



*புதிய பங்கு அருட்பணிப் பேரவை அங்கத்தவர்கள் அர்ப்பணம் செய்கிறார்கள்*

வவுனியா பம்பைமடுப் பங்கின் 2009, 2010 ஆண்டுகளுக்கான பங்கு அருட்பணிப் பேரவைத் தெரிவுக் கூட்டம் 08.03.2009 ஆம் திகதி பங்குத்தந்தை அருட்திரு. எஸ், அன்ரன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மன்னார் மறைமாவட்ட அருட்பணிப் பேரவை இயக்குனர் அருட்தந்தை டலிமா அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்.

அருட்பணிப்பேரவை பற்றியும் பங்கில் அது சிறுசிறு குழுக்களாக பிரிந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தையும் பற்றியும் அவர் விளக்கிக் கூறினார்.

**அக்குழுக்கள் வருமாறு :**

- கல்வி விவிலியம் மறைக்கல்வி பணிக்குழு:
  தலைவர் : திரு. மரியநாயகம் தாசன்
  செயலாளர் : திருமதி. யூ சிவராகுலன்
- திருச்சபை வளர்ச்சிக் குழு:
  தலைவர் : திரு அன்ரனிதாஸ்
  செயலாளர் திருமதி. வதனா
- நிதிக்குழு : செயலாளர் : திரு. செ. லோரன்ஸ்
- வழிபாட்டுக் குழு :
  செயலாளர் : திருமதி. பா. ஜெசிந்தா
- குடும்பம் பொது நிலையினர் குழு :
  தலைவர் : திரு. ச. வி. இம்மானுவேல்
  செயலாளர் : திரு. அ. அலேஸ்
- கலாச்சாரக் குழு :
  தலைவர் : திரு, எஸ். பி. வசந்தகுமார்
- சமூகப்பணிக் குழு :
  தலைவர் : திரு அ. க. றொய்ஸ்
  செயலாளர் திரு. செ. பத்திரான

இக்குழுக்களில் அங்கம் வகிப்போர் தமது இரண்டு ஆண்டு பணி வாழ்விற்கான அர்ப்பணத்தை 17-05-2009 அன்று திருப்பலி பூசையில் செய்துகொண்டார்கள்.

## மன்/ கல்வி வலயம் மற்றும் மன்/ மறைமாவட்டத்தின் முன்னெடுப்பில் இலங்கை முழுவதும் அறிமுகமாகியுள்ள

# ‘கிறீஸ்தவ நாகரீகம்’ பாடச் செயலமர்வு

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவுப் பாடங்களின் வரிசையில் மேலுமொரு புதிய பாடத்தின் தோற்றம் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மாணவர்களுக்குக் கிடைக்கப் - பெற்றுள்ளமை கல்விச் சமூகத்திற்கு பெரும் மகிழ்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் கிறீஸ்தவ நாகரீகம் பாடத்தை இந்த ஆண்டில் க.பொ.த. உயர்தர வகுப்பில் புதிதாகப் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மன்னார மறைமாவட்டம் பேருவகை அடைகின்றது.

இப்புனித, பாரிய முயற்சி மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களுடன், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரும், கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகரும் ஒருங்கிணைந்து மேற் -கொண்ட இடைவிடா முன்னெடுப்பில் மகிழ்ந்ததே இந்தப் புதிய கிறிஸ்தவ நாகரீகம் (Christianity Civilization) என்ற பாடநெறி என்றால் அது மாபெரும் சிறப்பாகும்.

இலங்கைத் தேசத்தின் மூலை முடுக்கெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவ மாணவர்கள் இப்புதிய பாடத்தைக் கற்றுத் தேர்ச்சி அடைவதன் மூலம் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கும் இலகுவாகச் செல்ல புதிய சிறந்த வழி பிறந்துள்ளது.

கிறிஸ்தவ நாகரீகம் புதிய பாடம் என்ற வகையில் ஏனைய பாடங்களைப்போல் இதற்கெனத் தனியான பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி, பாடத்திட்ட அமுலாக்கம் போன்ற அனைத்து விடயங்களையும் தேசிய கல்வி நிறுவகம் மனமுவந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடத்துறைக்கென செயற்றிட்ட அதிகாரியாக அருட்பணி. லொயிற் சாந்திக்குமார் அவர்கள் நியமனம் பெற்றுள்ளதோடு அவர்களின் வழிகாட்டலில் திரு. எம். ஆபேல் றெவல் (மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்) அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ், அருட்பணி. எஸ். ஜெயந்தன் பச்சேக் (O.M.I.), அருட்பணி. விக்ரர் சோசை (குருமுதல்வர்), அருட்பணி. ஜெராட் றொசைரோ (O.M.I.), அருட்பணி. வசந்தகுமார், திருமதி. பி. ஆர், ஜே. பீரிஸ் - ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து ஏனைய பாடங்களுக்கு இணையாக இதை உருவாக்கித் தந்துள்ளமை போற்றத்தக்க அம்சமாகும்.

இப்பாடத்தை முதன் முதலில் மன்னார் கல்வி வலயத்தில் ஏப்ரல் மாதம் 28, 29, 30, திகதிகளில் 3 நாட்கள் நடைபெற்ற முதற்கட்ட செயலமர்வில் அறிமுகம் செய்து வைத்ததுடன் கடந்த யூன் மாதம் 2, 3, 4ம் திகதிகளில் நடைபெற்ற 2ம் கட்ட செயலமர்வு மூலம் வகுப்பறைக் கற்ற செயற்பாடுகளைத் தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்லவும் நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டமை மற்றொரு சிறப்பாகும்.

இச்செயலமர்வில் மன்னார் வவுனியா கல்வி வலயங்களில் 42 ஆசிரியர்கள் பங்குகொண்டு தேவையான அனைத்துக் கற்றற் செயற்பாட்டு நடவடிக்கைகளையும் பெற்றுள்ளனர். இப்புதிய பாடநெறியினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்து -வதற்கு சகல விதத்திலும் ஆக்கமும் ஊக்கமும் ஒத்தாசையும் ஆசீரும் அளித்த மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கும் முன்னாள் மறைக்கல்வி கல்வி இயக்குனர் அருட்தந்தை நேசன் அடிகளாருக்கும் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.







# வங்காலையில் மகத்தான மகாஞான ஒடுக்கம்

### திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்

வங்காலை புனித ஆனாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கடந்த யூன் 21 ஆம் திகதி தொடக்கம் யூலை 26ஆம் திகதிவரை வங்காலைப் பங்கில் மகா ஞான ஒடுக்கம் நடைபெற்றது. இந்த ஞானஒடுக்கத்தில் அமதி அருட்பணியாளர்கள் கமல், விமல், தேவா, ஜெயபாலன், பெனோ, ஜோய், யோகராஜா, யோண்சன் ஆகியோர் வெவ்வேறு பணிகளைப் புரிந்துவந்தனர். வங்காலை பங்குத்தந்தை அருட்பணி ஏ. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரும் உதவிப் பங்குத் தந்தை லக்ஸ்ரன் டீ சில்வா அவர்களும் இவர்களின் இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

அமதி அருட்பணியாளர்கள் தொடர்ந்து இல்லத்தரிசிப்புக்களை மேற்கொண்டனர். வட்டாரத் திருப்பலிகள், நற்கருணை ஆராதனைகளைத் தொடர்ந்து நடத்திவந்தனர். பீடப்பணியாளர், இளைஞர், மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் போன்றோருக்கான கருத்தமர்வுகளை நடாத்தினர். கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தமர்வினை வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. பேனாட் அவர்களும் பெற்றோருக்கான கருத்தமர்வினை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு, யோகராஜா அவர்களும் சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மகா ஞான ஒடுக்கம் நடந்துவருகின்ற வேளையில் ஆலயத்திருவிழா நவநாளும் யூலை 17இல் கொடியேற்றத்துடன் வழமையான வங்காலைப் பாரம்பரியங்களுடன் ஆரம்பித்தது. தொடர்ந்து சிறுவர் தினம், இளையோர் தினம், அன்னை மரியாள் தினம், நோயாளர் தினம், நற்கருணை தினம் என்று முறையாக வழிபாடுகள் நடாத்தப்பட்டன. இந்த வழிபாடுகளுக்கெல்லாம் உயிரும் ஊற்றமுமாக இசை மழையினைப் பொழிபவராக அருட்பணி விமல் அடிகளார் விளங்கினார். தர்க்கப் பிரசங்கத்தை அருட்பணி. ஜோய் அடிகளும் அருட்பணி. ஜெயபாலன் அடிகளும் அர்த்தமுள்ள விதத்தில் ஆற்றினர்.



பக்தி நிறைந்த பரவசமான பாடல்கள் மற்றும் பஜனைகள் வழியாக இறைமக்கள் இறைவனை அணுகிச்செல்லும் வாய்க்கால்களாக அனைத்துப் பாடல்களும் பாடப்பட்டு பொது மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்ட விதம் யாவரையும் கவரக்கூடியதாக இருந்தது.

சிசிலியா பாடகர் குழாம் தினமும் பாடல் பயிற்சிகளை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தி வழிபாடுகளை சிறப்பித்தமை பாராட்டுக்குரியது. நாளாந்த திருப்பலிகளில் அருட்பணியாளர்கள் மறையுரைகளை பக்திச்சுவையுடன் நயம்பட ஆற்றியமை எல்லோராலும் பாராட்டப்பட்டது.

நற்கருணைப் பவனி, செபமாலைப் பேரணி போன்றவை ஊரைச்சுற்றி, வலம்வந்த விதங்களும் மக்களை வழிபாட்டுடன் ஒன்றுபடக் கலக்கின்ற நிலையையைத் தோற்றுவித்தது.

நவநாட்களின்போது ஒவ்வொரு நிகழ்ச்சியும் அர்த்தமுள்ளதாக, நவீன கற்பித்தல் உத்திமுறைகளைப் பயன்படுத்தி காட்சிப்படுத்தப் -பட்டு இருந்த விதமும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

பாவமன்னிப்பு வழிபாடும் பக்தியாக இருந்தது. யூலை 25ந் திகதி நற்கருணை தினம் அன்று அருட்பணி ஜெராட் றொசொய்றோ (அ.ம.தி.) அவர்களால் ஆழமான மறையுரை இடம் பெற்றது. (தொடர்ச்சி 18ம் பக்கம்)

## வாழ்வு தரும் வார்த்தை

# "ஆண்டவருக்குள் நிலைத்திருங்கள்"

தந்தை வி. இக்னேஷியஸ், சே.ச.

"கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தை கிறிஸ்தவர்கள் நமக்கு ஓர் அற்புதமான, வாஞ்சையுள்ள வார்த்தையாகும். "உள்" என்ற சொல்லை தமிழ் இலக்கியத்திலோ, தமிழ்ப் பேச்சு வழக்கிலோ நாம் உபயோகிக்கிறோம். அதன் அர்த்தம் ஒன்றுக்குள் இன்னொன்று என்பதாகும்.

தண்ணீருக்குள் மீன்கள் என்று சொன்னால் எல்லோருக்கும் புரியும். கூடைக்குள் மாம்பழம் என்று சொன்னால் புரியும். காட்டுக்குள் மிருகம் என்று சொன்னால் புரியும். ஆனால் ஒரு மனிதருக்குள் இன்னொரு மனிதன்! அது எப்படி? கிறிஸ்துவுக்குள் நாம்........ கிறிஸ்துவுக்குள் நீங்கள்.... இது எப்படி?

சில சமயங்களில் ஒட்டு மரங்களைப் பற்றி கேள்விப்படுகிறோம். ஒரு மரத்துக் கிளையை வெட்டி இன்னொரு மரத்தோடு ஒட்டி வைக்கிறார்கள். ஆனால், எந்த மனிதனையும் வெட்டி இன்னொரு மனிதருக்குள் ஒட்டுவதில்லையே?

"கிறிஸ்துவுக்குள் நீங்களும் நானும்" என்று சொல்லும்போது இதில் ஒரு மர்மமான பொருள் அடங்கியிருக்கிறது. இயேசு தன்னுடைய சீடர்களோடு தன்னுடைய அந்தரங்க உணர்வுகள் எல்லாம் பகிர்ந்துகொண்டார். சிலுவையில் அறையப்படுவதற்கு உயிர்விடுவதற்கு முன்பு சீடர்களோடு பாஸ்கா உணவை உண்ட பின்பு, உணர்ச்சியோடு தன்னுடைய அந்தரங்கக் கருத்துக்களை அவர்களுக்கு சொல்லிக் காண்பித்தார்.

"நான் திராட்சைக் கொடி. நீங்கள் அதன் கிளைகள். ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். ஏனெனில், என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

ஒருவன் என்னுள் நிலைத்திராவிடில், கிளைகளைப்போல் வெட்டி எறியப்பட்டு, உலர்ந்து போவான். அக்கிளைகளை ஒன்று சேர்த்து, நெருப்பில் போட்டு சுட்டெரிப்பார்கள். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் விரும்பியதெல்லாம் கேளுங்கள். உங்களுக்கு அருளப்படும் (அரு. 15:5-7).



ஆண்டவர் இயேசுவே இப்படி அற்புதமான ஒரு போதனையைத் தன் சீடர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இயேசுவுக்குள் வாழ்வது என்று சொன்னால் அதைப் புரிந்துகொள்ள கொஞ்சம் கடினமாகவே உள்ளது. ஆனால், ஆண்டவர்தானே, "திராட்சைக் கொடியில் அதன் கிளைகள் இருப்பது போல்" என்ற உவமானத்தைக் கொடுத்திருக்கிறார்.

திராட்சைக் கொடிக்கும் அதில் வளர்கிற கிளைகளுக்கும் உள்ள தொடர்பு, இயேசுவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் இருக்க வேண்டியது. செடியில் இருந்து கிளை உயிர் பெறுகிறது. செடியோடு சேர்ந்து இருக்கிறபொழுது பலன் தருகிறது. செடியில் இருந்த கிளை வெட்டப்படும்பொழுது, அந்தக் கிளை உலர்ந்து காய்ந்து போகிறது, பலனின்றிப் போகிறது.

## கிறிஸ்துவோடு இறப்பது

செடியும் கிளையும்போல் இயேசுவும் அவர் சீடரும் உள்ளனர். இயேசு தன்னையே மறுத்து, "கோதுமை மணியாக" மண்ணில் விழுந்து தன்னையே இழந்தார். பிதாவின் சித்தத்தின்படி தம்மையே சிலுவையில் பலியாக்கினார். தனக்கென்று அவர் வாழவில்லை. தன் உயிரை மக்களுக்காக பிதாவுக்குக் கையளித்தார். கிறிஸ்துவுக்குள் வாழ்கின்ற கிளை போன்ற சீடர், தன்னையே மறுத்து, கோதுமை மணிபோல் மடிந்து, தம்மையே பிதாவுக்குப் பலியாக்க வேண்டும்.

மடிகிற விதைதான் முளைக்கும். நல்ல பலன் தரும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும்.

"தன் உயிரை நேசிக்கிறவன் அதை இழந்து விடுகிறான். இவ்வுலகில் தன் உயிரை வெறுப்பவனோ அதை முடிவில்லா வாழ்வுக்குக் காப்பாற்றிக்கொள்கிறான்" (அரு. 12:24,25).

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம். இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர் என்றும் நாம் அறிந்திருக்கிறோம்... இயேசு வாழ்கிறார் அந்த வாழ்வு கடவுளுக்காக வாழும் வாழ்வு. அவ்வாறே, கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்கள் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் செத்தவர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுளுக்காக வாழ்கின்றவர்கள் என்று எண்ணிக் கொள்ளுங்கள் (உரோமை 6:8-11).

***எனவே கிறிஸ்துவுக்குள் என்று சொன்னால் ஒருவன் இந்த உலக ஆசா - பாசங்களுக்கு செத்துப்போனவன் என்று அர்த்தமாகும். இந்த உலக நாட்டங்கள், உலக இச்சைகள், பாவச் சார்புகள், உடலுக்கடுத்த சுயநலம் இவையெல்லாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனுக்கு புறம்பானது.***

உடலின் இச்சைகளுக்கு ஒருவரை உட்படுத்தும் பாவ உணர்வு கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவன்மீது ஆட்சி செலுத்த முடியாது. கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர்களுடைய உடல் கடவுளுக்குச் சொந்தமானது. "பாவம் உங்கள்மீது ஆட்சி செலுத்தலாகாது" (உரோமை 6:14) இப்படி கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப் - பட்டிருக்கின்றனர். இனி வாழ்வது நானல்ல என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே (கலாத் 2:20) கிறிஸ்துவுக்குள் என்று சொன்னால்: ஜீவனைப் பெற்ற ஒருவர் ஓர் அற்புதவிதமாக, தம்முடைய சாதாரண புத்திக்கு எட்டாத விதமாக, கிறிஸ்துவைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். கிறிஸ்துவுக்கே உரிய தெய்வீக வல்லமை கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவரையும் ஆட்கொண்டு அவருடைய எல்லாச் செயல்களிலும் சிந்தனையிலும் வெளிப்படும்.

கிறிஸ்துவின் பரிசுத்ததனம் கிறிஸ்தவரின் ஆடையாக மூடிக்கொள்ளும். "கிறிஸ்துவை அணிந்துகொள்ளுங்கள்" (கலா. 3:27) என்று பவுலடியார் இதை விவரிப்பார்.

## ஆவியினால் இயக்கப்படுவர்

'கிறிஸ்துவுக்குள்' என்று சொன்னால் ஒருவருக்கு கிறிஸ்துவின் பரிசுத்த ஆவி உள்ளுயிராய் இருப்பார். கிறிஸ்துவுக்குரிய பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர்களை பரிசுத்தமாக்குவது மாத்திரமல்லாமல் இயேசுக் கிறிஸ்துவின் உரிமையிலும் பங்கு தருகிறார்.

கடவுளை "அப்பா" என்று கூப்பிடும் உரிமையும் பெருமையும் பெறுகின்றார் (உரோமை 8:14-17).

*கடவுளின் ஆவியால் யார் இயக்கப் - படுகிறார்களோ, அவர்களே கடவுளின் மக்கள். கடவுளின் ஆவியானவர் ஒருவருடைய உள்ளத்தில் இருந்து பயத்தை நீக்குகின்றார். பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை - யாக்குகின்றார். சாதாரண சிருஷ்டியாகிய மனிதனை கடவுளுடைய பிள்ளைகளாக்குகிறார்.*

"பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக்கொண்டீர்கள். அந்த ஆவியினால் நாம் கடவுளை "அப்பா" என்று அழைக்கும்பொழுது அதே ஆவியானவர்தானே சாட்சியாக இருக்கிறார். இந்த ஆவியானவர்தாம் நம்மை இயேசுக் கிறிஸ்துவுக்கு சொந்தக்காரர்களாக்குகிறார். அவருடைய சகோதர சகோதரிகளாக, உடன் பிறப்புகளாக மாற்றுகிறார்.

மனிதன் வெறும் சிருஷ்டி. அவன் தூசுக்கும் துரும்புக்கும் சமம். இவன் எப்படி கடவுளை "அப்பா" என்று கூப்பிட முடியும்? சாதாரணமாக "அப்பா" என்று கடவுளை நாம் கூப்பிடுகிறபொழுது நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கிற இந்த மாபெரும் பாக்கியத்தை நாம் புரிந்துகொள்வதில்லை. அதை வேடிக்கையாகவே நாம் நினைக்கின்றோம்.

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்குக்கீழ் நூற்றுக்கணக்கானோர் அவருடைய தொழிற்சாலையிலே, வயல்களிலே வேலை செய்தார்கள். எடுபிடி வேலைகளைச் செய்யும் ஒரு பியூன் வீட்டில் இருந்தான். ஒரு நாள் அந்தப் பெரியவர் மத்தியான உணவு அருந்தும்பொழுது இவனையும் அழைத்து பக்கத்தில் பந்தியில் அமர அழைத்தார்.

அந்தப் பியூன் மனதில் ஏற்பட்ட உணர்வுகள் எப்படி இருந்திருக்கும்? அந்த வேலைக்காரனோ மிகுந்த கூச்சப்பட்டு "எஜமான்! வேண்டாங்க நான் பிறகு தனியாகச் சாப்பிடுறேங்க" என்று சொல்லி எஜமான் பக்கத்தில் அமர மறுத்தான்.

பெரியவர்களை நாம் சந்திக்கிறபொழுது இப்பேர்ப்பட்ட உணர்வுகள் இயல்பாகவே நமக்கு வருகின்றன. "இவ்வளவு பெரியவருக்கு முன் நான் எம்மாத்திரம்!" என்று நாம் உணரும் பொழுது பெரியவர்களுக்கு முன்பு அவர்களுக்கு நாம் நிகரல்ல என்பதை உணர்த்துகிறோம்.

சாதாரண மனிதனுக்கு முன்னாலேயே இப்படியென்றால் படைத்தவராகிய கடவுளுக்கு முன்பு சாதாரண படைப்புகளாகிய நாம் எம்மாத்திரம்? இங்கேதான் இந்தப் பெரிய ஒரு மறைபொருள் வெளிப்படுத்தப்படுகிறது.

கிறிஸ்துவின் ஆவி கடவுளை, "அப்பா" என்றழைக்க நம்மைத் தூண்டுகிறார் என்றால் நம்மைப் புதுப்படைப்பாக மாற்றத் தூண்டுகிறார்! சாதாரண படைப்பு என்ற அந்தஸ்திலிருந்து கடவுளுடைய அந்தஸ்துக்கு உயர்த்துகிறார்! அவரோடு பந்தியில் அமரச் செய்கின்றார்! இது ஒரு மகத்தான மறைபொருள்! இதன் உள் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதும் எளிதல்ல!

கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்கள் ஆகின்றோம் என்று சொன்னால் நாம் கடவுளுக்கு முன்னால் கிறிஸ்துவைப்போல் சமமாகக் கருதப்படுகிறோம். "நாம் பிள்ளைகளாயின் உரிமையாளர்களுமாய் இருக்கிறோம். ஆம் கடவுளின் செல்வத்திற்கு உரிமையாளர்கள்: கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்கள் (உரோமை. 8:17).

## தண்டனைத் தீர்ப்பு இல்லை

கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவருடைய சொத்துக்கு ஒருவர் உரிமையாளர் என்றால். கிறிஸ்துதானே அவர் பக்கமாய் நின்று பரம தகப்பனுக்கு முன்னால் அவருக்காகப் பரிந்து பேசுகிறார்.

இதற்குமேல் நாம் என்ன சொல்வது? கடவுளை நாம் சார்ந்திருக்கும்பொழுது நம்மை எதிர்த்து நிற்பவர் யார்? எவ்வளவுதான் ஒருவர் பாவியாயிருந்தாலும், தாழ்ந்தவராயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் வாழும்பொழுது கிறிஸ்துதானே அவருக்கு வக்கீலாக பரம தந்தையிடம் வாதாடுகின்றார். நம்மை எதிர்த்து நம்மைப் பற்றி குறை சொல்வதற்கு எத்தனையோ பேர் இருக்கலாம். கடவுளுக்கு முன்னால்கூட சாத்தான் நம்மைப்பற்றி பல குற்றச்சாட்டுகள் கொண்டு வரலாம். ஆனால். இத்தனை குற்றச் - சாட்டுகளையும் எதிர்த்து, நமக்காக இயேசு பரம தகப்பனிடத்திலே சிபாரிசு செய்கிறார்.

"கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுக்கு எதிராய் எவன் குற்றம் சாட்டக்கூடும்? அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கடவுளே சொல்லும் போது, தண்டனைத் தீர்ப்புக் கூறுபவர் யார்? கிறிஸ்து இயேசு நமக்காக உயிர் நீத்தார்: ஏன் உயிர்ப்பிக்கவும் பெற்றார். இந்தக் கிறிஸ்துவே கடவுளின் வலப்பக்கத்தில் இருந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார்" ஒரு நாள் பாவத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைப் பரிசேயர்கள் இயேசுவுக்கு முன்னால் கொண்டு நிறுத்தினார்கள் (அரு 8:1-11). இவள் விபச்சாரத்தில் பிடிபட்டவள் என்றும் சட்டத்தின்படி இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டுமென்றும் அந்தப் 'பெரியவர்கள்' அந்தப் பாவிப் பெண்ணைப் பற்றி குற்றம் சாட்டினார்கள்.

இயேசுவோ பேசாதிருந்தார். ஆனால் இயேசு சிறிது நேரத்திற்குப் பிறகு "உங்களில் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல் எறியட்டும்" என்றார். இயேசு திரும்பவும் பேசாமலிருந்தார். குற்றம் சாட்டியவர்கள் அந்த இடத்தைவிட்டு நழுவிவிட்டார்கள்.

அந்தப் பெண் மட்டும் அங்கே நிற்பதைப் பார்த்து "பெண்ணே எங்கே அவர்கள்? உனக்கு யாரும் தீர்ப்பிடவில்லையா?" என்று கேட்டார் "ஒருவரும் தீர்ப்பிடவில்லை" என்று சொன்னாள். இயேசு, "நானும் உன்னைத் தீர்ப்பிடேன். இனிமேல் பாவம் செய்யாதே. சமாதானமாய் போ" என்று சொல்லி அனுப்பினார், அவளை ஆறுதல்படுத்தினார்.

இதில் நமக்கு ஒரு பெரிய உண்மை வெளியாகிறது. இயேசு மிகுந்த இரக்கம் உள்ளவர். எத்தனையோ பேர் அந்தப் பெண்மணிக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்த போதும் அந்தப் பாவிப் பெண்ணின் பக்கமாகப் பரிந்து பேசினார். குற்றம் சாட்டியவர்கள் எல்லோரும் தோற்கடிக்கப் - பட்டார்கள். கடவுளுக்கு முன் அந்தப் பெண்மணி ஏற்றுக்கொள்ளப்படுகிறாள். அவளுடைய குறைகள் மன்னிக்கப்படுகின்றன.

இயேசுவே அவள் சார்பில் நின்று விரோதிகளை முறியடித்து விடுகின்றார். "கிறிஸ்துவுக்குள்" என்று சொன்னால் இதுதான் அர்த்தம்! எத்தனை பாவியாக இருந்தாலும் அவர்களுக்காக கிறிஸ்து கடவுளிடம் பரிந்து பேசி இரக்கத்தைக் காண்பிக்கின்றார்.

**ஆகவே, கிறிஸ்துவுக்குள் ஒருவர் வாழ்கின்றார் என்றால், அவர் கடவுளின் இரக்கத்தைப் பெற்றவர், மீட்பைப் பெற்றவர். கடவுளின் இரக்கத்தையும், மீட்பையும் பெற்றவர் அதே இரக்கத்தையும் மீட்பையும் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.**

இயேசுக் கிறிஸ்துவின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்ற சமாரியப் பெண் அந்த இரக்கத்தையும் மீட்பையும் தனக்கென்றே வைத்துக்கொள்ளவில்லை. உடனே ஊருக்குள் ஓடிப்போய், "நான் செய்ததெல்லாம் ஒருவர் எனக்குச் சொன்னார். அவரை வந்து பாருங்கள்" (அரு 4:29) என்று அழைத்தாள்.

இன்று கிறிஸ்துவுக்குள் வாழ்கிற நாம் முக்கியமான சில காரியங்களை நம் மனதில் கொள்ள வேண்டும். கடவுளின் இரக்கத்தையும் மீட்பையும் பெற்றவர்கள் அந்த இரக்கத்தையும் மீட்பையும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

கடவுளின் மன்னிப்பையும் அவர் அருளையும் பெற்றவர்கள் அதே மன்னிப்பையும் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இயேசுவோடு ஒரே பந்தியில் அமர்கின்றவர்கள். ஒவ்வொருவரையும் மனிதராக மதிக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாக அவர்களுக்கு நாம் அன்பும் மதிப்பும் கொடுக்க வேண்டும்.

நம் மத்தியில் இருக்கும் ஜாதி வெறி, வரதட்சணைக் கொடுமை துவேஷம், பெரியவன் -சிறியவன் என்ற வாக்குவாதம், இவைகளெல்லாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர் -களுக்குப் புறம்பானது.

**"ஆண்டவருக்குள் இருப்பவர்கள் ஒற்று - மையாய் இருப்பார்கள். ஆண்டவருக்குள் இருப்பவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பார்கள்"** (பிலி 3:1, 4:4)

கிறிஸ்துவுக்குள்ளே அவர்கள் நிறைவு பெறுவார்கள். இதைப் படித்துத் தியானிக்கின்ற நாம் ஒரு நிமிடம் இறை பிரசன்னத்தை உணர்ந்து உள்ளத்திலே செபிப்போம்!

இயேசுவே! என்னையும் நீர் ஒரு பொருட்டாக நினைத்து உம்மோடு பந்தியமர அழைத்தீரே! என் மீது உம்முடைய இரக்கத்தை காண்பித்ததற்கு கோடான கோடி நன்றி! உமக்குள்ளே நான் தங்க, உமது ஆவியைப் பெற்று மகிழ பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறீர்! நன்றி இயேசுவே!

அப்பா! இராஜா! என் இதயத்தையும் உம்முடைய இதயமாக மாற்றும். மற்றவர்களுக்கு இரக்கம் காட்டச் செய்யும். மன்னிக்கும் மனப்பான்மையைத் தாரும். இந்த நேரத்திலே என் மனதிலுள்ள கசப்புக்களை அப்புறப்படுத்தும்!

எனக்கு விரோதமாய்த் தவறு செய்தவர்களை நான் மன்னிக்கிறேன். நீரே என்னை மன்னியும். நன்றி இயேசுவே! எல்லோரையும் ஆசீர்வதியும்!

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# இனவாதம் மதவாதம் பேசி நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்தாதீர்

## மடுத்திருப்பதியில் கொழும்புப் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை



இந்த நாட்டில் இனவாதம், மதவாதம் பேசி பிரச்சினைகளை இனிமேலும் ஏற்படுத்த வேண்டாம் எனத் தெரிவிக்கும் கொழும்பு பேராயர் அதிவண. மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆயுதக் கலாச்சாரம் முடிந்துவிட்டது எனவும் இனிமேலும் அதனை ஏற்படுத்தக்கூடாது எனவும் கூறினார்.

மடுத்திருத்தலத்தில் கடந்த ஓகஸ்ட் 15ம் திகதி நடைபெற்ற திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்து மறையுரை -யாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பேராயர் தொடர்ந்து பேசுகையில், பல வருடங்களாக மொழிப் பிரச்சினை இருந்தது. அது பின்னர் இனப்பிரச்சனையாகி 30 வருடகால யுத்தம் நடைபெற்றது. அந்த ஆயுதப்போராட்டம் இனிமேலும் இந்த நாட்டில் ஏற்படாது சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டியது அவசியம். மீண்டும் மீண்டும் இனவாதம், மதவாதம் பேசி பிரச்சினைகளை ஏற்படுத்தாதீர்கள். மடுத்திருத்தலத்தில் சகல இன மக்களும் ஒற்றுமையாகக் கூடியிருக் - கிறோம். இங்கே இன, மத பேதமில்லை. அதேபோல் ஏன் வாழக்கூடாது நாம் ஒற்றுமையாக வாழும் செயற்பாடுகள் அரச தலைவர்களின் சமாதான முயற்சிகளுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் துணையாக இருக்க வேண்டும். மடுத் திருவிழாவிற்கு வந்த மக்கள் கூடாரங்களில் தங்கியுள்ளனர். கூடாரங்களில் இருப்பது நிரந்தரமில்லை. கூடாரங்கள் ஒரு தற்காலிகமானதே.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த பலர் கூடாரங்களில் தங்கியுள்ளனர். அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ வேண்டும். அவர்களும் இத்திருவிழாவில் கலந்து கொண்டிருந்தால் இவ்விழா மேலும் சிறப்பாக அமைந்திருக்கும். ஒருவர் பேராசைப்படக்கூடாது நான்தான் பெரியவன் என்று நாம் நினைப்பதால்தான் பேராசை ஏற்படுகிறது. சிலர் தமக்குத்தான் முழு நாடும் என்கிறார்கள். சிலர் ஒரு பிரதேசம் தமக்குரியது என்கிறார்கள். இந்த நாடு சகலருக்கும் உரியது என்று நாம் செயற்பட வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னர் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து பல குழுக்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு நாடு இந்த நிலைமைக்கு வந்தது. எனவே பிரச்சினைகளை உருவாக்காது நாம் வாழ வேண்டும் என்றார்.

## மடுமாதா திருவிழாவை முன்னிட்டு விசேட ரயில் சேவை



மடுமாதா ஆவணித் திருவிழாவை முன்னிட்டு 11.08.2009 முதல் 16.08.2009ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகளை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மடுமாதா உற்சவத்தில் கலந்துகொள்ளும் பயணிகளுக்காகவே இந்த விசேட ரயில் சேவையை ஏற்பாடு செய்திருந்ததாகவும், போக்குவரத்து அமைச்சின் ஆலோசனையின் பேரிலேயே தாம் இந்த ஏற்பாடுகளைச் செய்ததாகவும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், இந்த விசேட ரயில் சேவையானது கொழும்பு கோட்டை, நீர் கொழும்பு, மொரட்டுவ, மாத்தறை, ஆகிய புகையிரத நிலையங்களில் இருந்து மதவாச்சி வரை சேவையில் ஈடுபடுகின்றது. அங்கிருந்து மடுமாதா தேவாலயம் வரை விசேட பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்றார்.

## கொழும்பு புனித லோறன்ஸ் ஆலயத்தின் சில்லாலை கதிரை மாதா திருவிழா

கொழும்புவாழ் சில்லாலை மக்கள் தமது கிராமத்தின் பாதுகாவலியான புனித கதிரை மாதாவின் திருவிழாவை கடந்த ஓகஸ்ட் 15ம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் கொண்டாடினார்கள். இயேசுவின் தாயான பரிசுத்த கன்னிமரியாள் ஆத்தும சரீரத்தோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்வை தாய்த் திருச்சபை உலகம் முழுவதும் கொண்டாடி மகிழும் இந்த நாளில் சில்லாலைக் கிராம மக்களும் 400 ஆண்டுகளுக்கு மேலாக கதிரைக் கொலுவில் வீற்றிருந்து கிராமத்தையும் மக்களையும் பாதுகாத்து வழிநடத்திவரும் பாதுகாவலியான கதிரை மாதா திருவிழாவையும் கொண்டாடினார்கள். கொழும்பில் செறிந்து வாழும் சில்லாலை மக்களால் கதிரை மாதா திருவிழா சில வருடங்களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 15ஆம் திகதி காலை 8.00 மணிக்கு வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது அதைத்தொடர்ந்து பிரியாவிடைசெபமும் திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. திருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் விழாக்குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

## ‘நீயே கூடாரம்’ இறுவட்டு வெளியீட்டு விழா



வத்தளை ஹெந்தளை காணிக்கை மாதா ஆலய பாடகர் குழாமின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான ‘நீயே கூடாரம்’ இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் வத்தளை நாயக்கந்த காணிக்கை மாதா ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் அருட்சகோதரி ஜூடித் மக்கள விளக்கேற்றினார். பங்குத்தந்தை வண. கிரகிரி ஜயானந்த பெர்னாண்டோ, வீரகேசரி வாரவெளியீடுகளின் பிரதம பொறுப்பாசிரியர் வி. தேவராஜ் அருட்திரு. ஜூட் ஸ்ரீயானந்த, அருட்திரு. அல்பிரேட் கிருபானந்தன், மோசஸ் பெர்னாண்டோ, அருட்திரு. கமல்குமார ஜே.ஆர். ஜெமினிசன், பாவதர் மகேந்திரராஜா ஆகியோர் உரையாற்றினர். ‘நீயே கூடாரம்’ இறுவெட்டின் முதற் பிரதியை வண. கிரகிரி ஜயானந்த பெர்னாண்டோ மகேந்திர ராஜாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய இலங்கை யுவதி வாழ்வு குறித்து நீதிமன்றில் அச்சம் தெரிவிப்பு

குடும்பத்தினரின் நம்பிக்கைக்கு மாறாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய இலங்கை யுவதியொருவர் ஐக்கிய அமெரிக்க நீதிமன்றத்தில் தனது வாழ்வு குறித்து அச்சம் தெரிவித்துள்ளாரெனவும் அவர் தற்போது அந்நாட்டு சிறுவர் மற்றும் குடும்ப திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளாரெனவும் அமெரிக்க தொலைக்காட்சி செய்திச் சேவையொன்று தெரிவித்துள்ளது.

ரிவ்கா பாரி (வயது 17) எனும் யுவதியே தனது குடும்பத்தின் நம்பிக்கைக்கு மாறாக அண்மையில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதாகவும் இவ்விடயத்தில் தனது குடும்பத்தாரின் பிரதிபலிப்புக் குறித்து அச்சம் கொண்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

தனது வாழ்வு அச்சுறுத்தலானதாகவும் தான் கொல்லப்படலாமெனவும் அந்த யுவதி அஞ்சுவதாகவும் அவரின் சட்டத்தரணி ரோசா கொண்சாலேஸ் ஒலண்டோ நீதிமன்ற விசாரணைகளின் பின் தெரிவித்தார்.

துரதிஷ்டவசமாக இங்கு இவ்வாறான சம்பவங்கள் தினமும் நிகழ்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஒலண்டோவிலுள்ள குடும்பமொன்றுடன் தங்கியிருந்த இந்த இலங்கை யுவதி கடந்த சில வாரங்களின் முன்னர் பேஸ்புக் எனப்படும் சமூக வலைப்பின்னலினூடாக பிரார்த்தனைக் குழுவொன்றைச் சந்தித்ததன் விளைவாகவே இம்மத மாற்றம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து ஒலண்டோவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உலகளாவிய புரட்சி தேவாலயத்தின் ஸ்தாபகரான பேவேர்லி லோரன்ஸ் மற்றும் அவர் கணவருடன் தங்கியிருந்த யுவதி தற்போது ஐக்கிய அமெரிக்க சிறுவர் மற்றும் குடும்ப திணைக்களத்தின் பாதுகாப்பிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த யுவதி தனது வீட்டிற்குவர அனுமதி கேட்டபோது அவரை ஓரளவே அறிந்திருந்த போதிலும் அனுமதி வழங்கியதாக தெரிவித்த லோரன்ஸ், தனது தந்தை அந்நாட்டின் குடியுரிமையற்ற தன்னை இலங்கை அனுப்பிவிடுவாரென யுவதி அச்சம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதனையடுத்தே துஷ்பிரயோகத்திற்குகெதிரான நடவடிக்கைகளுக்கான அவசர இலக்கம் மற்றும் சட்டத்தரணிகளுடன் தொடர்புகொண்டு என்ன செய்யலாமென்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

## மெதடிஸ்த சபையின் 46 ஆவது வருடாந்த திருப்பேரவைக் கூட்டம்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 46வது வருடாந்த திருப்பேரவைக் கூட்டம் கடந்த ஓகஸ்ட் மாதம் 19ம் திகதி தொடக்கம் 24ம் திகதிவரை உள்ள ஆறு தினங்களில் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கமைய இம்மாதம் 19ஆம் 20ஆம் திகதிகளில் குருமார் அவையும் 21, 22ஆம் 23ஆம் 24ஆம் திகதிகளில் பொது அவையும் இடம்பெற்றதாக அருட்திரு எஸ். டீ. தயாசீலன் தெரிவித்தார்.

தற்போது திருப்பேரவையின் தலைவராக உள்ள அருட்திரு. எபநேசர் யோசப்பின் பதவிக் காலம் இவ்வாண்டுடன் (2009) நிறைவு பெறவுள்ளதால் புதிய தலைவர் தெரிவு இத்திருப்பேரவையில் சிறப்பம்சமாக இடம்பெற்றது.

நாட்டின் நாலாபுறமும் இருந்து மெதடிஸ்த குருமார்கள், திருச்சபை மக்கள் ஒன்றுகூடிய இந்நிகழ்வில் பிரிட்டன், ஜேர்மன், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் விசேட அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டுக்கான திருப்பேரவை அமர்வில் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் நிலைகுறித்து கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த பரிசுத்த மடு அன்னையின் புகைப்படங்கள் பல அச்சிடப்பட்டு மடுத் திருப்பதியில் வைத்து டாக்டர் ஜயலத் ஜயவர்தனாவினால் மடுப் பரிபாலகர் அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அவர்களுக்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

## உலகத்திருச்சபை செய்திகள்

# கலிலேயோவுக்கு எதிராக நடத்தப்பட்ட வழக்கு விசாரணைகள் தொடர்புடைய ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன!



இத்தாலிய வானியல் வல்லுனர் கலிலேயோ கலிலெய்க்கு எதிராக திருச்சபையில் நடத்தப்பட்ட வழக்கு விசாரனைகளோடு தொடர்புடைய ஆவணக் குறிப்புகள் அடங்கிய ஆவணக் காப்பகத்தின் தலைவர் ஆயர் செர்ஜோ பகானோ, இவ்விசாரணைகள் தொடர்புடைய அனைத்து ஆவணங்களின் சுருக்கமும் அது குறித்த விளக்கங்களும் அதற்குப்பின் எழுந்த விவாதங்களும் சுருக்கமும் என அனைத்தும் புதிய புத்தகத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வத்திக்கான் இரகசியக் காப்பகத்தில் இதுநாள்வரை போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த கலிலேயோவின் விசாரணை குறித்தவைகள் மக்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் திருப்பீடம் 332 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை வெளியிட்டுள்ளது.


## அடுத்த ஆண்டு உலக அமைதி நாள் மையக் கருத்து

அடுத்த ஆண்டிற்கான உலக அமைதி நாள் தினத்திற்கு திருத்தந்தை அவர்கள் மையக்கருத்தை வழங்கி உள்ளார்

"அமைதியைக் காக்க வேண்டுமென்றால் இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்" என்று திருத்தந்தை கூறினார். 2010 ஆம் ஆண்டில் உலக அமைதி தினம் கொண்டாடப்படும். இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கும் உலக அமைதிக்கும் உள்ள தொடர்பைக் காணுமாறு திருத்தந்தை வலியுறுத்துகிறார். சுற்றுப்புறத்தைப் பாதிக்கும் செயல்களும் இயற்கையைப் பயன்படுத்தும் முறையும் வெப்ப மாற்றமும் மக்கள் தொகையும் தொடர்புடையவை எனவும் திருத்தந்தை கருத்துத் தெரிவித்துள்ளார்.

சுற்றுப்புறத்தைப் பாதுகாப்பது அவசரத் தேவை. இதுவே அமைதிக்கு வழிவகுக்கும் என திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

## மிகப் பழமையான திருவிவிலியப் பிரதி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது



Condex Sinaiticus என்ற உலகில் இருக்கும் மிகப்பழமையான திருவிவிலியப் பிரதியின் 800 பக்கங்களும் www. Codexsinaiticus. org என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

பிரிட்டன் நூலகம், லெய்ப்பசிக் பல்கலைக்கழக நூலகம், எகிப்தின் சீனாய் மலையிலுள்ள புனித கத்ரீன் துறவுமடம், செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் ரஷ்ய தேசிய நூலகம் ஆகியவை சேர்ந்து இந்தப் பணியைச் செய்துள்ளன.

எழுதுவதற்காகப் பதப்படுத்தப்பட்ட ஆட்டுத்தோலில் கிரேக்கத்தில் எழுதப்பட்ட நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தப் புத்தகம், பல நூற்றாண்டுகளாகத் திருத்தப்பட்டது. பெரிய கான்ஸ்ட்டடைன் பேரரசன் காலத்தில் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இந்தப் புத்தகம் 1460க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டிருந்தது எனினும் தற்சமயம் 800க்கும் மேற்பட்ட பக்கங்களே இதில் உள்ளன. ஏறத்தாழ 1600 ஆண்டு பழமை கொண்ட இந்த விவிலியப் பிரதியை பார்ப்பதற்குப் பலர் விரும்பியதால் தற்சமயம் இணையத் தளத்தில் போடப்பட்டுள்ளதாக codx sinaiticus நிர்வாகி ஹீவான் கார்செஸ் தெரிவித்தார்.

## இலங்கை வடக்கு முகாம்களிலுள்ள சிறார்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைவு ஐ.நா. கவலை

இலங்கையின் வடக்கே மோதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களிலுள்ள சிறார்கள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைவு அதிகமாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இராதிகா குமாரசாமி கவலை தெரிவித்துள்ளார். முகாம்களிலுள்ள ஏறத்தாழ 5000 சிறார்கள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள ஒரு தொண்டு நிறுவனமும் கூறியுள்ளது.

இதற்கிடையே, இலங்கையிலுள்ள ஏறத்தாழ மூன்று இலட்சம் அகதிகளுள் குறைந்தது 90,000 பேர் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சியான தேசிய ஐக்கிய கட்சி அறிவித்ததாக ஆசிய நிறுவனம் கூறியது.

## எட்டுக் கிறிஸ்தவர்கள் கொலை தொடர்பில் பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

நூற்றுக்கணக்கான பாகிஸ்தானிய கிறிஸ்தவர்கள் அண்மையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

முஸ்லிம் கும்பல் ஒன்றினால் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எட்டுப் பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமையையிட்டே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் -பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களினால் சிலர் அரச பேரூந்துகளின் ஜன்னல் கண்ணாடிகளையும் நொறுக்கினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வாகனங்கள்மீது ஏறி கண்ணாடிகளை நொறுக்குவதை தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

பாகிஸ்தான் கிறிஸ்தவ தொழிற்கட்சியின் அமைப்புக் குழுத் தலைவரான கியாஸ் கிந்து கூறுகையில், சில இளைஞர்கள் நான்கு பஸ்களைத் தாக்கினார்கள். ஆனால் பயணிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றார்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டதாக பொலிஸ் அதிகாரியான அயாஸ் சாலிம் குறிப்பிட்டார்.

## உலகளாவிய வெப்பநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் ஏழைகளுக்கு காரித்தாஸ் உதவி

தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு போதுமான வளங்கள் இல்லாத ஏழைகள், உலகளாவிய வெப்பநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்று சர்வதேச காரித்தாஸ் நிறுவனப் பொதுச் செயலர் லெஸ்லெ ஆன் நைட் கூறியுள்ளார். காரித்தாஸ் போன்ற மனிதாபிமான நிறுவனங்கள் ஏழைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளன என்று அவர் மேலும் கூறினார். புயலால் அடிக்கடி பாதிக்கப்படும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் காரித்தாஸ் அமைக்கும் குடியிருப்புகள் பேரிடர்களின்போது நல்ல பாதுகாப்பைத் தருவதையும் ஆன் நைட் சுட்டிக் காட்டினார்.

## போரில் கணவன்களை இழந்துள்ள கைம்பெண்களுக்கு கொழும்பு உயர்மறைமாவட்டம் உதவி

இலங்கை அரசுக்கும் தமிழ் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் சுமார் நாற்பதாயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ள வேளை, ஏழ்மை மற்றும் தனிமையால் துன்புறும் இப்பெண்களுக்கு உதவுவதற்கு கொழும்பு உயர் மறைமாவட்ட குடும்ப மேய்ப்புப்பணி ஆணைய இயக்குனர் அருட்திரு ஜீலியன் பாட்ரிக் பெரேரா புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளார்.

கைம்பெண்களுக்கான தினம் என்ற ஒரு நாளை அறிவித்துள்ள அக்குரு, எல்லா வயதுக் கைம்பெண்களையும் மேய்ப்புப் பணி மையத்திற்கு வரவழைத்து நிகழ்வுகளை முன்னெடுக்கவுள்ளதாகக் கூறினார்.

## "பாலர் தொழில் முறையை நிறுத்த, அதிக அளவில் சமுதாய ஈடுபாடு அவசியம்" – இந்தியத் திருச்சபை


கடந்த பத்து ஆண்டுகளில் குழந்தைத் தொழில் முறையை ஒழிப்பதற்கு இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும் தனிப்பட்ட ஆள் மற்றும் தனிப்பட்ட குடும்பத்தின் முயற்சியின்றி இதனை ஒழிக்க முடியாது என்று இந்திய ஆயர் பேரவையின் தொழில் ஆணையச் செயலர் அருட்திரு ஜோஸ் வட்டக்குழி கூறியுள்ளார். உலகில் 16 கோடியே 50 இலட்சம் குழந்தைத் தொழிலாளர் உள்ளனர். இவர்களில் பெரும்பகுதி இந்தியாவில் இருக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. சில தன்னார்வக் குழுக்களின் கணிப்புப்படி தற்சமயம் இந்தியாவில் 2 கோடிக்கு மேற்பட்ட குழந்தைத் தொழிலாளர் இருக்கின்றனர்.

## ஈழத் தமிழருக்கு காரித்தாஸ் வழி திருத்தந்தையின் உதவி

இலங்கையில் இடம்பெயர்ந்து தவிக்கும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு உதவ காரித்தாஸ் தொண்டு நிறுவன உதவியை நாடுகிறது இலங்கை அரசு. தற்போது கத்தோலிக்க தொண்டு நிறுவனங்கள் இலங்கை அரசின் வன்முறையால் புலம்பெயர்ந்த 83,000 மக்களுக்கு உதவி வருகிறது. மனிதாபிமான செயல்களுக்காக திருந்தந்தை சேமித்துள்ள தொகையிலிருந்து உதவி வழங்கப்படும் எனத் தெரிகிறது.

## நீங்காத நினைவுகள்

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி



**சோமஸ்கந்தன்**
**அன்ரன் சோமராஜா**
(ரெலிகொம் உத்தியோகஸ்தர்)
*(சின்னப்புதுக்குளம், வவுனியா)*

**மலர்வு: 29-01-1954**
**உதிர்வு: 12-09-2006**

அன்பும் பாசமும் கொண்ட அப்பா, மூன்றாண்டு என்ன எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உங்களை மறக்க முடியுமா? உங்கள் அன்பை பாசத்தை எப்படி மறக்கமுடியும்? என்றும் நினைவுகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

*- அன்பு மனைவி, மகன், தாய் சகோதரர், உற்றார், உறவினர்கள்*

# கலை இலக்கியச் சாளரம்

## பேனா முனை



வெறுத் தாளில் என்
பேனா முனையின் ஓட்டத்தினால்
சுற்றும் பூமியில் சூழலும் - என்
மனச்சுமையை சற்றேனும் சரிசெய்வேன்.
ஓ பேனாவே,
எண்ணத்தை நொடிப் பொழுதில் வடிக்க
உன்னால் மட்டும் முடிகிறது.
உள்ளத்து உணர்வுகளையும்
உணர்வின் நினைவுகளையும்
எடுத்தியம்புவதற்கு என் மனம்
உன்னையே தேடுகிறது.
கள்ளமில்லா என் மனதில்
வெள்ளை நிலா ஒளியில்
விருட்சமாக வடிவெடுக்கும்
சொல்லா முடியாத உணர்வுகளை
ஓ பேனாவே நீதானே சுமக்கின்றாய்.

*எ. முகுந்தன், நடுக்குடா, பேசாலை.*

## பவுலாகிய - சவுல்

உண்மைகளை உரைப்பதுதான் ஊடகம்
தின்மைகளால் வாடுதெங்கள் தாயகம்
நன்மை தரும் யேசுமறை போதகம் - இங்கு
பரவிவிட்டால் ஒழிந்துபோகும் பாதகம்.

சவுலென்று யூதனையே மாற்றினார்
பவுலென்று பூவுலகோர் போற்றினார்
இறைமகனாம் இயேசு புகழ் ஏற்றினார்
இந்த உண்மையினை உலகெங்கும் சாற்றினார்

எதிர்த்தவரைத் தூதுரைக்கச் செய்தவர்
தன்னைத் துதிப்பவர்க்குப் புதுவாழ்வு தந்தவர்
அதிகாரம் ஆணவங்கள் போக்கினார் - இறை
தூதராகப் பவுலடியை ஆக்கினார்.

சத்தியத்தின் வழிமுறைகள் விளக்கவே - பவுல்
எத்திசையும் சென்று பணியாற்றவே
நித்தியத்தின் தேவனருள் கூறவே - அவர்
பக்தியுடன் பயணம் செய்தார் பாரிலே

துச்சமெனத் தன்னுயிரை மதித்துமே - இறை
பட்சமுடன் தான் நடந்தார் துதித்துமே
அச்சமது தானகற்றித் துணிவுடன் - பவுல்
கச்சிதமாய் எடுத்துரைத்தார் பணிவுடன்.

சவுலே என்று சர்வபரன் அழைக்கவே - அவர்
பவுலேயாகிப் போனார் மறை தழைக்கவே
உன்னதரின் உயர் பணிக்காய் உழைக்கவே
அன்னவரை தேர்ந்தார் பாவி பிழைக்கவே

*- ஏ. டி. தேவதாசன் அல்மேடா,முருங்கன்.*

## எங்கே இருக்கின்றாய்?

எங்கே இருக்கின்றாய் என்னருமைத் தோழி!
முகம் தெரியா கரிய இருள்
திசை தெரியா பெரும் காடு
உன்னை எங்கே என்று நான் தேடுவேன்?
எங்கே இருக்கின்றாய்
என்னருமைத் தோழி!

போராட்டம் என்பது
இழப்புக்கள் இல்லாமல் இல்லை.
போராடும் இனம்
இழப்புக்களைச் சந்தித்தே ஆக வேண்டும்
தெரிந்துதான் இருந்தது நன்றாகவே
இருந்தும் இப்படியா...?

சுனாமி உயிரைப் பறித்தது
உறவுகளை பிரித்தது
உடமைகளை அழித்தது
துச்சாதனனாய் துகிலுரிந்து
எல்லாமே நோயில் முடிந்துபோனது.
மாதங்களாய்.. வருடங்களாய் ....
வதைபடவேண்டி இருக்கவில்லை.
உறுப்புக்களை எடுத்துக்கொண்டு
உயிரை விட்டுவைக்கவில்லையே சுனாமி.

இது என்ன மனிதப் பேரவலம்?
ஒரு பக்கம் இருந்து மட்டும்
தாக்குதல் வந்தால் 'அவலம்'
இரு பக்கமும் இருந்து வந்தால்
'கேவலம்' அல்லவா?
உயிர் மட்டுமா கலங்குகிறது!
ஆன்மாவும் கலங்குகின்றதே
என் துயரத்தில் பங்கெடுக்கின்ற நீ
எங்கே இருக்கின்றாய் என்னருமைத் தோழி!



எல்லாம் இழந்தோம்
இறை நம்பிக்கை தவிர
அந்த நம்பிக்கையில்,
உன்னை உயிரோடு
எல்லா உறுப்புக்களோடும்
உன்னை உன் துணையோடும்
சந்திப்பேன் விரைவில்
எனக் காத்திருக்கின்றேன்.
எப்போ வருவாய்
என்னருமைத் தோழி!

*ஜெயபாலாஜி,*
*முருங்கன்.*

# சிறுகதை

# மீண்டும் எழுவோம்

**அ. ஜஸ்மின் ஷரோன்,**
**ஆவணம், நானாட்டான்**



"சும்மா இருங்கோ! என்னால் முடியாது. நான் அப்படி எல்லாம் செய்ய மாட்டேன்! அது ஒரு காலம்! அது மீண்டும் வராது. என்னைத் தனியா விடுங்கோ!" இது ஆனந்தியின் குரல். ஆனந்திக்கும் அவளுடைய தாயாருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலில் ஆனந்தியின் குரல் மட்டுமே அவள் நண்பி கவிதாவுக்குத் தெளிவாகக் கேட்டது. ஆனந்தியின் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்த கவிதாவிற்கு என்னவென்று புரியவில்லை. "ஏன் இவள் இப்படிச் சொல்கிறா? எப்பவும் சந்தோஷமாக, நகைச்சுவையோடு கதைக்கிறவ இப்படி விரக்தியாகப் பேசுகிறாளே? எப்பவும் தனிமையை நாடுகின்றாளே? ஏன்? எதற்காக? இப்படிப் பல கேள்விகளை மனதிற்குள் கேட்டவள், "சரி இன்று வேண்டாம். நாளை பார்ப்போம்" என எண்ணியவளாய் அங்கிருந்து புறப்பட்டுச் செல்கின்றாள் கவிதா.

ஆனந்தி ஒரு கல்லூரி மாணவி. அவள் மிகவும் கெட்டிக்காரி. எந்த வேலையானாலும் திறம்படசெய்யும் ஆற்றல் கொண்டவள். எந்த வேளையிலும் எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தக் கூடியவள். எப்போதும் முகமலர்வோடு எல்லோருடனும் சமமாகப் பழகும் ஆற்றல் கொண்டவள். இவ்வாறான குண இயல்புகளைக் கொண்ட ஆனந்தி தற்போது திடீரென ஒரு மாதகாலமாக தானுண்டு தன் வேலையுண்டு என்றவாறு இருக்கிறாள். எவரோடும் சரியாகக் கதைப்பதில்லை. எப்போதும் தனிமையை நாடுகிறாள். ஏன்? இப்படிச் செயல்படுகிறாள் எனச் சிந்தித்த கவிதாவிற்கு அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தது. "அவ என்ன சொன்னாலும் பிரச்சினையில்லை. அவவுக்கு என்ன பிரச்சினை என நான் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்" என உறுதி பூண்டவளாய் ஆனந்தியின் வீடு நோக்கிப் புறப்பட்டாள் கவிதா.

கவிதா ஆனந்தியின் வீட்டை அடைந்தாள். ஆனந்தி கன்னத்தில் கைபதித்து எங்கோ வெறித்தபடி பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டவள் சற்றுத் தயங்கினாள். "வீட்டில் ஏதும் பிரச்சினையோ!" எனச் சிந்தித்துக்கொண்டு நின்றவளைக் கண்ட ஆனந்தி, "வா... வா! கவி! ஏன் அங்கே நின்றுவிட்டாய் உள்ளே வா" என அவளை அழைத்து அமர வைத்தாள். அவள் அமர்ந்ததும் குடிப்பதற்கு ஏதாவது எடுத்து வருகிறேன் என்று கூறிச் சென்றவளின் கையைப் பிடித்து, "எனக்கு எதுவும் வேண்டாம். நான் உன்னோடு சிறிது நேரம் கதைத்துவிட்டுச் செல்லத்தான் வந்தேன். வா அந்த மரத்தடியில் இருந்து கதைப்போம்" எனக் கூறி இருவரும் மரத்தடிக்குச் சென்றார்கள்.

அப்போது கவிதா ஆனந்தியிடம், "ஏய்! ஆனந்தி, ஏன்டி நீ தனிமையா இருக்கிறா? கவலையோடே இருக்கிறா? கதைக்கிறா இல்லை, சிரிக்கிறா இல்லை. என்ன நடந்ததென்று எனக்கு சொல்லு." ஆனந்தியின் கண்ணிலிருந்து மளமளவென கண்ணீர் பெருக்கெடுத்தது. விம்மி விம்மி அழுதாள். இதைப் பார்த்த கவிதாவின் மனம் உருகிவிட்டது. அவளைத் தேற்ற முயன்றாள், முடியவில்லை. அவளை அரவணைத்தாள். அவளோ கட்டுப்பாடின்றி பெரிய சத்தமாக அழுதாள்.

"ஐயோ? கவி என்ர வாழ்க்கையே மண்ணாப் போச்சடி. நான் இனி வாழமுடியாதடி. எனக்கு வாழவே பிடிக்கலடி. எங்கேயாவது போய் சாகப்போறண்டி. அப்பதான் எனக்கு நிம்மதி" என ஆனந்தி கவிதாவை கட்டியணைத்தபடி அழுதாள்.

அவளின் வார்த்தையின் அர்த்தத்தை கவிதாவால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. "ஏன் இவ சாகப் போறதாச் சொல்றா. அப்படி என்னதான் நடந்திருக்கும்?" என நினைத்தவளுக்கு அழுகை வந்துவிட்டது. இருவரும் சேர்ந்தே சிறிது நேரம் அழுதனர். சிறிது நேரத்தின் பின் கவிதா ஆனந்தியின், கையைப் பிடித்தபடி, "என்னடி பிரச்சினை சொல் எனக் கேட்டதும், "எப்படிக் கவி அதைச் சொல்வேன் ... ?" என்று விரக்தியுடன் மெதுவாக தனது கதையை ஆரம்பித்தாள்.

"கவி நாம் இரண்டு மாதத்திற்கு முன் கண்டிக்கு சுற்றுலா சென்றோம் அல்லவா? அங்கே மலைகளில் ஏறி இறங்கி பல விளையாட்டுகளில் ஈடுபட்டு குதூகலமாக இருந்து வேளை நான் மலையில் இருந்த இறங்கிகொண்டிருக்கும்போது தவறி கீழே விழுந்துவிட்டேன் அல்லவா! அப்போது எல்லோரும் ஓடிவந்து தூக்கிவிட்டு, அடிபட்ட, காயப்பட்ட இடங்களுக்கு மருந்து தடவிவிட்டார்கள் அல்லவா?"

"ஆம் ஆனந்தி, வைத்தியசாலைக்குப் போறேன் என்று கூறினாயே போனியா?" என்று கவிதா கேட்டாள். "ஆம் கவி, ஒரே தலையிடி. வயிற்று நோவுமாக இருந்ததால் வைத்தியசாலைக்குப் போனேன். வைத்தியர் நடந்தவற்றைக் கேட்டுவிட்டு வயிற்றுப்பகுதியைப் படம் பிடித்துப் பார்க்க வேண்டும் எனக் கூறினார். சரி என்று படம் பிடித்தோம். ஆனால் அதிர்ச்சியான விடயத்தை வைத்தியர் கூறினார். அதுதான் என்னால் தாங்க முடியவில்லை கவி. நான் தவறி வயிறு அடிப்படத்தானே விழுந்தேன். வயிற்றுப்பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுவிட்டதாம். முக்கிய பகுதி மிகவும் தாக்கப்பட்டதால் கர்ப்பப்பையை உடனடியாக எடுக்க வேண்டும் என வைத்தியர் கூறிவிட்டார். என்ன செய்வதென்று தெரியாமல் நானும் அம்மாவும் அழுதோம். அப்படி செய்யாவிட்டால் பெரிய ஆபத்து நேரிடும் என வைத்தியர் கூறியதால் சத்திரசிகிச்சை செய்து அதை எடுத்துவிட்டார்கள்" என்று சொல்லி அழுதாள் ஆனந்தி.

"இப்படியான சூழலில் எப்படிக் கவி நான் மகிழ்ச்சியாக சந்தோசமாக இருக்கமுடியும்? சொல்லடி?" எனக் கேட்டாள் ஆனந்தி.

"நீ மகிழ்ச்சியாக இருக்க முடியும். பழைய நிலைக்கு உன்னைக் கொண்டுவர என்னால் முடியும். என்னுடன் வா" என ஆனந்தியை அழைத்துக்கொண்டு சென்றாள் கவிதா.

"கவி என்னை எங்கு கூட்டிக்கொண்டு போகிறாய்?" எனக் கேட்டாள் ஆனந்தி. "எனது அக்காவின் நண்பி வனிதா உளநல சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டு மனமுடைந்து போய் வாழ்வை அழித்துக்கொள்ள நினைப்போரை நல்லமுறையில் குணப்படுத்தி வருகின்றாள். வா நான் அங்குதான் உன்னைக் கூட்டிச்செல்கிறேன். பயப்படாதே. நீ நல்ல நிலைக்கு வந்துவிடுவாய்." என ஆறுதல் மொழி கூறினாள்.

அவர்கள் இருவரும் வனிதா வீட்டிற்குள் நுளைந்தனர். அவர்களைக் கண்ட வனிதா இருவரையும் வரவேற்று, உபசரித்த பிற்பாடு வந்த விடயத்தை கனிவோடு கேட்டாள். விடயம் அனைத்தையும் ஒன்றும் விடாமல் கூறிமுடித்தாள் ஆனந்தி. அதைக் கேட்டதும் இந்தத் துன்பத்தில் இருந்து மீண்டும் எழும்பலாம். கவலைப்படாதீர் ஆனந்தி. நான் உம்மைக் குணப்படுத்துவேன். வாரும் என்னுடன் என்று கூறி அவளின் கையை பற்றிப்பிடித்து தோளோடு அணைத்தபடி தன் அறைக்குள் கூட்டிச்சென்றார் வனிதா. அங்கு சென்று அவள் மூலமாக அவளின் மனக்காயங்களைச் சொல்ல வைத்து அவளை நன்றாக அழவைத்தார். நீண்ட நேரமாக அழுகை மாத்திரமே ஆனந்தியின் மொழியாக இருந்தது. பின் அணைத்துக்கொண்டு ஆறுதல்படுத்தினார். பின் தன் அறையில் காட்சிப்படுத்தப்பட்ட படங்கள், இயற்கைக் காட்சிகள், சிரித்து மகிழும் பச்சிழங்குழந்தைகள், கடற்கரை, செழிப்பான காட்சிகள் இவ்வாறு கண்ணிற்கும் மனதிற்கும் இனிமையான, குளிர்ச்சியான படங்களை பார்த்து ரசிக்கவைத்தார்.

இவ்வாறு ஒருமாத காலமாக ஆற்றுப்படுத்தல் சிகிச்சையை ஆனந்தி பெற்றாள். தனக்குத்தானே போட்டுகொண்ட தனிமை, விரக்தி, பயம், சஞ்சலம், எதிர்காலம் பற்றிய அச்சம், முடியாது எனும் நிலமை, ஒதுங்கி வாழ்தல் இவ்வாறான பல்வேறுபட்ட சிறையிலிருந்து வெளியே வந்தாள்.

தனக்குத் தானே போட்ட சிறைக்கம்பியில் இருந்து மீண்டும் எழுகின்றாள் ஆனந்தி. மலர்ந்த றோஜாவாய் புத்தம்புது சிவப்பு றோஜாவாய் தனது கல்லூரியை நோக்கி ஓடுகிறாள். "ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே! வாழ்வென்றால் போராடும் போர்க்களமே! என்ற இனிமையான பாடல் வரிகள் அப்போது எதிரொலிக்கின்றன.

# துளிப்பா

**இறைவன்:**
எந்நாளும் எம்மை அன்போடு காத்துவரும்
கருனையின் உள்ளம்.

**சமாதானம்:**
எம்நாட்டில் மலர்ந்திட
தவறாமல் வேண்டும் வரம்

**கல்வி:**
பாசத்தைப் பாலாய் ஊட்டி
பண்பால் பிள்ளைகளை வளர்ப்பவள்.

*விஜயதாஸ் நிதர்சனா,*
*செம்மண்தீவு, முருங்கன்*

**அன்பு :**
கடலினுள் இருக்கும் முத்தைப் போன்று
மிகவும் ஆழமான ஒரு பொக்கிஷம்.

**அம்மா:**
உலகில் உள்ள எல்லா மனிதரின் வாயில்
இருந்தும் புறப்படும் ஒரு உன்னதமான
வார்த்தை.

**நண்பன் :**
என் இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் தோள்
கொடுத்து என்னோடுகூட இருக்க இறைவன்
எனக்களித்த உன்னத கொடை

**நட்பு:**
உலகில் உள்ள எல்லாவகைப் பூக்களிலும்
உன்னதமான விலைமதிப்பற்ற பூ.

**மன்னா :**
பல விடயங்களைச் சுமந்துவந்து மக்கள்
மனதைக் கொள்ளைகொண்ட மன்னார்
மைந்தன்.

*- செ. டென்சியா,*
*8ம் வட்டாரம், பேசாலை*

# உங்கள் சிந்தனைக்கு வாழ்க்கை

☞ தோல்வி இல்லாத வாழ்க்கை ஏது? சோகம் இல்லாத வாழ்க்கையும் ஏது? முழுமையாக முயற்சி செய்யுங்கள். முடிவில் வெற்றி உங்களுக்கே. நடந்தவை இனி நல்லதாய் அமையவே சந்தோசமாய் மன்னாவை வரவேற்றிடுங்கள். மகிழ்வாய் என்றும் வாழ்த்திடுங்கள்.

☞ வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம் - அதில் வாழ்ந்து காட்டுவதே சாதனை. நம்பிக்கை வேண்டும் வாழ்வில். நம் இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில். மனதைத் திடப்படுத்திடுங்கள். வரும் சவால்களை எதிர்கொள்ளுங்கள். தோல்வி இல்லாத வாழ்க்கை இல்லை. இன்றைய தோல்வியே நாளைய வெற்றி.

*யே. நிலோஜினி, பொன்தீவுகண்டல்*

# இவர்களிடமிருந்து இதனைக் கற்றுக்கொள்



- பூவைப் பார்
சிரிப்பை கற்றுக்கொள்.
- நாயைப் பார்
நன்றியை கற்றுக்கொள்.
- காகத்தைப் பார்
ஒற்றுமையைக் கற்றுக்கொள்.
- எறும்பைப் பார்
சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்.
- கொக்கைப் பார்
முயற்சியை கற்றுக்கொள்.

*பீ. நியோமி நவான் - முருங்கன் பிட்டி*

## புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

### கட்டுரைத் தொடர் 7

# கலாத்தியர் திருமுகம்

எழுத்துருவாக்கம் ஆயர் செ. சூசைமாணிக்கம்



### 2. கிறிஸ்து அளிக்கும் விடுதலை

இக்கடிதத்தின் சிறப்புக் கருத்தாக விளங்குவது கிறிஸ்து அளிக்கும் விடுதலை ஆகும். கிறிஸ்தவர்கள் அடிமைகள் அல்லர். உரிமைக் குடிமக்கள் (4:7). ஆதலின் அடிமையின் நுகத்தை அவர்கள் திரும்பவும் ஏற்றுக்கொள்ளக் கூடாது (5:1) என்னும் கருத்தை இக்கடிதம் பெரிதும் வலியுறுத்துகிறது.

### சட்டத்தின் விடுதலை

திருச்சட்டம் என்பது இறைத் திருவுளத்தின் வெளிப்பாடு: மாந்தர்க்கு வாழ்வின் வழியைக் காண்பிப்பதோடு, அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குத் துணை நல்கும் பொருட்டு இறைவன் ஆற்றிய போதனைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் தொகுப்பு. இதற்கு எழுதப்பட்ட சட்டம் எனப் பெயர். இது சிறப்பாக இறைவன் மோசே வழியாக அருளிய சட்டத் தொகுப்பை, பத்துக் கட்டளைகளைக் குறித்தது. இறைவாக்கு நூல்களும் மற்றத் திருஏடுகளும் இதன் விளக்கம் ஆயின.

பாபிலோனுக்கு யூதர்கள் நாடுகடத்தப்பட்ட பின்னர் (கி.மு.586) திருச்சட்டம் அவர்களது மறைவாழ்வின் மையமாக மாறியது. சட்டத்தின் காவலர்களாக விளங்கிய மறைநூலறிஞரும் பரிசேயரும் அதை வழிபாட்டுப் பொருளாக்கினர். அதை மீறிவிடக்கூடாது என்பதற்காக அதைச் சுற்றி வேலி ஒன்று அமைத்தனர். அதாவது, 613 துணைச் சட்டங்களாகத் திருச்சட்டத்தைப் பெருக்கினர். இது வாய்மொழிச் சட்டம், மூதாதையர் மரபு என்றெல்லாம் அழைக்கப்பட்டது. இதன் விளைவாக விருத்தசேதனம், ஓய்வுநாள், தூய்மைச் சடங்குகள் முதலியன வலியுறுத்தப்பட்டன. வெளிச்செயல்கள் முதன்மை பெற்றன. இப்போக்கு நாளடைவில் வெளிவேடத்துக்கு வித்திட்டது (மத் 23:1-36).

திருச்சட்டத்தை அழிப்பதற்கு அன்று நிறைவேற்றுவதற்கே வந்த கிறிஸ்து அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவந்தார். தொடக்கத்தில் இருந்ததுபோல, சட்டத்தை இறைத் திருவுளத்தின் வெளிப்பாடாகக் கண்டார். செயல்களைவிட மனநிலையே முக்கியம் என்று சுட்டிக்காட்டினார். அன்புச் சட்டமே வாழ்வின் அடிப்படை என்று உணர்த்தினார் (மத் 17-48).

இருப்பினும் சட்டத்தில் ஊறிப்போயிருந்த யூதக் கிறிஸ்தவர்கள் வேற்றினக் கிறிஸ்தவர்கள்மீது யூதச் சட்டம் முழுவதையும் - குறைந்தது விருத்தசேதனம் மற்றும் உணவுச் சட்டங்களை – திணிக்க விரும்பினார்கள். சட்டம் இல்லையேல் மாந்தர் மீட்பு அடைய முடியாது என்று வாதாடினார்கள் (திப 15). வேற்றினக் கிறிஸ்தவர்களோடு இதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினார்கள்; கிறிஸ்துமீது கொள்ளும் நம்பிக்கையே மீட்புக்கு ஒரே வழி என்று வலியுறுத்தினார்கள் (திப 6:8- 8:3). பவுல்கூட ஒருகாலத்தில் சட்ட வெறி பிடித்து அலைந்தவர்தாம். அவர் தொடக்கத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியதற்கு இதுவும் ஒரு காரணம் (1:13-14; பிலி 3:5-6). ஆனால் உயித்த கிறிஸ்துவால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற நிலையில் திருச்சட்டத்தின் பயனில்லாமையும், அதே நேரத்தில் கடவுளின் அருளையும் உணர்ந்தவராய் (பிலி 3:9; கலா 2:1-3:14) யூதச் சட்டம் எந்த வடிவத்திலும் எவர்மீதும் திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்த்தார்; விருத்தசேதனம் இன்றி வேற்றினத்தாரை நேரடியாகத் திருச்சபைக்குள் சேர்த்தார்.

பவுலின் இச்செயல்பாட்டிற்கு யூதக் கிறிஸ்தவர் நடுவே பெரும் எதிர்ப்பு கிளம்பியது. எனவே கி. பி. 49இல் எருசலேமில் கூடிய திருச்சங்கம் பவுலின் கொள்கையை விவாதித்து அதைச் சரி என்று ஏற்றுக்கொண்டது (2:1-10; திப 15: 6-29). இருப்பினும் யூதக் கட்சியினர் தொடர்ந்து பவுலுக்குத் தொல்லை கொடுத்து வந்தனர். அவரோ எதற்கும் அஞ்சவில்லை; தம் கொள்கையை விட்டுக்கொடுக்கவும் இல்லை. கிறிஸ்து சட்டத்தினின்று மனிதருக்கு முழு விடுதலை கொடுத்துவிட்டார் என்று தொடர்ந்து போதித்து வந்தார். மேற்பார்வையாளர் போன்று மாந்தரைப் பாதுகாப்பதும் (4:1-7), சிறைக் காவலர் போன்று நெறிப்படுத்துவதும் (3:23), வழித்துணை போன்று கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வதுமே (3:24-25) சட்டத்தின் நோக்கம் எனத் தெளிவுப்படுத்துகிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது உரிமை வாழ்வுக்கான அழைப்பு என வலியுறுத்துகிறார் (4:8-11).

"அவ்வாறே, நாமும் சிறுவர்களாய் இருந்தபோது உலகின் பஞ்சபூதங்களுக்கு அடிமைப்பட்டிருந்தோம். ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" (கலா 4:3:5). ஆம் சட்டத்தின் நிறைவான கிறிஸ்துவே (உரோ 10:4) வந்த பின்னர் சட்டத்திற்கு என்ன வேலை?

எனவேதான் சட்டத்தின் பிடியினின்று கிறிஸ்து விடுதலை அளித்துவிட்டதாகப் பவுல் பறைசாற்றுகிறார். "நீங்கள் இப்போது சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல; மாறாக அருளின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள்" (உரோ 6:14); "இப்பொழுது நம்மை ஒடுக்கிவைத்திருந்த சட்டத்தைப் பொறுத்தமட்டில் நாம் இறந்து விட்டதால், அச்சட்டத்தினின்று விடுதலை பெற்றோம்" (உரோ 7:6)

பவுலின் விடுதலைச் செய்தியை தவறாகப் புரிந்துகொண்ட சிலர் கூறிவந்ததுபோல, உரிமை வாழ்வில் நிலைத்திருக்க எச்சரிக்கை விடுக்கிறார். (5:1-15) "கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்; அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தனம் எனும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்" (5:1) இதன் பொருட்டே கலாத்தியர்மீது எந்தவித யூதச் சட்டமும் எந்த முறையிலும் திணிக்கப்படுவதைப் பவுல் கடுமையாக எதிர்த்தார் (2:1-14)

### புதிய சட்டம் - ஆவியின் சட்டம்

அப்படியானால் கிறிஸ்தவர்கள் கட்டுப்பாடு அற்றவர்களா? என்னும் பல கேள்விகள் இயற்கையாகவே எழுகின்றன. பவுலுக்கே இத்தகைய கேள்வி எழுந்ததாகத் தெரிகிறது! "சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இல்லாமல் அருளின் ஆட்சிக்கு உட்பட்டு இருப்பதனால் நாம் பாவம் செய்யலாமா?" என்னும் கேள்விக்கு, "ஒருபோதும் கூடாது" என அவரே பதிலிறுக்கிறார் (உரோ 6:15).

கிறிஸ்து சட்டத்தினின்று மனிதரை விடுவிக்கிறார் என்பது உண்மை. அதற்காகச் சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகவோ? கட்டுபாடு அற்றவர்களாகவோ அவர்களை மாற்றுவது இல்லை. பழைய சட்டம் செயலாற்றிய இடத்தில் புதியதொரு சட்டத்தைக் கிறிஸ்து விட்டுச் சென்றுள்ளார். இது ஆவியின் சட்டம் என அழைக்கப்படுகின்றது. இது எழுத்தால் எழுதப்படாத, ஆனால் புனித அக்குவீன் தோமையார் கூறுவது போன்று, தந்தையின் வலக்கை விரலால் மனித இதயத்தில் எழுதப்பெற்ற சட்டம். "கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பனவற்றிற்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது." (உரோ 8:2; ஒப் 2 கொரி 3:4) என்கிறார் பவுல். ஆனால் பழைய சட்டத்திற்கும் புதிய சட்டத்திற்கும் இடையே அடிப்படையான வேறுபாடு உண்டு. பழைய சட்டம் புறத்தேயிருந்து மனிதரைக் கட்டுப்படுத்தியது. புதிய சட்டமோ உள்ளூர மாற்றியமைக்கும் ஆற்றல் படைத்தது. இதைச் சட்டம் என்று அழைப்பதைவிட, அருள் (உரோ 6:14) என்றும் தூய ஆவி என்றும் திருத்தூதர் அழைக்கிறார்.

தூய ஆவியால் வழிநடத்தப்படும் கிறிஸ்தவர் எந்த அளவுக்கு ஆவியால் ஆட்கொள்ளப் படுகிறாரோ, அந்த அளவுக்கு மோசேயின் சட்டத்தினின்று புறத்தேயிருந்து அவரைக் கட்டுப்படுத்தும் எல்லாவிதச் சட்டத்தினின்றும் விடுதலை பெறுகிறார். இருப்பினும் நன்மை தீமைக்கு அப்பாற்பட்ட முறையில் ஒழுக்கம் கெட்டவராக அவர் மாற்றப்படுவதில்லை என விடுதலை பற்றிய பவுலின் போதனையை அறிஞர் லியோன்னே விளக்குகிறார்.

### அன்பின் சட்டம்

பழைய சட்டம் பெற்றிராத ஆற்றலைப் புதுச் சட்டம் பெற்றுள்ளது. அன்பே இப்புத்தாற்றல்! பழைய சட்டங்களின் நிறைவாக விளங்கும் அன்பு கிறிஸ்தவரைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டமாக மாறுகிறது: "…. 'உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல, உன் அயலான்மீதும் அன்பு காட்டுவாயாக' என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவேறுகிறது" (5:14). "நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்புசெய்வது நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்" (உரோ 13:8) என அவர் மேலும் கூறுகிறார். இதே கருத்தை அறிஞர் ஜான் எல். மெக்கன்சி பின்வரும் சொற்களில் தெளிவுபடுத்துகிறார்:

"கிறிஸ்து உண்மையிலேயே நம்மை மீட்டுக் கொண்டார் என்றால், சட்டத்தின் அனைத்துக் கட்டுப்பாடுகளினின்றும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். ஒரே ஒரு சட்டத்தை மட்டுமே கிறிஸ்தவர்மீது அவர் சுமத்துகிறார். அதுதான் தம்மைப் போன்று தம் அயலாரையும் அன்பு செய்ய ஒருவரைக் கட்டுப்படுத்தும் சட்டமாகும். எவருமே இச்சட்டத்தோடு எதையும் சேர்க்கவும் முடியாது; அல்லது இச்சட்டம் விதிக்கும் வாழ்வுக்குச் சிறப்புக் கூட்டவும் முடியாது.

மோசேயின் சட்டத்திற்கு அடிமைகளாய் வாழ்ந்து பழகிப்போன கலாத்தியரைப் பார்த்து, நீங்கள் சட்டத்தின் அடிமைகளாய் வாழ விரும்புகிறீர்களா? அன்பின் சட்டத்துக்கு அடிமைகளாய் இருங்கள் எனப் பவுல் பகர்கிறார். "ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள்" (5:13) தூய ஆவி விளைவிக்கும் பலன்களுள் முதலாவது அன்பே எனக் கூறுவதோடு (5:22), எந்நேரத்திலும், எல்லா இடத்திலும் அன்பைக் கடைப்பிடிக்குமாறு கட்டளை கொடுக்கிறார். (6:1-5)

### திருச்சபைச் சட்டமும் கிறிஸ்தவர்களும்

எல்லா வகைச் சட்டங்களினின்றும் கிறிஸ்தவர் விடுதலை பெற்றிருந்தால், பின் திருச்சபை இத்தனை சட்டங்களை விதிப்பது ஏன்? அவரை மீண்டும் அடிமைப்படுத்தவா?

"திருச்சட்டம் நேர்மையானவர்களுக்காக இயற்றப்படவில்லை, மாறாக ஒழுங்குமீறுவோர், கட்டுப்பாட்டுக்கு அடங்காதோர், இறைப்பற்று இல்லாதோர், பாவிகள், தூய்மையற்றோர், உலகப் போக்கைப் பின்பற்றுவோர், தந்தையைக் கொல்வோர், தாயைக் கொல்வோர், பிற மனிதரைக் கொல்வோர், பரத்தமையில் ஈடுபடுவோர், ஒருபால் புணர்ச்சிகொள்வோர், ஆண்களைக் கடத்தி விற்போர், பொய்யர், பொய்யாணையிடுவோர் மற்றும் நலம் தரும் போதனையை எதிர்ப்போர் ஆகியோருக்காகவே திருச்சட்டம் இயற்றப்பட்டது" என்றார் திருத்தூதர் (1திமொ 1:9-10). அதாவது பழைய சட்டம் போன்று மக்களை நெறிப்படுத்துவதே திருச்சபைச் சட்டதிட்டங்களின் நோக்கம் ஆகும். சிறைக்காவலர் போன்று மக்களைக் கண்காணிப்பதும், வழித்துணையாய் இருந்து அவர்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்வதுமே இவற்றின் அலுவல்.

புறத்தேயிருந்து கட்டுப்படுத்தும் எந்தச் சட்டமும் இப்பொழுது கிறிஸ்தவர்களுக்குத் தேவை இல்லை. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்ற அவர்கள் இறை மக்களுக்கு உரிய முழுச் சுதந்திரத்தோடு எல்லாச் சட்டங்களையுமே கடைப்பிடிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், புறச்சட்டம் அகச் சட்டத்தின் வெளி அடையாளமாகத்தான் இருக்க முடியும் என்கிறார் புனித அக்குவின் தோமையார்.

இதனால் கலாத்தியர் மடல் கிறிஸ்தவ விடுதலையின் நற்செய்தி எனவும் கிறிஸ்தவச் சுதந்திரத்தின் பேருரிமைப் பட்டயம் எனவும் பொருத்தமாக அழைக்கப்படுகிறது. இக்கருத்து உரோமையர் திருமுகத்தில் விரிவாக விளக்கப்படுகிறது.

# மடுத்திருத்தலத்தின் சுருக்கமான வரலாறு

மடுமாதா ஆலயத்துக்கு நீண்டதொரு வரலாறு உள்ளது. போர்த்துக்கீசர் கத்தோலிக்க சமயத்தை நாட்டில் பரப்பி வந்தனர். பின்னர் வந்த ஒல்லாந்தர் கத்தோலிக்கர்களை துன்புறுத்தி தமது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்திற்கு மக்களை மதம் மாற்றினர்.

இதனால் மாந்தை (திருக்கேதீஸ்வரம்) பகுதியில் இருந்த ஆலயத்தின் மாதாவின் திருச்சுரூபத்துடன் அப்பகுதி கத்தோலிக்க மக்கள் மடுக் காட்டுப்பகுதிக்குள் தப்பியோடி மருதமரப் பொந்தில் மாதாவின் திருச்சுரூபத்தை வைத்து வழிபட்டனர். அதன் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட மடுவுக்கு வந்த கத்தோலிக்கர்கள் சிறிய ஆலயத்தை அமைத்து வழிபட்டுவந்தனர் என்று வரலாறு தொடருகின்றது.

ஐரோப்பியக் குருமார், ஆயர்கள் இலங்கையில் பணியாற்றிய ஆரம்பகாலத்தில் யாழ் ஆயரின்கீழ் மடு ஆலய நிர்வாகம் இருந்தது. யாழ் ஆயர்களாக பணிபுரிந்தோர் இவ்வாலயம் வளர்ச்சியடைய உழைத்தனர். ஆயர் பொஞ்சீன் இன்றைய ஆலயத்தை கட்டி முடித்தார். மடுக்கோவிலுக்கு முன்னர் பக்தர்கள் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் வந்துபோகலாம். தங்குவதற்கு விடுதி வசதிகளும் உள்ளன. இதனால் திருவிழா காலங்களைவிட ஏனைய நாட்களிலும் இன, மத பேதமின்றி மக்கள் வருகின்றனர். சிலர் நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்கு குடும்பமாக வருவார்கள். இங்கு எந்த நேரமும் பக்தர்கள் செபமாலை சொல்வதைக் காணலாம். தலைமன்னார் வரையும் ரயில் சேவைகள் நடைபெற்றபோது மடுவீதி ரயில் நிலையம் வரையும் திருவிழாக் காலங்களில் விசேட ரயில் சேவைகள் நடைபெற்றன. மடு வீதியில் இருந்து மடு தேவாலயம் வரையும் இணைப்பு பஸ் சேவைகளும் முன்பு நடைபெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மடு வீதி ரயில் நிலையம் பல வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. இன்று அந்த ரயிலைக் காணமுடியவில்லை. கத்தோலிக்க மக்களின் யாத்திரை ஸ்தலமாக அன்று தொட்டு இன்று வரை விளங்கும் மடுமாதாவின் ஆவணித்திருவிழா ஒரு விசேட விழாவாகும். கன்னிமரியாளின் ஆரோபணத் திருவிழாவை கத்தோலிக்க திருச்சபை கடன் திருநாளாக பிரகடனம் செய்துள்ளதால் ஆவணித் திருவிழாவுக்கே அதிகளவு பக்தர்கள் வருடம்தோறும் வருகின்றனர்.

ஐரோப்பிய குருமார் இலங்கைக்கு வந்த பின்னர் யாழ் ஆயரின் நிர்வாகத்தின் கீழ் மடுத் தேவாலயம் இருந்தது. 1981 மன்னார் மறைமாவட்டம் உருவான பின்னர் மன்னார் ஆயரின்கீழ் தற்போது மடுத்தேவாலயம் இயங்குகின்றது. 1982ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாஸா இந்த ஆலயத்துக்கு விஜயம் செய்திருந்தார். இந்த ஆலயத்தையும் சூழலையும் கண்ட அவர் இப்படியான ஒரு புனிதத்தலம் காட்டிற்குள் அமைத்திருப்பதைக் கண்டு வியந்தார். மின்சார வசதிகளை ஏற்படுத்தவும் மடுவீதிச் சந்தியில் இருந்து மடு ஆலயத்துக்கான பிரதான வீதியை



அகலமாக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தார். இவரே மடுவுக்கு வந்த முதல் அரசுத் தலைவராவார்.

# சிறுவர் பொழிவு

# நட்பு

நா. சுபாசினி - தரம் 9
ஆலங்குளம், வட்டக்கண்டல்



அந்தக் கிராமத்திலே மோகன், குமார் என்ற இரண்டு ஏழைச் சிறுவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள். எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள். கூடவே சாப்பிடுவார்கள். கணப்பொழுதுகூட இருவரும் பிரிந்து இருக்க மாட்டார்கள். அவர்கள் இருவரும் ஒரே பாடசாலையில் ஒன்றாகக் கல்வி கற்பவர்கள். அவர்களது தந்தைமாரின் பரம்பரைத் தொழில் விறகு வெட்டுவதுதான். சிறுவயதிலே மோகனும், குமாரும் திடீர் குண்டுத் தாக்குதலினால் தந்தையை இழந்துவிட்டார்கள். இதனால் சிறுவயதினரான இவர்கள் விறகு வெட்டும் தொழிலைச் செய்ய வேண்டியதாயிற்று. பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் தங்கள் சைக்கிலை எடுத்துக்கொண்டு விறகு வெட்டச் செல்வது வழக்கம்.

அன்றும் இருவரும் தங்களது சைக்கிளை எடுத்துக்கொண்டு விறகு வெட்டச் சென்றனர். காட்டிற்குள் சென்றதும் முதலில் தங்களது சைக்கிளை மரத்தடியில் வைத்துவிட்டு இருவரும் கொண்டுசென்ற உணவுகளை ஒன்றாகப் பகிர்ந்து சாப்பிடத் தொடங்கினர்.

சாப்பிட்டு முடிந்ததும் தாங்கள் கொண்டுசென்ற கோடாரிகளோடு காட்டிற்குள் ஆளுக்கொரு பக்கமாகச் சென்றனர். அப்பொழுது குமார் சென்ற பக்கம் பேரிரைச்சலோடு வெடிச்சத்தம் கேட்டது. அதிர்ச்சி அடைந்த மோகன் ஓடிச்சென்று பார்த்தான். அப்போது குமார் இரத்த வெள்ளத்தில் உயிர் பிரியும் நிலையில் கிடந்தான். குமார் மிதிவெடியில் மாட்டிக்கொண்டான் என்பதைப் புரிந்துகொண்ட மோகன் அதனுள் இன்னும் பல மிதி வெடிகள் இருக்கலாம் என்பதை ஊகித்துக் கொண்டும்கூட இணைபிரியா நண்பனை விட்டுப் பிரிவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. அன்பின் மேலீட்டால் நண்பனை ஓடிச்சென்று கட்டியணைத்தான். அணைத்ததுதான் தாமதம் அவனது காலும் பறந்தது. அந்தப் பெரிய வனாந்தரத்திலே உதவிக்கரம் நீட்ட யாருமே இல்லாததால் இருவரது உயிரும் ஒன்றாகவே பிரிந்தது!

# சிரிப்பு (பூ) க்கள்

**ஒருவர்:** நாடு பொருளாதார வளர்ச்சி ஆகாததற்கு என்ன காரணம்?
**மற்றவர்:** சரியா உரம் போடாததுதான் காரணம்!

❖❖❖❖❖❖

**கண்ணன் :** உங்கட மகன் வெளிநாட்டில் இருந்து வந்த போது என்ன வேண்டிக்கொண்டு வந்தார்?
**ராமு:** பன்றிக் காச்சல்தான்
**கண்ணன்:** ?............! ..........? ............!

---

**ஒருவர்:** "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்று பெரியவங்க சொன்னது சரியாப் போச்சு!
**மற்றவர்:** எப்படிச் சொல்கிறாய்?
**ஒருவர்:** என் மனைவி செய்த மைசூர் பாகை ஒரு பரதேசியின் திருவோட்டில் போட்டதும் திருவோடு இரண்டா உடைந்துவிட்டது.

❖❖❖❖❖❖

**ராமு:** அந்தப் பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதற்கு புதுசா வழிகண்டு பிடிச்சிருக்கான்.....?
**பாலு:** என்ன வழி?
**ராமு:** அம்மா.... என் செல்போன் நம்பரை சொல்றன் குறித்துக்கொள்ளுங்கோ. சாப்பாடு ரெடியானதும் மிஸ்கோல் அடிச்சீங்கன்னா உடனடியாக வந்து வாங்குவேன் என்கிறானே..?

*ம. டிசாமினி - தரம் 3A, வ. நெ. க. ம. வி.*

**தாய்:** தூங்கிக்கொண்டிருந்த உன் அண்ணன் முதுகில் வெள்ள பெயின்ற் அடிச்சனியாடா?
**மகன்:** நீங்கள்தானே அண்ணனைக் "குட்டிச்சுவரு" என்டு திட்டுவீங்க அதான் பெயின்ற் அடிச்சேன்.

*ம. திருஷாளினி - குழந்தையேசு முன்பள்ளி, தாஸ்கோட்டம்.*

---

**நோயாளி:** முட்ட சாப்பிட்டது அஜீரணமாகல்ல டாக்டர்
**வைத்தியர்:** எத்தனை முட்ட சாப்பிட்டீங்க..?
**நோயாளி:** வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டேன்னு சொல்லவந்தேன்.

❖❖❖❖❖❖

**ஒருவர் :** நீங்க ஃபுட்போல் நல்லா விளையாடுறீங்க...!
**மற்றவர் :** பந்தை என் மனைவின்னு நினைத்து எட்டி எட்டி உதைப்பேன் அதுதான்.

❖❖❖❖❖❖

**ஒருவா:** டாக்டர் காச்சல்ன்னு வந்த நோயாளி உடம்பெல்லாம் குத்துதின்னு சொல்றார் அவரை பரிசோதனை பண்ணிடவா?
**டாக்டர்:** வேண்டாம் அவருக்கு முள்ளம் பன்றிக் காய்ச்சல் என்டு சொல்லிடு

*- அ. ஜஸ்மின் சரோன் - ஆவணம், நானாட்டான்.*

---

**மகன்:** இட்லிக்கும், பொங்கலுக்கும் என்னப்பா வித்தியாசம்?
**அப்பா:** பொங்கல் இனிக்கும்.
**மகன்:** இல்லைப்பா பொங்கலுக்கு லீவு இருக்கு இட்லிக்கு லீவு இல்ல.

*- திருமதி. சுகந்தி மனோகரன்,*
*ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்*

# விளம்பரப்பலகை

"பறவையானது எமது தலைக்கு மேல் பறப்பதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் எமது தலையில் கூடு கட்டுவதை எம்மால் தடுக்க இயலும்."

"அலுவலகத்தில் எல்லோரையும் திருப்திபடுத்த முயலும் ஓர் அதிகாரியால் சிறந்த நிர்வாகியாக இருக்க முடியாது."

"எமது வாழ்க்கையில் பெரிய விடயமாக கருதப்படுவது நாம் பிறருக்காக செய்யும் ஓர் சிறிய விடயமே."

"ஆணிகளில் தொங்கும் அழகிய ஓவியங்களுக்குப் பின்னால் காயப்பட்டுக் கிடப்பது சுவர்களும் ஆணிகளும்தான்."

"வெற்றியின்போது கை தட்டும் ஐந்து விரல்களைவிட தோல்வியின்போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம்."

"நீ விணாக்கும் ஒவ்வொரு நேரமும் உன் தாயின் ஒரு துளி இரத்தம்."

அருட்சகோ. எஸ். அன்ரனி ஜெஸ்ரீன்,
1ம் வருட இறையியல்,
அம்பிட்டிய தேசிய குருமடம், கண்டி.

"உண்மை உங்களுக்கு தெரிந்திருந்தபோதும் மற்ற மனிதருக்கு அஞ்சி அதைக் கூறாமல் இருந்து விடாதீர்கள்"
- நபிகள் நாயகம் -

"அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம். அனுபவம் என்பது பாடம் கற்கும்போது வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கல்வி முறையும்கூட." - அறிஞர் அண்ணா -

"பிறர் துன்பத்தை நீ துடைப்பாயானால் உன்னைத் தேடி வரும் துன்பம் உன்னை விட்டு அகன்று போகும்."

*ப. மரிய டிலக்சனா*
*கதிர்காமர் முகாம், மெனிக்பாம், செட்டிக்குளம்*

## உங்கள் சிந்தனைக்கு



| | |
|---|---|
| மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகக் கொடிய நோய் | - கல்லாமை |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவவிடாதது | - வாய்ப்பு |

*பி. ஆன்ஸ் பஸ்லியோ, D/1, மடுக்கோவில், மடு*

# கவிதைப் பூக்கள்

## பயணங்கள்



மனிதா! இதயத்திலிருந்து - எங்கே
தொலைத்து விட்டாய் மனித நேயத்தினை?
நீயும் நானும் கடவுள் படைப்பில்
சமனான மனிதர்கள்
ஏன் மனிதத்தினை மிதித்து நடக்கின்றாய்!

கல்வியெனும் பசுந்தோப்பிலே
பட்டாம் பூச்சிகளாக சிறகுவிரித்துப் பறக்கும்போது
இடியோசைகள் காதுகளிலே ஒலித்தது!



அம்மா எனும் அவலக்குரல்கள்
அகோரமாக ஒலித்து ஓய்கிறது - ஆனால்
உடல்களிலே சிதைக்கப்பட்ட காயங்களைவிட
மனங்களிலே பதிக்கப்பட்ட வடுக்கள்தான்
இன்னும் ஆறவில்லை!

சிறகுடைந்த சிட்டுக்குருவிகளாக - இங்கே
உறவிழந்த உறவினர்களின் கூட்டம்
விடாது பெய்யும் அடை மழைபோல்
தொடர்ந்து சொரிகின்றன விழிகளின் கண்ணீர்!



அம்மா எனும் அன்பான உறவும்
அப்பா எனும் பண்பான உறவும்
சோதரர் எனும் ஒன்றித்த உறவும்
கணவன், மனைவி இணைபிரியா உறவும் கூடியது.

இந்தக் கூட்டம் விற்பனைக்காக மாலையில்
கூட்டப்படும் அங்காடிகள் அல்ல - இது
ஓலத்திற்காகக் கூட்டப்பட்ட இழவுக் கூட்டம்
இங்கே வரிசையில் அடுக்கப்பட்ட சவப்பெட்டிகள்
இறுதியடக்கத்திற்காகப் பயணிக்கின்றன.
மனித உணர்வின்றிப் பறிக்கப்பட்ட உயிரற்ற உடல்கள்
இது வாழ்விற்கான பயணமா? அல்லது அழிவிற்கான பயணமா?
முடிவில்லாத வாழ்வைத் தேடிய பயணமா?

*எப். மதுசாலினி D/1, மடுக்கோவில், மடு*

## மதித்திடுவோம்



சாதி வேற்றுமை ஒழித்திடுவோம்
சமத்துவமாய் வாழ்ந்திடுவோம்
இனப்பிளவு இன்றி
இனிமையுடன் வாழ்ந்திடுவோம்.
ஏழை பணக்காரர் என்பதை மறந்து
இறைவனின் குழந்தைகளாய் வாழ்ந்திடுவோம்
நட்பினை வளர்த்திடுவோம்
நண்பர்களாய் வாழ்ந்திடுவோம்
ஒற்றுமையை வளர்த்திடுவோம்
ஒரு தாய் பிள்ளையெனக் காட்டிடுவோம்
வேற்றுமையை அழித்திடுவோம்
வேதம் பேசி நிற்போம்
மனிதரை மனிதராக மதித்திடுவோம்
மனித நேயத்தை வளர்த்திடுவோம்.

*- கு. நிசாந்தினி -*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், நானாட்டான்.*

## அன்புக் கரங்கள்

உம் கரங்களைப் பற்றிப்பிடிப்பதும்
ஆரவாரிப்பதும் உம் வர்ணத்திற்காய் அல்ல.
நீராவது எம் இறைமையை காப்பீர் என்பதற்காகத்தான்!

அன்புக் கரங்களை - நீட்டி ஆதரவு காட்டுகின்றீர்
இனியும் எங்களுக்கு இந்த ஈன வாழ்வு வேண்டாமய்யா

உம்மால் முடிந்தால் உலகிற்கு எடுத்துச் சொல்லி
ஏற்றிவையும் எம் மக்களின் வாழ்வில் ஒளியை!

*- அ. டிப்னா - சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.*

## ஓடுகிறேன்!



நொடிகள் நிமிடங்களாகவும்
நிமிடங்கள் மணி நேரங்களாகவும்
மணி நேரங்கள் நாட்களாகவும்
நாட்கள் வாரங்களாகவும்
வாரங்கள் மாதங்களாகவும்
மாதங்கள் வருடங்களாகவும்
வருடங்கள் நூற்றாண்டுகளாகவும்
ஓடிக்கொண்டே இருக்கின்றன..!

என் ஆண்டவா, எவ்வளவு நாட்கள்
என்னை ஓடச் செய்கின்றீர்.....?
எவ்வளவு நாட்கள் நானும்
ஓடிக்கொண்டே இருப்பேன்?

நான் எவ்வளவு நாட்கள் ஓடுகின்றேனோ
அதுவரை இயேசுவும் என்னோடிருப்பார்!
எனக்குத் தெரியும் அவரது திட்டம் மாறாதது.
எனவே ஓடுகிறேன்... ஓடிக்கொண்டே இருக்கின்றேன்!

- ச. ஜோய் - இல. 98A மடுக்கரை, நானாட்டான்.

# குடியைப் பற்றிய உண்மைகள்

அ. அ. குலாஸ் - குடி நோயாளர் மறுவாழ்வு நிலையம் - தோட்டவெளி, எருக்கலம்பிட்டி.

"நண்பர்களோடு சேர்ந்து குடிக்கப் பழகினேன். குடியை விட்டுவிட நினைத்தாலும் முடியவில்லை. சிலர் எப்பொழுதுதாவது ஒரு நாள் குடிக்கிறார்கள், பிரச்சினை இல்லாமல் இருக்கின்றார்கள். ஆனால் எனக்கு மாறி மாறி துன்பம், வேதனைதான் மிச்சம். எதற்குத்தான் இந்தக் குடிப்பழக்கத்தை தொடங்கினேனோ எனப் பலமுறை வருந்தி இருக்கின்றேன்."

குடிக்கு அடிமையானவர்கள் பொதுவாகக் கூறும் வார்த்தைகள் இவை. குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் நடக்கும்போது தள்ளாடுவார்கள். சாக்கடையில் கிடப்பார்கள். மனைவியைக் காரணமின்றி அடிப்பார்கள். இதனால் அவர்கள் தாம் குடிக்கு அடிமையாகிவிட்டோம் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதில்லை. குடி ஒரு நோய். சிகிச்சைக்குக் கட்டுப்படக்கூடிய ஒரு நோய். ஆனால் குடியில் இருந்து மீண்டுவருமளவும் வாழ்நாள் பூராகவும் சிறிய அளவில்கூட மது அருந்தாமல் இருக்க முயல்வது அவசியம். இதற்குச் சிகிச்சை அவசியம்.

### குடி ஒரு நோய் :

மதுவுக்கு அடிமையாகுதல் ஒரு நோய் இதன் பாதிப்பு நீங்கவேண்டுமானால், குடிநோய்க்கு சிகிச்சை பெறுவது அவசியம். இது மருத்துவ மனோதத்துவ சிகிச்சைக்குக் கட்டுப்படும் ஒரு நோய். நாம் மது அருந்தும்போது நரம்புத்தளர்ச்சி, நடுக்கம், மனப்பிரமை ஏற்படும். இந்த நிலை உடலளவில் மதுவுக்கு அடிமையாகி விட்டோம் எனப் பொருள்படும். நமது சிந்தனையின் மையப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டு விடுகின்ற இந்த நிலையில் மது அருந்தவேண்டுமென்ற எண்ணத்தை நம்மால் தவிர்க்க முடிவதில்லை. இந்த நிலை மனதளவில் மதுவுக்கு அடிமையாகிவிட்டோம் எனப் பொருள்படும்.

நோயின் அறிகுறிகள் சிலவேளைகளில் வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் தொடர்ந்து குடித்துக்கொண்டே இருந்தால் ஈரல், இதயக்கோளாறு அல்லது வேறு உபாதையினாலோ நிலைமை மோசமாகி மரணம்கூட நேரிடலாம்.

### குடிநோயில் மூன்று நிலைகள் உள்ளன

*முதலாவது நிலை :*

(1) மதுவின் தேவையை அதிகரித்தல்
(2) மறதி நிலை
(3) எப்பொழுதும் மதுவைப்பற்றிய சிந்தனை.

### மதுவின் தேவையை அதிகரித்தல்

50 அல்லது 100 மில்லி மது அருந்தியதும் போதை அதிகரிக்காத பட்சத்தில் மேலும் 3 அல்லது 4 மடங்கு மது அருந்தி போதை நிலையை அதிகரிக்க மது அருந்துகின்றோம்.

### மறதி நிலை:

இது மது அருந்துவதனால் ஏற்படும் மறதி நிலை. நாம் போதையில் பல காரியங்களைச் செய்திருக்கலாம். ஆனால் மறு நாள் அதை மறந்து விடுகின்றோம். உதாரணமாக மதுபோதையில் மனைவியை பிள்ளைகளை அடித்திருக்கின்றோம். சாப்பாட்டைக் கேட்டு வாங்கி, அதை அப்படியே ருசி ஏதும் இல்லை என்று சாக்குப் போக்குக் கூறி வெளியில் எறிந்திருக்கின்றோம். மனைவியின்மேலுள்ள ஆத்திரத்தினால் குழந்தையின் கழுத்தை கைகளினால் பலமாக நெருக்கி இருக்கின்றோம். அல்லது வீட்டைக் கொழுத்தியிருக்கிறோம். இதை நான் செய்ய வில்லையென்று மறுநாள் மறுதலித்திருக்கிறோம்.

### எப்பொழுதும் மதுவைப்பற்றிய சிந்தனை:

மது அருந்தாமல் இருக்கும்போதுகூட எப்போது, எப்படி மது அருந்தலாமென்ற சிந்தனை மட்டுமே நம்மை ஆட்கொண்டிருக்கும். உதாரணமாக எப்பொழுது பொழுது விடியும்? மதுக்கடை எப்பொழுது திறப்பார்கள்? கையில் பணமில்லையே? யாரிடம் கடன் கேட்பது? மனைவி காசை எங்கே ஒழித்து வைத்திருப்பாள்? வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் எப்பொழுது போவார்கள்? என்று சந்தர்ப்பங்களை தேடியலைதல், அந்த சிந்தனையிலே திழைத்திருத்தல்.

*இரண்டாவது நிலை:*

(1) மதுவின் அளவைக்கட்டுப்படுத்த முடியாமை
(2) குடிப்பதை நியாயப்படுத்தல்
(3) டாம்பீகமான நடத்தை
(4) சிறிது காலம் குடிக்காமல் இருத்தல்
(5) மது அருந்தும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளல்.

### மதுவின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமை:

இப்பொழுது மதுவின் அளவைக்கட்டுப்படுத்த முடியாமல இருக்கிறது. உதாரணமாக வேலையில் இருந்து வீட்டுக்குத் திரும்பும்போது ஒரு கிளாஸ் மட்டும் குடிக்கலாம் என்று எண்ணி கடையில் நுழைகின்றோம். ஆனால் குடிக்க ஆரம்பித்த பொழுது ஒரு கிளாஸ்சுடன் நிறுத்தமுடிவதில்லை. கடை மூடும்வரை குடித்துக்கொண்டே இருப்போம். நாளடைவில் குடிநோய் வளர ஆரம்பித்து மது அருந்துமிடம், காலம் ஆகியவை எதையும் கட்டுப்படுத்த முடியாத நிலையேற்படுகின்றது. உதாரணமாகக் காலையில் வேலைக்குப் போகும்போது குடித்துவிட்டுப் போகிறோம். இக்கட்டத்தில் குடிப்பது என்பது தவிர்க்கமுடியாத சம்பவமாகி விடுகின்றது. மதுவின் அளவைக் கட்டுப்படுத்த இயலாமை, நாம் ஒரு குடிநோயாளி என்பதைத் திட்டவட்டமாகக் காட்டும் ஒரு அறிகுறியாகும்.

### குடிப்பதை நியாயப்படுத்தல்:

குடிப்பதற்குப் பலவித காரணங்களைக் கூற



ஆரம்பிக்கின்றோம். உதாரணமாக "வேலை செய்த களைப்பு நீங்குவதற்குக் குடிக்க வேண்டியிருக்கிறது. அவன் குடிக்கிறான் நான் குடித்தாலென்ன? ஏன் அவனை முதலில் கட்டுப்படுத்துங்களேன். என்னுடைய பணத்தில்தானே நான் குடிக்கிறேன். உடல் நோய் குடித்தால்தான் தீருகின்றது."

இதெல்லாம் தாங்கள் குடிக்க வேண்டுமென்று நியாயப்படுத்தும் நொண்டிச் சாட்டுகளாகும். இவையெல்லாம் பொய்யானது. உண்மை இல்லையென குடியை விட்டு புதுவாழ்வு வாழ்பவர்கள் தங்களது சாட்சியத்தில் எடுத்துரைக்கின்றார்கள். காரணங்கள் மாறுவதே தவிர குடிப்பது என்றும் மாறுவதில்லை தொடர்ந்தும் மது அருந்திக்கொண்டே இருக்கின்றோம்.

### டாம்பீகமான நடத்தை:

வேலைத் திறனும், பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றன. அப்படிப் பாதிக்கப்பட்டும் டாம்பீகமான நடத்தையையே மேற்கொள்ளுகின்றோம். உதாரணமாக வேலையை இழக்கும் நிலையேற்பட்டாலும் "நான் இல்லாமல் அலுவலகமே இயங்காது" என்று கூறுகின்றோம். வீட்டில் அரிசி வாங்கக்கூட பணமில்லாத நிலையில் கடன்வாங்கி ஆட்டோவில் பயணம் செய்வோம்.

### சிறிது காலத்துக்கு குடிக்காமல் இருத்தல்:

உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறதென வைத்தியர் கூறினால் அல்லது அலுவலகத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டன என்றால் இந்நிலையில் நம்மால் குடிப்பதை நிறுத்த முடியும் என்று மற்றவர்களுக்குப் புரியவைப்பதற்காக தற்காலிகமாக குடிப்பதை நிறுத்துகின்றோம். சில சமயங்களில் தபசு காலங்களில் நாற்பது நாட்களில் குடிக்காமல் இருக்கிறோம். ஆனால் உயிர்ப்பு நாளன்று விட்ட நாற்பது நாள் குடியை ஒரே நாளில் குடித்துவிடுகின்றோம். குடிநோய் உள்ளவர்களுக்கு சிறிதளவு குடிப்பது என்பது சாத்தியமில்லை.

### மது அருந்தும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளல்:

மதுவுக்கு அடிமையான நிலைகளில் இருந்து விடுபட எண்ணி மது அருந்தும் இடங்கள் மதுபானத்தின் வகை நண்பர்கள் ஆகியவற்றில் பல மாற்றங்களைச் செய்கின்றோம். "இப்ப நான் சாராயம் குடிப்பதில்லை. ஆனால் கள்ளுத்தான் ஒரு போத்தல் குடிக்கிறேன்" எனப் பலர் கூறுவர்.

*மூன்றாவது நிலை*

1. கோட்பாடுகளை இழத்தல்
2. சந்தேக மனப்பிரமை
3. உடல் உறுப்புக்கள் கட்டுப்பாட்டை இழத்தல்

### கோட்பாடுகளை இழத்தல்:

மதுவிற்குப் பூரண அடிமையாகிவிட்ட பிறகு குடிக்காமல் இருக்க முடிவதில்லை. ஆகவே மது வாங்கக் கடன் வாங்கவோ பொய் சொல்லவோ திருடவோகூடத் தயங்கமாட்டோம்.

### சந்தேக மனப்பிரமை:

நமது மனைவியின் நடத்தையில் காரணம் ஏதும் இல்லாமல் சந்தேகம் ஏற்படும். எல்லோரும் சதிசெய்து நம்மைக் கொல்ல முயற்சிப்பதாகக்கூடத் தோன்றும். சில சமயங்களில் ராட்சஸ அளவில் சிலந்தி போன்ற பூச்சிக்கள் சுவற்றில் இருப்பதுபோலப் பிரமை ஏற்படும். அருகில் யாருமே இல்லாதபோது மற்றவர்கள் திட்டுவதுபோல உண்மைக்குப் புறம்பான மனபிரமைகள் ஏற்படும்.

### உடலுறுப்புக்கள் கட்டுப்பாட்டை இழத்தல்:

கை கால்கள் விருப்பத்திற்கேற்ப செயல்படு - வதில்லை, உடலில் நடுக்கம் ஏற்படுகின்றது. தேனீர் குடிப்பது, சட்டைப்பொத்தான் போடுவது போன்ற சாதாரண வேலைகளைக்கூட நம்மால் செய்ய முடிவதில்லை. இவற்றைச் செய்வதற்கு முன்பு மது அருந்தி நம்மை நிலைப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. இக்கட்டத்தையடைந்த பிறகும் நாம் தொடர்ந்தும் குடித்துக்கொண்டேயிருந்தால் மனநோயால் மருத்துவ நிலையத்தில் சேர்க்கப்படும் அவசியம் ஏற்படும். அல்லது அகால மரணம் ஏற்படலாம். இவை இரண்டும் நிகழலாம். இதற்குச் செய்யவேண்டிய ஒரே ஒரு வழி குடிக்காமல் இருப்பதுதான்.

### குடி நோயாளி யார்?

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உடல் நலம், குடும்ப உறவு, சமூக உறவு, வேலை, பொருளாதாரம் என்ற பல பிரிவுகள் உள்ளன. நமது குடிப்பழக்கத்தின் காரணமாக இப்பிரிவுகளில் ஏதாவது ஒன்றில் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படும். நாம் நிறுத்தாமல் குடித்துக்கொண்டே இருந்தால் நம்மைக் குடிநோயாளி என்றே கூறலாம். உதாரணமாக அலுவலகத்தில் இருந்து எச்சரிக்கைக் கடிதம் வந்திருக்கலாம், மனைவியை விட்டுப் பிரிந்திருக்கலாம், கடன் வாங்கியிருக்கலாம். இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் தொடர்ந்து குடித்துக்கொண்டே இருப்போமானால் நாம் குடிநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று பொருள்.

# விடுதலை பெறும் விசுவாசம் வேண்டும்

வண. அ. சகாயநாதன் (தி. ச)

வரலாறு காணாத வடுக்களை ஏற்படுத்திய மனிதப்பேரவலத்தை இறுதி நேரத்தில் எம்மினம் கண்டுவிட்டது, அனுபவித்துவிட்டது. சாட்சிகள் இல்லாத மரணங்கள் அரங்கேறிவிட்டது. இதைச் செய்தவர்கள் மிலேச்சத்தனமான தமது நரபலி வெற்றியை தமிழ் மக்களின் செங்குருதியில் நின்றபடி கொண்டாடியும் விட்டனர். இதற்குப் பெயர்தான் மனிதாபிமான மீட்புப் போர்! எம் தமிழ் சகோதரர்களை பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கும் போர்! பயங்கரவாதத்தை அழிக்கும் போர்! பாலும், தேனும் பொழியும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் மக்களை உள்வாங்கும் போர்!

எல்லோரும் ஏமாந்து - இல்லை ஏமாற்றப்பட்டு ஏதலியாக முள்வேலிக்குள் மூன்று இலட்சம் மக்கள் முடக்கப்பட்டுள்ளனர், அடைக்கப்பட்டுள்ளனர். ஏன் இந்த நிலை என்று வாழ்வின் கசப்பான இறுதி நிலைக்குச் சென்று ஆறாத ரணங்களுக்குள் பெரும் சுமைகளைச் சுமந்தவர்களாய் நம் உறவுகள் வந்து வெறுமையாய் நிற்கின்றனர்.

இவர்கள் இறுதிக் கட்டத்திலும் உயிரைக் காப்பாற்றக் கேட்டனர், உணவு கேட்டனர். போர் நிறுத்தம் கேட்டனர். எல்லாம் பொய்த்துவிட்டது. இதற்குமேல் எதைக் கேட்பது? இறுதியாக அகதிகள் என்று "சீல்" குத்தப்பட்டு, காட்சிப் பொருளாக தலையுள்ள ஆனால் இதயமில்லாதவர்களால் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டார்கள். இதற்குப் பெயர்தான் "ஐடிபி கேம்". சொகுசு வாகனத்தில் யார் யாரோ வருகிறார்கள். வீதிகள் மறிக்கப்படுகின்றன. அவர் வருவார் இவர் வருவார் யார் வருவார் என்று தெரியாமல் பலர் வந்து போகிறார்கள். ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. எப்போதும்போல்தான் இப்போதும் உண்டு. எம் சகோதரர்கள் எல்லாவற்றையும் இழந்து நொந்து வருந்தி ஒடிந்து வெறுமையோடு அதிகாரத்தின் பிடியில், அடிமைகளாக அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்.

"நாம் வணங்கிய கடவுள், பின்பற்றிய சமயங்கள் எல்லாம் வெறுமைதானா? பொய்யானதா?" என்பதை ஆய்வு செய்யும் நிலையில், உள்ள மக்களுக்கு இனி நாம் என்ன செய்யப்போகிறோம்? உணவுப் பொதிகளைக் கொடுத்து விட்டோம் என்று இல்லாமல் இனித்தான் வரலாற்றின் கட்டாயக் கடமையான நம்பிக்கையையும், விசுவாசத்தையும் கொடுத்து எழுந்து நடக்க நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

"அஞ்சாதே, கலங்காதே நான் என்றும் உன்னோடு இருக்கின்றேன்" எதை இழந்தாலும் விசுவாசத்தை இழக்காதே, விசுவாசம் ஒரு மன உறுதி. அது சரிந்து சாய்ந்து ஒடிந்து ஓய்ந்து கிடக்கும் மனித வாழ்வைக் கண்டு மனம் சோர்ந்து விடுவதில்லை. இந்தப் பாழாய்ப்போன சமூகத்தை யார்தான் சரிசெய்ய முடியும் என அது உள்ளம் தளர்ந்துபோவதில்லை. "விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி, கண்ணுக்கும் புலப்படாதவை பற்றி மனம் தளராத நிலை" (எபி 11:1).

பழைய ஏற்பாட்டிலும் நாம் இதைப் பார்க்கலாம். ஆபிரகாமிற்கு உறுதியளிக்கப்பட்ட உரிமை நாடு உடனே கண்களில் தென்பட வில்லை, ஆனால் அதை அடைந்துவிட முடியும் என்னும் நம்பிக்கையுடன் புறப்பட்டார். எகிப்தில் அடிமைகளாயிருந்த மக்களின் விழிகள் விடுதலை நாட்டைக் காணவில்லைத்தான், ஆனால் காண்போம் எனும் விசுவாச உறுதியுடன்தான் அவர்கள் கடலையும் கடந்தனர்.

அதேபோன்று நாம் எதிர்பார்ப்பதைப் பெறுவோம் என்னும் உறுதியோடு உழைப்பதே இன்றைய விசுவாசம். விசுவாசம் ஒரு செயல். அது வெறும் அறிவிலோ சிந்தனை நிலையிலோ இறை வெளிப்பாட்டு உண்மைகளை ஏற்பதன்று. மீட்பளிக்கும் இறைவன்பால் மனிதன் கொள்ளும் வெறும் பக்திப் பற்றுறுதியும் அல்ல மாறாக விசுவாசம் என்பது விடுதலைச் செயல். அது நீதி செய்யும் ஒரு வாழ்வு. "ஆன்மாவை இழந்துவிட்ட உடல் எப்படி உயிரற்றதோ அப்படியே செயலற்ற விசுவாசமும் உயிரற்றதே" (யாக். 2:26) கட்டுண்டு கிடக்கும் என் உடன் மனிதனுக்கு நான் செவி கொடுக்கவில்லை என்றால் இறைவனுக்கும் நான் செவிகொடுக்கவில்லை. என் உடன் மனிதனது விடுதலைப் பணியில் என்னையே நான் ஈடுபடுத்தவில்லையென்றால் நான் ஒரு நாத்திகன். ஆம் கிறிஸ்தவ விசுவாசம் உண்மையில் ஒரு புரட்சி. அநீதியான மதிப்பீடுகளையும், அமைப்புக்களையும் அதிகாரங்களையும் கவிழ்க்கும் முயற்சி.

ஆகவே இப்படியான ஒரு விசுவாசம் நம்மில் இருக்குமென்றால் எதிர்கால வாழ்வு இருளானதாய் இருக்கப்போவதில்லை. இழப்புக்களையும், இறப்புக்களையும் சந்தித்துவிட்டோம். இறைவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு "சுமை சுமந்து சோர்ந்திருப்-போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்." என்ற உயிர் உள்ள வார்த்தையில் நம்பிக்கை கொள்வோம். எழுந்து நடவுங்கள்! இறைவன் நம்மோடு உள்ளார்!

# பங்குபற்றும் திருச்சபை

ஜெராட் டி ரொசய்ரோ அ.ம.தி.

காலத்தின் குறிகளுக்கு ஏற்ப 20ம் நூற்றாண்டில் திருச்சபை தன்னை மாற்றி - யமைக்கும் முயற்சி 2ம் வத்திக்கான் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக திருச்சபையை நிறுவன அமைப்பாகவே காணும் மரபுப் பார்வையிலிருந்து விலகி, திருச்சபையை மறைபொருளாக, இறைமக்கள் சமூகமாக, தூய ஆவியின் உருவாக்கமாகக் காணும் புதிய கண்ணோட்டம் வளர வித்திடப்பட்டது. இக்கட்டுரையில் திருச்சபை பற்றிய இவ்வுருவகங்களை விளக்கி, அப்புரிந்துணர்வில் கிறிஸ்தவர்கள் எங்ஙனம் பங்குபற்றும் திருச்சபையாக வளரலாம், வாழலாம் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

## திருச்சபை - மறைபொருள்

திருச்சபை 'ஓர் மறைபொருள்' என்பது ஒரு புதிய சிந்தனையோட்டமாகும். 'மறைபொருள்' இறைவனுடைய திட்டத்தையும், அது படிப்படியாக நிறைவேறுவதையும் குறித்துக் - காட்டுகிறது.

மாந்தர் அனைவரையும் நிறைவாழ்வை நோக்கி அழைத்துச் செல்வதே இறைவன் வகுத்த திட்டமாகும். இஸ்ராயேல் மக்களை இறைவன் தேர்ந்துகொண்டது இதன் முதல் படியாகும். காலவோட்டத்தில் நசரேத்தூர் இயேசு வழியாக இறைவன் நிறைவாழ்வுக்கான வழியைக் காண்பித்தார். நிறைவாழ்வை நோக்கிய வழிநடத்தல் தூய ஆவி வழியாகத் தொடர்ந்து நிகழ்கின்றது. இவ்விறைத்திட்டத்தில் பங்குகொள்ளும் ஓர் கருவியாக திருச்சபை திகழ்கின்றது. ஆக தந்தையின் திட்டத்தில் உருவாகி மகன் இயேசுவால் முன்னெடுக்கப் பட்டு, தூய ஆவியால் தொடரும் நிறைவாழ்வுக்கான வழிகாட்டலளிக்கும் அருட்சாதனமாகி, சாட்சியத்தன்மையுள்ள அடையாளமாகத் திருச்சபை துலங்குவதால் மறைபொருளாகின்றது. (திருச்சபை எண் 1) திருச்சபை ஓர் மறைபொருளாகும் என்பதை வத்திக்கான் சங்கம் பல உருவகங்கள் மூலம் விளக்கிக் கூறுகின்றது. (திருச்சபை எண் 6-8)

## திருச்சபை - இறைமக்கள் சமூகம்

திருச்சபை ஓர் 'இறைமக்கள் சமூகம்' என்ற கருத்தாக்கம் புதியது மட்டுமல்ல, புரட்சிகரமானதுமாகும். திருவிவிலியத்தில் விஞ்சி நிற்கும் இவ்வுருவகம் வத்திக்கான் சங்கத்தில் புத்துயிர்பெற்று திருச்சபை இயல் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றாகும்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் 'இறைவனின் மக்கள்' என அழைக்கப் - பட்டார்கள். இறைவனின் சொந்த மக்களாக தேர்ந்துகொள்ளப்பட்டார்கள் (வி. ப. 19:5; இ. ச. 7:6 ; 14:2 ; 26:18) அவர்கள்மீது அன்பு, பரிவு, இரக்கம் கொண்டு அவர்களுக்கு விடுதலையளித்து, அவர்களுடன் உடன்படிக்கை செய்து நிலையான உறவை வளர்க்க இறைவன் வித்திட்டார் (லேவி 26: 9-12). இங்ஙனம் இஸ்ராயேல் 'தம் மக்கள்' என விழித்து (எரே 31:38) "எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்" (வி. ப. 19:6) என இறைவன் ஆசித்தார். இம்மக்கள் ஓர் உறவின் சமூகமாக, யாவேயின் நெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என ஆசித்தார். திருச்சபை 'இறைமக்கள் சமூகம்' என்னும் உருவகம் புதிய ஏற்பாட்டிலும் பல இடங்களில் காணப்படுகின்றது. (உரோ 9:23-26; எபி 8:10; யாக் 1:1; 1பேதுது 2:9) குறிப்பாக பவுல் அடிகளார் திருச்சபையை புதிய இஸ்ராயேலாகவும், புதிய உடன்படிக்கையின் மக்களாகவும் காண்கிறார். இயேசுக் கிறிஸ்து வழியாக தந்தை இறைவனின் உறுதியளித்த நிறைவாழ்வை, புதிய உடன்படிக்கையை அன்றைய இஸ்ராயேல் புறக்கணித்ததால், அவர்கள் பெற்றிருந்த சலுகைகளை புதிய இஸ்ராயேலாகிய திருச்சபைக்கு அளித்தார் என்கிறார் (கலா 3:28-29; உரோ 4:4-5;11: 17). திருச்சபையை "தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர்", "அரச குருக்களின் கூட்டத்தினர்", "தூய மக்களினத்தார்", "உரிமைச் சொத்தான மக்கள்," என விழிக்கிறார் புனித பேதுரு (1பேதுரு 2:5:9).

## புதிய பரிமாணம்

திருச்சபை 'இறைமக்கள் சமூகம்' என்ற கருத்தாக்கம் திருச்சபையில் பல்பரிமாண மாற்றுச் சிந்தனைக்கு வித்திடுகின்றது. திருமுழுக்குப் பெற்ற அனைவரும், "கிறிஸ்துவில் பெற்ற புதுப்பிறப்பின் காரணமாக மாண்பிலும் செயற்பாட்டிலும் உண்மையான சமத்துவ நிலையை உடையவர்கள்' (தி. ச. தொ. எண்.208) திருமுழுக்குப்பெற்ற அனைவரும் கிறிஸ்துவின் பொதுக்குருத்துவத்தில் பங்கேற்கின்றனர் (திருச்சபை எண் 10). இதனால் திருச்சபையில் பல்வேறு நிலையில் உள்ளவர்கள் - ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆற்றும் பணிகள் வேறுபடலாம். ஆனால் திருச்சபையின் நிறைவாழ்வு நோக்கிய பயணத்தில் அனைவரும் சமநிலைப் பொறுப்புணர்வுடன் பணிபுரியக் கடமைப்பட்டுள்ளோம்.

இயேசுவைப் பின்பற்றித் தொடரும் பயணத்தில் உலகுக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அளிக்கும் அருள் அடையாளமாக, ஒன்றிப்பின் சாட்சிய அடையாளமாக விளங்குவது 'இறைமக்கள் சமூகத்தின்' அடிப்படையான பண்பாகும்.

## பங்குகொள்ளும் பாங்கு

'இறைமக்கள் சமூகம்' இயேசுக் கிறிஸ்துவில் நிலைத்து இப்பண்பை வாழும் பாங்கை புனித பவுல் மனித உடல், அதன் பல்வேறு உள், புற உறுப்புக்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டுடன் ஒப்பிட்டு விளக்குகின்றார் (1கொரி. 12:12-31). இறைவன் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளித்துள்ள பல்வேறு அருங்கொடைகளை சமத்துவ, சகோதரத்துவ உணர்வுடன் பொது நலனுக்காகப் பயன்படுத்தி வாழ வேண்டும் என்கிறார். கிறிஸ்து இயேசுவே இறைமக்கள் சமூகம் என்ற உடலுக்கு தலையாவார் (கொலோ 1:18) எபே 1:22-23; 4:15;5:23).

கிறிஸ்துவின் மறை உடலான இறைமக்கள் சமூகம் வளர, வலுப்பெற, திருமுழுக்குப் பெற்ற அனைவரும் ஒரேவிதமான அழைப்பைப் பெற்றிருந்தாலும், ஒரே நோக்கத்திற்காகப் பணி செய்வதாலும் உடலின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக ஒரே இலக்கை நோக்கிப் பயணம் செய்வதாலும் தத்தம் சம பங்களிப்பை வழங்குகிறார்கள், சமநிலை மதிப்புக்குரியவராகவும் பொறுப்புடையவராகவும் விளங்குகின்றனர்.

## திருச்சபை - தூய ஆவியின் உருவாக்கம்

கிறிஸ்துவின் மறைபொருளும், இறைமக்கள் சமூகமான திருச்சபைக்கு உயிரும் ஊட்டமும் அளித்து அதனை வலுப்படுத்துபவரும் உள்ளொளியாகவும் உடனிருப்பு ஆற்றலாயும் இருப்பவர் தூய ஆவியாரே. "யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லோரும் ஒரே ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்" என்கிறார் புனித பவுல் (1 கொரி 12:13). தூய ஆவியின் தூண்டலால் கிறிஸ்தவ விசுவாசிகள் யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தோழமை உணர்வுடன் அன்பில், ஒன்றிப்பில் வளர, (கலா 3:28) இறையாட்சிக் கனவை நனவாக்கும் கடப்பாடுடையவர்களாகின்றோம் (உரோ 14:17).

இத்தகைய மனப்பான்மையுடன் கிறிஸ்துவில் வாழ்ந்து பணிபுரிவோர் கடவுளுக்கு உகந்தவராயும், மக்களின் மதிப்புக்கு உரியவராயும் இருப்பர் என்கிறார் பவுலடிகளார் (உரோ 14: 18).

இறைமக்கள் பல்வேறு சூழலில் வாழலாம். பலதரப்பட்ட கருத்துக்களையும் கொண்டிருக் - கலாம். அவர்களிடையே பலவகையான வேற்றுமைகளும் நிலவலாம். ஆனால் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகளாக அன்புறவிலும், நட்புறவிலும் வாழ வழிவகுப்பவர் தூய ஆவியாவார். அதனால் இறைமக்கள் சமூகமான திருச்சபை, "மக்களினம் முழுவதற்கும் ஒற்றுமை, நம்பிக்கை, மீட்பு, ஆகியவற்றின் நிறைவான கருவியாகவும், ஒற்றுமையின் கட்புலனாகக் கூடிய, காணக் கூடிய அருளடையாளமாகவும் திகழ்கிறது. (திருச்சபை எண் 9) "திருச்சபை கடவுளுடைய வார்த்தையாம்

கட்டுரைத் தொடர் - 1



கிறிஸ்துவினால் மட்டுமல்லாது, கடவுளுடைய உயிர் மூச்சாம் தூய ஆவியாலும் உருவாக்கப்பட்டு வளர்ச்சியுறுகிறது." என்பது தூய இரனேயுஸ் என்பவரின் கருத்தாகும். அதனால் எல்லா நிலைகளிலும் உள்ள விசுவாசிகளுக்கும் சிறப்பான அருட்கொடை - களை வழங்குகின்றார். இவற்றால் பல்வேறு பணிகளையும், கடமைகளையும் மேற்கொள்ள அவர்களுக்கு தகுதியையும், ஆற்றலையும் அளிக்கின்றார்" (திருச்சபை எண் 12).

## முடிவுரை

இரண்டாம் வத்திக்கான் சங்கம் சித்தரிக்கும் திருச்சபையின் அடிப்படையான அகப் பண்புகளான மறையுடல், இறைமக்கள் சமூகம் தூய ஆவியின் உருவாக்கம் ஆகியன திருமுழுக்குப்பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களின் கடமையையும், பொறுப்பையும், பங்களிப்பையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

திருமுழுக்குப் பெற்ற அனைவரின் சம பங்களிப்பின்றி திருச்சபை வளமும், வளர்ச்சியும் காண முடியாது. "இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்புக்கும், மனிதகுலம் முழுவதின் ஒற்றுமைக்குமான அடையாளமும், கருவியுமாய்" (திருச்சபை எண் 1) விளங்கிட இறைமக்கள் சமூகமான திருச்சபை தூய ஆவியின் வழிநடத்தலில் பங்களிக்கும் திருச்சபையாக மாற வேண்டும். குறிப்பாக "கிறிஸ்துவில் இன்றும் நிறைவான ஓர் ஒன்றிப்பை எல்லா மனிதரும் பெறுவதற்கும், இன்றைய சூழ்நிலைகளிலே திருச்சபையின் பணி அவசரமாகத் தேவைப்படுகின்றது," திருச்சபை எண்1) என்ற கருத்து திருச்சபையின் அகப்பண்புகள் பேணி வளர்க்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றது. மேலும் திருமுழுக்குப்பெற்ற விசுவாசிகள் தூய ஆவியின் உள்ளார்ந்த தூண்டுதலுக்கு தன்னார்வத்துடன் பதிலளித்து, காலத்தின் குறி அறிந்து நற்செய்தியின் ஒளியில் (இ. தி. 4) தத்தம் பங்களிப்பை அளிப்பது இவ்வகப்பண்புகள் வாழ்விக்கப்பட வழியாகும்.

இன்றைய வாழ்வில் தேவைகளின் மத்தியில் பணிவு கொண்ட மனத்துடன் முழுமையான பங்களிப்புடன் இறைமக்கள் சமூகமான திருச்சபை மாற்றமடைய இன்னும் மனமாற்றம் வேண்டும்; பரந்த சமத்துவக் கண்ணோட்டம் வேண்டும்; வாழ்வில் யதார்த்தத்தை ஏற்கும் துணிவும், சூழமைவில் "குடிகொள்ளும்" பக்குவமும் வேண்டும்; நசரேத்தூர் இயேசுவில் வேரூன்ற வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

# இறைபணியின் மகத்துவத்தைப் பறைசாற்றும் குருக்களின் ஆண்டு

"தலைமைக்குரு ஒவ்வொருவரும் மனிதர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாகக் காணிக்கை - களையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள்முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகிறார்." (எபி 5:1).

மனுமகனாகப் பிறந்த இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தி தம் பிரதிநிதிகளாக குருக்களை விட்டுச் சென்றார். அதேபோல் இயேசு எமக்குத் தந்த ஞானஸ்நானம், பச்சாத்தாபம், நற்கருணை, உறுதிபூசுதல் திருமணம், குருத்துவம், நோயில் பூசுதல் ஆகிய ஏழு திருவருட்சாதனங்களில் முதல் ஐந்தையும் குருத்துவம் அல்லது திருமணம் உள்ளிட்ட ஆறு அருட்சாதனங்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு கத்தோலிக்கரும் தகுதியுடையவராக உள்ளபோதும் அதைக் கிறிஸ்துவின் இடத்தில் இருந்து நிறைவேற்றும் அதிகாரம் ஒரு குருவுக்கு அல்லது அவருக்கு முதல் நிலையிலுள்ள ஆயருக்கு உண்டு.

இவர்கள் தம் தலைமைக்குருவாகிய இயேசுவின் பெயரால் அவர் பிரதிநிதியாக இருந்து அருட்சாதனங்களை வழங்கி வருவதோடு, தம் மூன்று வாக்குறுதிகளில்



உறுதியாக நின்று தூய்மையான வாழ்வை வாழ்ந்து, கத்தோலிக்கரான எமக்கு முன்மாதிரியாகவும், பிறசபையினரும் மற்றவர்களும் நெருங்க முடியாத இடத்தைப் பெற்று, மதிக்கும்படி வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் தற்கால நாகரீக உலகில் வாழும் கத்தோலிக்க மக்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளனர். அவற்றிற்குச் சரியான விடையை மக்கள் தெரிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும் நெறிப்படுத்தும் தகுதி அருட்பணியாளர்களுக்கு மாத்திரமே உண்டு. 2ம் வத்திக்கான் சங்கக் காலத்தில் இருந்து பல மகாநாடுகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு அவற்றின் மூலம் இவர்கள் தமக்கான ஆன்ம பலத்தைப் பெற்று வருகின்றனர்.

இவ்வாண்டுத் தொடக்கத்தில் "கத்தோலிக்க குருத்துவமும் நவீன சவால்களும்" என்ற தலைப்பில் தாய்லாந்தில் கருத்தாய்வு மகாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் 80 நாடுகளின் பிரதிநிதிகளில் இலங்கையின் பிரதிநிதியாக யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்துகொண்டார் என்பது தமிழராகிய எமக்குப் பெரும் மகிழ்வைத் தரும் விடயமாகும். (நன்றி - தொடுவானம்)

# மன நிறைவின்றி மறைந்த மைக்கல் ஜக்ஸன்

இசை உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த மைக்கல் ஜக்ஸன் தன் ஐம்பதாவது அகவையில் 26.06.2009இல் மரணமானார். 1958இல் அமெரிக்காவில் இந்தியா மாநிலத்தில் பிறந்த மைக்கல் ஜக்ஸன் தன் ஒன்பது வயதில் இசைத்துறையில் தன் சகோதரர் நால்வருடன் இணைந்து பொப் பாடகராக அறிமுகமானார்.



ஐவரிலும் குறுகுறுவென இருந்த இவரின் குரலும் நடனமுமே மக்கள் மனதைத் தொட்டது. எனவே தன் பன்னிரு வயதில் தனியொரு நபருக்குரிய குழுவை உருவாக்கி, தனக்கென ஒரு நடன பாணியையும், பாடும் முறையையும் வடிவமைத்து உலகில் தனி இடத்தைப் பெற்றார்.

அன்று முதல் பல பாடல்களைப் பாடி இசைத் தட்டுகளை வெளியிட்டு கோடிக்கு மேல் கோடி சேர்த்தார். 1982இல் இவர் வெளியிட்ட 'திரில்லர' இசைத் தட்டு கோடிகளை மாத்திரமன்றி 8 கிராமிய விருதுகளையும் தட்டி உலக சாதனையாகப் பதிவானது.

இதன்பின் 1992இல் உடலால், மனதால் நிறவெறியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் முகமாக அறக் கட்டளை ஒன்றை நிறுவிப் பலருக்கு உதவி செய்தார்.

ஆனால் எத்தனை சாதனை படைத்தாலும் எத்தனை கோடிகளைச் சம்பாதித்தாலும் அவர் வாழ்வில் நிம்மதியும் மனநிறைவும் இருக்கவில்லை. இது அவர் செய்த பாவத்தின் கூலியா அல்லது எதிரிகள் செய்த சதியா என்பது ஒரு விவாதத்திற்குரிய விடயமாகும்.

இவர் இருமுறை மணம் புரிந்து மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையானபோதும் குடும்ப வாழ்வு ஒருசில ஆண்டுகளே நீடித்தது. இதன்பின் இவர்மேல் எழுந்த நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு மேடை நிகழ்வுகள் எதையுமே துணிந்து செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இவர் இயல்பாகவே தன் தோற்றம் பற்றிய தாழ்வுமனப்பான்மை கொண்டவராக இருந்த காரணத்தாலேயே இறைவன் தனக்களித் - திருந்த முகத்தை ஏற்காது பலமுறை தன் முகத்தை சத்திரசிகிச்சை செய்ததன் மூலம் தோற்புற்று நோய் வரும் சூழ்நிலையைத் தேடிக்கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

13.07.2009இல் 'இறுதித் திரை என்ற பெயரில் அவர் நிகழ்த்த இருந்த நிகழ்வுக்கு வெளியிடப்பட்ட 75,000 நுழைவுச் சீட்டுகளும் 4 மணி நேரங்களில் விற்பனையாகிவிட்டது என்று கூறுமளவிற்கு அவர் பாடலைக் கேட்க பலர் தயாராக இருந்த வேளையில் அவர் இறுதித்திரையை நிறைவு செய்யாமலே இறுதிப் பயணத்தை மேற்கொண்டார். அவர் மரணத்தில் பல முடிச்சுகள் இருந்தாலும் அமைதியைத் தேடிப் போய்விட்டார்.!

(நன்றி - தொடுவானம்)



# மாணவர் பகுதி

மாணவ மணிகளே! இது உங்களுக்கான பகுதி. இதில் உங்களுக்குப் பயனுள்ள சிறிய,பெரிய கட்டுரைகள் இன்னும் பொது அறிவோடு தொடர்பான விடயங்கள் பலவும் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். - பதிப்பாசிரியர்

## ஞாபகசக்தியை வளர்ப்பது எப்படி?

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**5. கேட்பதோடு நின்றுவிடாதே:**

படிப்பது என்பது காதால் கேட்பதோ அல்லது வாயால் படிப்பதோ மட்டும் அல்ல. பெரும்பான்மையான செய்திகள் நமக்குப் பார்வையின்மூலம் கிடைக்கின்றன. (உ-ம்) ஒரு திரைபடக் கதையை ஒருவர் சொல்லிக் கொடுத்து நாம் ஞாபகத்தில் வைப்பதைவிட படத்தை நேரடியாகப் பார்ப்பதன் மூலன் அதிகம். ஞாபகத்தில் வைக்கலாம். காரணம் படத்தை நேரடியாகப் பார்க்கும்போது கண், காது ஆகிய இரண்டு உறுப்புக்களின் வழியாகவும் நமக்குச் செய்தி கிடைக்கின்றது. எனவே படிக்கிறபோதும் எத்தனை உறுப்புக்களைப் பயன்படுத்த முடியுமோ அத்தனை உறுப்புக்களையும் பயன்படுத்த வேண்டும். கேட்பதோடு நில்லாமல் குறிப்பும் எடுக்க வேண்டும். அப்போது அந்தச் செய்தி ஆழமாக மனதில் பதியும்.

**6. சொல்லிப் பார்!**

சொல்லிப் பார்ப்பதன் மூலம் நமக்குக் கிடைத்த செய்தி குறைந்த கால ஞாபகத்திலிருந்து நீண்ட கால ஞாபகத்திற்கு மாற்றப்படுகிறது. இவ்வாறு நாம் சொல்லிப் பார்க்கவில்லையேல் நாம் பெரும்பான்மையான செய்திகளை மறந்துவிடக்கூடும்.

ஞாபகசக்தியின் எல்லை எப்படிப்பட்டது என்பதைக் கீழே காணலாம்.

ஒரு செய்தி முதல் தடவையாகக் கிடைத்த நேரத்திலிருந்து:

- 20 நிமிடத்தில் 53 வீதம் ஞாபகத்தில் இருக்கிறது 47வீதம் மறந்துபோகிறது.
- 1 நாளுக்குப்பின் 38 வீதம் ஞாபகத்தில் இருக்கிறது. 62 வீதம் மறந்துபோகிறது.
- 2 நாளுக்குப் பின் 31 வீதம் ஞாபகத்தில் இருக்கிறது. 69 வீதம் மறந்துபோகிறது.
- 15 நாளுக்குப்பின் 25 வீதம் ஞாபகத்தில் இருக்கிறது. 75 வீதம் மறந்துபோகிறது.
- 31 நாளைக்குப்பின் 22 வீதம் ஞாபகத்தில் இருக்கிறது. 78 வீதம் ம்றந்துபோகிறது.

மேற்கண்ட அட்டவணை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டது. இந்த அட்டவணையிலிருந்து நாம் கேட்ட செய்தியின் பெரும்பகுதி கேட்டு முடிந்த உடனே மறந்துபோகிறது என்பது புரிகிறது. எனவே திருப்பிப் பார்க்கும், அல்லது சொல்லிப் பார்க்கும் நிகழ்ச்சியை வகுப்புகள் முடிந்த உடனேயே அல்லது, குறிப்பிட்ட பாடத்தைப் படித்து முடித்த உடனேயே வைத்துக்கொள்வது நல்லது.

சொல்லிப் பார்க்கும் அல்லது திரும்ப நினைவுக்குக்கொண்டு வரும் இந்தச் செயல் மூன்று வழிகளில் செயல்படும்.

1. வாய் மொழியாகச் சொல்லிப் பார்ப்பது
2. மனதுக்குள் சொல்லிப் பார்ப்பது
3. காகிதத்தில் எழுதிப் பார்ப்பது

இவை மூன்றில் எழுதிப் பார்ப்பது அதிக பயன்தரக்கூடியது என்று ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. எனவே பாடத்தின் தன்மையைப் பொறுத்து 30 – 90 வீதம் நேரத்தைச் சொல்லிப் பார்ப்பதற்குச் செலவிட்டால் இந்தப் பாடங்கள் ஞாபகத்தில் நிற்கும்.

**7. தொடர்புபடுத்தக் கற்றுக்கொள்:**

உனக்குப் புதிதாகக் கிடைக்கும் செய்தியை உனக்கு ஏற்கெனவே தெரிந்த செய்தியோடு தொடர்புபடுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் கலையில் நீ எவ்வளவு திறமைசாலியாக இருக்கிறாயோ அதைப் பொறுத்துத்தான் உன்னுடைய ஞாபகசக்தியும் வளரும்.

உதாரணமாக நீ 'அனுஷ்' என்னும் ஒரு பெண் டாக்டரை சந்திக்கச் செல்கிறாய். இது புதிய செய்தி உன் அண்ணனின் மகளின் பெயரும் 'அனுஷ்'. எனவே அந்த டாக்டரின் பெயரை உன் அண்ணனின் மகளோடு தொடர்புபடுத்து. அப்போது நீ அந்த டாக்டரின் பெயரை நினைவில் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. உன் அண்ணனின் மகள் என்பதை மட்டும் நினைவில் கொண்டால் போதும். அந்தப் பெயரும் அதோடு சேர்ந்த நினைவுக்கு வரும்.

அல்லது உன்னுடைய வரிசை நம்பர் 211 என வைத்துக்கொள். உன் நண்பன் ஒருவரின் கார் நம்பர் 2112 என்று வைத்துக்கொள். கார் நம்பரை உன் வரிசை நம்பரோடு தொடர்பு படுத்தினால் போதும். உனது வரிசை நம்பரின் தொடக்க எண்ணை அதன் இறுதியில் சேர்க்க வேண்டும் என்று தொடர்புபடுத்திக்கொண்டால் அந்த எண் ஞாபகத்தில் எளிதில் நிற்கும்.

இவ்வாறு தொடர்பு படுத்தும்போது சில தந்திரங்களையும் பயன்படுத்தலாம். உதாரணமாக நீ நினைவில் கொள்ளவேண்டிய பொருட்களை ஒரு கதை வடிவமாக எழுதலாம், அமைக்கலாம்.

**அ. கதை வழித் தொடர்புபடுத்துதல்**

நீ சோப்பு, எண்ணெய், பயறு, அரிசி, பருப்பு, வெற்றிலை, பென், பென்சில், கண்ணாடி போன்ற பல பொருட்களை நினைவில் வைக்க வேண்டும் என்று வைத்துக்கொள். இதை ஒரு கதைபோல் அமைக்கலாம். நீ காலையில் துயில் எழும்பும்போது படுக்கையில் சோப்பு இருப்பதாகவும், படுக்கையைவிட்டுத் தரையில் கால் வைக்கும்போது தரையில் எண்ணெய் சிந்திக் கிடப்பதாகவும், வீட்டைவிட்டு வெளியே வரும்போது கதவின் அருகில் பயறு கொட்டிக்கிடப்பதாகவும், பஸ்டாண்டில் பருப்புக் கிடப்பதாகவும், பஸ்சில் ஏறும்போது படிக்கட்டில் வெற்றிலை கிடப்பதாகவும், பஸ்சில் நீ உட்காரும் இடத்தில் பென் கிடப்பதாகவும், பஸ்சிலிருந்து இறங்கும்போது பென்சில் கிடப்பதாகவும், தொடர்பு படுத்திக்கொள். இவ்வாறு உனக்குத் தெரிந்த இடங்களோடு ஞாபகத்தில் வைக்கவேண்டிய பொருளின் பெயரைத் தொடர்புபடுத்திக் கொண்டால் பொருட்களின் பெயரை எளிதில் ஞாபகத்தில் வைக்கலாம்.

**ஆ. சங்கிலித் தொடர்பு**

இன்னொருமுறை நீ நினைவில் வைக்கவேண்டிய பொருட்களை ஒன்றோடு ஒன்று ஒரு சங்கிலிபோல் தொடர்புபடுத்து (எடு) "மரம், கோயில், பள்ளிக்கூடம், கொடிமரம், கமுகு, கப்பல், காகிதம், மைனா, பசு, டாக்டர், சைக்கிள், கிழவன், பல், கயிறு, பனை, ரேடியோ" போன்ற பல பொருட்களை நினைவில் வைக்க வேண்டும் என்று வைத்துக்கொள்.

**சங்கிலி**

**மரம்-கோயில்-பள்ளிக்கூடம்-கொடிமரம்-கமுகு** ............ இப்படி ஒன்றோடொன்று தொடர்புபடுத்த வேண்டும். ஒரு மரம் அந்த மரம் **கோயில்** முன் நிற்கிறது. கோயிலின் அருகில் **பள்ளிக்கூடம்** இருக்கிறது. பள்ளிக்கூடத்தின் முன் **கொடி மரம்** நிற்கிறது. அந்தக் கொடிமரம் **கமுகு** மரத்தால் ஆனது. அந்த மரத்தின் வேர் ஓர் **கப்பலில்** நிற்கிறது. அந்தக் கப்பலில் ஒரு **விமானம்** நிற்கிறது. அந்த விமானம் **காகிதத்தால்** செய்யப்பட்டது. அந்தக் காகிதத்தில் ஓர் **மைனா** அமர்ந்துள்ளது. அந்த மைனா ஒரு **பசுவின** வாலைக் கொத்துகிறது. பசுவிற்குத் தடுப்பூசி போட **டாக்டர்** வருகிறார். டாக்டர் **சைக்கிளில்** வருகிறார். சைக்கிள் **கிழவனை** இடிக்கிறது. அந்தக் கிழவன் விழுந்து **பல்லை** உடைக்கிறார். அந்த உடைந்த பல்லை **கயிற்றால்** கட்டி இழுக்கிறார். அந்தக் கயிறு ஒரு **பனை** மரத்தில் கட்டப்பட்டுள்ளது. பனையின் உச்சியில் **ரேடியோ** ஒன்று உள்ளது.

இவ்வாறு பொருட்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி ஒரு சங்கிலிபோல் அமைத்தால், ஒரு பொருளை நினைவில் கொண்டால் அதன் முன்னும் பின்னும் உள்ள பொருட்கள் உடனே ஞாபகத்திற்கு வரும். உதாரணமாக சைக்கிள் என்ற உடனே அதன் முன்னுள்ள சங்கிலி டாக்டரும், **டாக்டர் சைக்கிள் கிழவன்** பின்னுள்ள சங்கிலியும் கிழவனும் நினைவுக்கு வருகிறார்கள். இப்படி நூறுக்கும் மேற்பட்ட பொருட்களை நினைவில் கொள்ளலாம்.

**பயிற்சி:**

(1) உன் மாணவனிடம், தோழியிடம், தோழனிடம் 20 பொருட்களின் பெயரைச் சொல்லச் சொல்லி, சங்கிலித் தொடர்பு முறைப்படி தொடர்புபடுத்தி ஞாபகசக்தியைச் சோதித்துப்பார்.

(2) பத்து அரசியல்வாதிகளின் பெயர்களைக் கதை வழித்தொடர்பு முறைப்படி தொடர்புபடுத்தி உன் ஞாபக சக்தியைச் சோதனையிடு.

(3) உன்னுடைய தமிழ் ஆசிரியர் பாடம் நடத்தி முடிந்த 20 நிமிடத்திற்குப்பின் உன்னால் எவ்வளவு செய்திகளை நினைவில் கொள்ள முடிகிறது என்பதை அறிய ஒரு பேப்பரில் அவற்றை எழுதிப்பார்.

(4) உன்னுடைய அறிவியல் பாடத்தில் வரும் கனிமங்களின் எடை, அடர்த்தி எண், உருகும் வெப்பநிலை, பயன்கள் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அர்த்தமுள்ள அமைப்பாகப் பிரிக்கப்பட்ட பட்டியல் தயார் செய்.

(5) ஒரு பாடத்தைப் படித்துவிட்டு அதன் முக்கியக் கருத்துக்களைத் தெரிந்தெடுத்து ஒரு காகிதத்தில் எழுது.

இறுதியாக, சாதாரணமாக மனிதன் தன் மூளையில் 10 வீதத்தைதான் பயன் - படுத்துகிறான் என்பது விஞ்ஞானபூர்வமான முடிவு. எனவே நாம் நினைப்பதைவிட அதிகமான ஞாபகசக்தி நம் ஒவ்வொரு - வருக்கும் உண்டு. அது மட்டுமல்ல நம் ஒவ்வொருவராலும் ஞாபகசக்தியை வளர்க்க முடியும். நல்ல ஞாபக சக்தி உள்ளவர்களாக விளங்க நாம் பெரிய புத்திசாலிகளாகத் திகழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சாதாரண, சராசரி மாணவர்கள்கூட பிறர் வியக்கும் அளவிற்குச் சிறந்த ஞாபகசக்தி உள்ளவர்களாக விளங்கலாம். இதற்கு மேலே கூறிய சிறு வழிமுறைகளும் துணை செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

*அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.*

தருவது தஞ்சை டோமி

தொடர் – 25

**கேள்வி :**

*விசுவாசமிருந்தால் அனைத்தும் நடக்குமே? நோய் நீங்க செபம் போதாதா? மருத்துவர் தேவையா?*

**பதில் :**

குணமளிப்பவர் கடவுள்தான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால், குணமாக்கும் கடவுள் மருத்துவர் தரும் மருந்து வழியாகவும் குணமாக்கலாம். செபத்தின் வழியாகவும் குணமாக்கலாம். இயேசு குணப்படுத்தும்போது மனிதர்கள், பொருட்கள் என்று பல்வேறு கருவிகள் வழியாக குணப்படுத்தியுள்ளதை நற்செய்தியில் காணும் நாம் மருத்துவரையும், மருந்தையும் இயேசு குணமளிக்கப் பயன்படுத்தும் கருவிகளாகப் பார்ப்பது நல்லது. ஆன்மீக நோய்களைக் குருக்கள் வழியாகவும், மனநல நோய்களை மனநல நிபுணர் வழியாகவும், உடல் நோய்களை மருத்துவர் வழியாகவும் கடவுள் குணப்படுத்துகிறார்.

விப.15:26இல் கூறியுள்ளதை ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்ப்பது நல்லது. நமது கட்டளைகள் யாவற்றிற்கும் கீழ்ப்படிந்து நடந்தால் நாம் உங்களைக் குணமாக்கும் ஆண்டவர் என்றுள்ளது.

அதாவது படிக்கமாட்டேன், ஆனால் விசுவாசத்துடன் வெற்றியை எதிர்ப்பார்ப்பேன் என்பதும், உழைக்க மாட்டேன். ஆனால், உயர்வை நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பேன் என்பதும் எந்தவிதத்திலும் வித்தியாசமின்றி இறைவனையே சோதிக்கும் காரியங்களே (இச. 6:16, மத் 4:17).

இயேசு "பார்வை பெறுக" என்ற சொல்லைப் பயன்படுத்தினார் (யோவா 4:17). இஸ்ரயேல் குழந்தைகளைக் காப்பாற்றிய மருத்துவச்சியை ஆண்டவர் ஆசீர்வதித்துள்ளார் (விப 1:20).

எசேக்கியாஸ் அரசன் குணமடைய அத்திப் பழத்தை அரைத்துக் கட்டச் சொல்லியுள்ளதை எசா 38:5இல் காண்கிறோம்.

இங்கு செபமா? மருந்தா? நாம் குணம் பெற என்று பட்டிமன்றம் நடத்துவதை விடுத்து, குணம் பெற செபம் செய்தாலும் மருந்து அருந்துவது தவறல்ல என உணர்த்துகின்றார்.

# ஜேர்மன் நாட்டிலிருந்து ஒரு தமிழ்க் குரு



ஜேர்மன் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடமிருந்து ஒரு புதிய அருட்பணியாளர் தோன்றியுள்ளார்.

இன்றைய உலக சனத்தொகையான 676.8 கோடி மக்களில் 17.3 விகிதம் கத்தோலிக் - கர்களாகும். இது, எத்தனை பேர்தான் கத்தோலிக்கத்தைவிட்டு பிற சபைகளுக்குச் சென்றாலும் கத்தோலிக்கரின் சராசரி எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாது அந்த இறைவன் காத்துவருவதைக் காட்டுகிறது.

ஆனால் ஐரோப்பாவில் 6.8 விகிதத்தாலும் யப்பான், இந்தோனேசியா அவுஸ்திரேலியா உள்ளிட்ட பகுதிகளில் 5.5 விகிதத்தாலும் குருத்துவ அழைப்பு குறைந்ததன் காரணமாக பல ஆலயங்கள் மூடப்பட்டுவரும் துன்பகரமான சூழலை ஈடுசெய்வது எமது அடுத்த தலைமுறையின் கடனாகும்.

புலம்பெயர் மண்ணில் நூற்றுக்கணக்கான நம்மவர்கள் மருத்துவர்களாகிவிட்டார்கள், பொறியியலாளர்களாகிவிட்டார்கள். ஆனால் இவை எல்லாமே வெறும் எண்களாகவும் எண்ணிக்கையாகவும் சொந்தத் தேவையை நிறைவு செய்வதாகவுமே அமைகின்றன.

ஆனால் ஒரு தமிழ்க் குருவை, அருட்பணி. டினேஷ் பேட்ருஸ் ரெகமி தில்லைநாதனை இந்த ஐரோப்பியக் கலாச்சாரத்தையும் தாண்டி ஜேர்மனியில் உருவாக்கியிருக்கின்றோம் என்பது அவர் பெற்றோர் மாத்திரமல்ல, தமிழர்களாகிய எல்லோருமே பெருமைப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதைக் கொட்டு முரசுடன் பறைசாற்றுவது ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் தலையாய கடமையாகும்.

நன்றி - தொடுவானம்

# திருவழிபாட்டில் திருப்பாடல்களின் பங்கு

அருட்சகோதரி எம். சாந்தனா (அ.கா)

### அறிமுகவுரை :

விவிலிய நூலின் ஒரு முக்கிய பகுதியான திருப்பாடல் அன்றுமுதல் இன்றுவரை எமது திருவழிபாடுகளில் சிறப்பிடத்தைப் பெறுகின்றன. இந்தத் திருப்பாடல்கள் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளான இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, உயர்வு, தாழ்வு என்பவற்றைச் சித்தரிக்கின்றன. இஸ்ராயேல் மக்கள் இவ்வாறு தங்கள் வாழ்க்கையின் பல கட்டங்களிலும் இறைவனைப் புகழவும், வாழ்த்தவும் அவருக்கு நன்றி கூறவும், அவரது உதவியைக் கூவி அழைக்கவும் திருப்பாடல்களைப் பாடி மகிழ்ந்தார்கள்.

புதிய ஏற்பாட்டின் இஸ்ராயேல் மக்களாகிய நாம் இந்தத் திருப்பாடல்களை எமது அன்றாட வாழ்வில் செபிப்பதன்மூலம் திருப்பாடல்களை நம்முடையதாக்கி, நாம் ஆன்மீக வாழ்வில் வளர்ந்து இறை அனுபவத்தில் முதிர்ந்து கிறிஸ்துவில் முழுமை அடைய வேண்டுமெனத் திருச்சபை விரும்புகின்றது. "திருச்சபை நற்கருணைப் பலியை நிறைவேற்றுவதோடு நில்லாமல் பிற வழிகளிலும் சிறப்பாக திருப்புகழ்மாலையைச் செபிப்பதாலும் ஆண்டவரை இடையறாது புகழ்கிறது. உலகம் முழுவதின் மீட்பிற்காகவும் பரிந்துபேசுகிறது" (இ.பணி 83) என்று 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளும் இதற்குச் சான்றுபகர்கின்றன.

திருச்சபையின் வழிகாட்டலின்படி நாம் திருப்பாடல்களைச் செபிக்கும்போது அன்றைய இஸ்ராயேல் மக்களின் வாழ்வோடு இணைந்த இறை அனுபவங்களை நம்முடையதாக்கி இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட திருப்பாடல்கள் அன்றும், இன்றும், என்றும் எம் ஆன்மீக செபவாழ்விற்கு உறுதியும், உரமும், வளமும், வாழ்வும் கொடுக்க வல்லன என்பதை உறுதிப்படுத்தலாம். கடந்தகால இஸ்ராயேல் மக்களின் கனவுகளையும் நினைவுகளையும் எமது நடப்பு வாழ்வோடு இணைத்து வழிபாட்டிற்கு உயிரும் ஊட்டமும் கொடுக்கின்றோம். சுருங்கச் சொன்னால் திருப்பாடல்கள் பழைய இஸ்ராயேல் மக்களையும் புதிய இஸ்ராயேல் மக்களாகிய நம்மையும் இணைக்கும் பாலமாக அமைகின்றன.

திருப்பாடல் என்ற சொல் Psalmos எனும் கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். நரம்புக்கருவிகளின் பின்னிசையில் பாடப்படும் பாக்கள் என இது பொருள்படும். திருப்பாடல்களை நாம் திருவிசைப்பா, அருளிசைப்பா, இறைபுகழ்ப்பா என்று தமிழ் முறைப்படி அழைக்கலாம்.

### திருப்பாடல்களின் ஆசிரியர்:

திருப்பாடலின் ஆசிரியர் தாவீது அரசரே என்று காலாகாலமாக வழங்கப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம். புதிய ஏற்பாட்டில் இயேசுவும் தாவீதுதான் ஒரு திருப்பாடலின் ஆசிரியர் என்று குறிப்பிடுகின்றார் (மத் 22:43). புனித சின்னப்பரும் தம் திருமுகங்களில் தாவீது திருப்பாடல்களில் ஆசிரியர் எனக்குறிப்பிட்டு - ள்ளார் (உரோ: 4:6). பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தாவீது திருப்பாடல்களின் ஆசிரியர் என்ற கருத்தைக் காணக்கூடியதாய் இருக்கிறது. சிறப்பாக 2ம் சாமுவேல் 22ல் தாவீது இசைத்த நன்றிப்பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் மறைநூல் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி தாவீதே எல்லாத் திருப்பாடல் - களினதும் ஆசிரியர் என்பதை நாம் முழுமையாக ஏற்கமுடியாது. உதாரணமாக விவிலியத்தின் முதல் ஐந்து புத்தகங்களையும் மோயீசன்தான் எழுதினார் என நாம் முழுமையாக ஏற்கமுடியாது. அவை பலராலும் பல்வேறுபட்ட காலங்களிலும் எழுதப்பட்டன. இருந்தாலும் மோயீசன் இவற்றின் நாயகன் (Hero) என்பதால் மோயீசன் இவற்றின் ஆசிரியர் என வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

இதேபோல்தான் தாவீதும் இசைவல்லுனன் என்பதாலும் திருப்பாடல்கள் சிலவற்றின் நாயகன் என்பதாலும் திருப்பாடலின் ஆசிரியர் தாவீதே என்று வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இறையியல் ஆராய்ச்சியாளர்கள் தாவீதிற்கும் திருப்பாடல்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்று எபிரேய மொழி மூலத்திலிருந்து கூறுகிறார்கள். இதிலிருந்து தாவீது எல்லாத் திருப்பாடல்களினதும் ஆசிரியர் என்பதை நிரூபிக்கவும் முடியாது. இறையியல் ஆராய்ச்சியாளர்கள் திருப்பாடல்களின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டும் இலக்கிய மரபு வழி நின்றும் சில திருப்பாடல்களுக்கு உரிய காலத்தைக் கணித்தபோதிலும் எல்லாத் திருப்பாடல்களுக்கும் உரிய காலத்தைக் குறிப்பிட முடியவில்லை.

மறைத்திரு தாவீது என்பவரின் கருத்துப்படி சில திருப்பாடல்கள் பபிலோனிய அடிமைத்த - னத்திற்கு (கி.மு 587) முற்பட்டவை. சில தாவீதரசன் காலத்தில் எழுதப்பட்டவை. சுருங்கச்சொன்னால் திருப்பாடல்கள் கால வரையறையின்றி இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களும் அனுபவங்களுமே. எனவே இவை எந்தக் காலத்தைச் சேர்ந்தவை எனத்திடமாகக் கூறமுடியாது.

கேர்மன் குங்கல் என்ற ஜேர்மனிய விவிலிய ஆய்வாளர் திருப்பாடல்களின் இலக்கியப்பாணி பற்றி ஒரு விரிவான ஆய்வு செய்திருக்கிறார். இவர் முதலில் திருப்பாடல்கள் இஸ்ராயேலரின் பழைய திருவிழாக்களின்போது உருவாகி இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தார். ஆனால் இவர் பின்பு திருப்பாடல்கள் பிற்காலத்தைய திருவிழாக்களின்போது உருவாகி இருக்கவேண்டுமென்று தன் கொள்கையை மாற்றிக்கொண்டார். திருப்பாடல்கள் பிற்கால திருவிழாக்களைக் குறிப்பிடுவதாலும் திருப்பாடல்களில் பிற்கால எபிரேய உரைநடை இருப்பதாலும் இவை திருவிழாக்களின்போது உருவாகின என்று திடமாகக் கூறமுடியும்.

திருப்பாடல்களை புகழ்பாக்கள், புலம்பல் பாக்கள், நன்றிப் பாக்கள், அரச பாக்கள், அறிவுரைப் பாக்கள் என ஐந்து வகையாக பிரிக்கிறார்.

1. **புகழ்பாக்கள்** - இவை படைப்பின் தலைவனும், மீட்பின் இறைவனுமாகிய இஸ்ராயேலரின் கடவுளையும் அவரின் மாண்பினையும் போற்றிப்பாடும் பாடல்கள்.

2. **புலம்பற் பாக்கள்** - இவை போர், பஞ்சம், கொள்ளைநோய் போன்ற துன்ப நிகழ்ச்சிகளின்போது இறை உதவியை நம்பிக்கையுடன் நாடும் இஸ்ராயேல் மக்களின் குரலாக அமைந்தன.

3. **நன்றிப் பாக்கள்** - நாட்டையும், மக்களையும், சகலவிதமான தீமைகளில் இருந்தும் காப்பாற்றிய எல்லாம் வல்ல இறைவனுக்கு இறைமக்கள் நன்றியுடன் பாடும் பாடல்.

4. **அரச பாக்கள்** - இவை அரசர்களின் மகிமை, அரசனின் வார்த்தை என்பன பற்றியும் அரசன் அரியணை ஏறும் விழா என்பவற்றின் - போதும் பாடப்படும் பாடல்கள்.


5. **அறிவுரைப்பாக்கள்** - இவை எப்போதும் அறிவுரை கூறுவது போலவோ இறைவனின் அறிவுரையைக் கேட்பது போலவோ அமையும்.

### இறையியல் கருத்துக்கள்

திருப்பாடல்கள் காலத்தாலும், கருத்தாலும் இலக்கிய அமைப்பு முறையாலும் வேறுபடுவதால் இவற்றின் இறையியலை ஆராய்தல் கடினம். இருந்தாலும் இஸ்ராயேல் மக்களின் மறையனுபவ முதிர்ச்சி இத்திருப்பாட்ல்களில் வெளிப்படுவதாலும் அனைத்துத் திருப்பாடல்களும் ஒரே கடவுளாகிய வரலாற்றின் ஆண்டவரை நோக்கி பாடப்பட்டு இருப்பதாலும் இவற்றின் இறையியலை ஓரளவு ஆராயலாம். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள தொடர்பின் மறையனுபவ முதிர்ச்சி இஸ்ராயேலரின் இறையியலாக மலர்கிறது.

### கடவுள் :

இஸ்ராயேல் மக்கள் தங்களின் கடவுள் மற்ற சமயக் கடவுளைவிட பலத்தாலும் வல்ல - மையாலும் பன்மடங்கு உயர்ந்தவர் என்று ஓர் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். எனவே அவர்கள் இறைவனைப் -பற்றிப் பேசும் மனித குணநலன்களையும், பண்புகளையும் கடவுளுக்கு கொடுத்துப் பேசினர்.



உதாரணமாக இறைவன் சிரிப்பார், கோபம் கொள்வார், மிக நெருங்கிய மனித முறையிலே உரிமையுடன் உரையாடி உறவுகொள்வார் என்று கருதினர். இவை இஸ்ராயேல் மக்களின் பாவனையில் இருந்து பழக்கப்பட்ட வழக்க முறைகளாகவோ அல்லது இறைவன்மேல் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் ஆழ்ந்த வெளிப்பாடாகவோ இருக்கலாம்.

மேலும் இவர்கள் இறைவனின் அன்பையும், வல்லமையையும், ஆற்றல்களையும் பல கோணங்களில் இருந்தும் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார்கள். இவர்கள் தாம் பெற்ற இறையனுபவத்தில் இருந்தும் வாழ்க்கை வழிமுறையில் இருந்தும் கடவுளை ஓர் இரங்கும் இறைவனாக (135, 144), மீட்பின் தலைவனாக, வரலாற்றின் நாயகனாக (43), இயற்கையின் ஆண்டவனாக வாழும் கடவுளாக (83), தூய்மையின் இருப்பிடமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்கள்.

### மனிதன் :

மனிதன் ஒன்றிமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டாலும் மகிமை உயர் நிலைக்கு உயர்த்தப்பட்டான் எனும் கருத்து இஸ்ராயேல் மக்களிடம் மேலோங்கி நிற்கிறது. எனவேதான் மனிதன் ஒரு மூச்சிற்கு ஒப்பானவன், அவன் வாழ்நாள் புல்லைப்போன்றது என மனிதனின் ஒன்றுமில்லாமையைப் பாடிய இஸ்ராயேல் மக்கள் வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர். மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர் என்று மனிதனின் மகிமையையும் மாட்சியையும் பாடத்தவறவில்லை.

மனிதன் ஒரு சமுகப்பிராணி. தனிமனிதன் சமுதாயத்தில், சமூதாயத்திற்காக வாழவேண்டிய ஒரு பொது உறுப்பினர் என்ற கருத்து இஸ்ராயேல் மக்களின் திருப்பாடல்களில் பரவலாகக் காணக்கிடக்கிறது. "பெரும் கூட்டத்தில் நான் உமக்கு நன்றி செலுத்துவேன். திரளான பொதுமக்களிடையே உம்மைப் புகழ்வேன் (34:18) போன்ற திருப்பாடல் வாக்கியங்களில் தனிமனிதன் சமுதாயத்தின் ஒரு பொது உறுப்பினன் எனும் கருத்து தெளிவாகிறது.

மனிதன் பாவம் நிறைந்தவன். எனவே அவன் தன் பாவநிலையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு மனம் திருந்தி நீதிமானாக முயல வேண்டுமென்ற கருத்தும் இஸ்ராயேல் மக்களிடம் காணப்பட்டது. எனவேதான், "உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன். உம் திருமுன்னிலையில் செய்தேன்" என்று பாவத்தை ஏற்று மனம் வருந்துவதையும், "ஆண்டவரே, உம் இல்லத்தில் தங்கி வாழ்வோன் யார்?" என்று நீதிமானாக ஏங்குவதையும் காணலாம்.

அரசர்கள் தங்களுக்குக்கீழ் உள்ள சிற்றரசர்களுடன் கொண்டிருந்த உறவு இஸ்ராயேல் மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது. பேரரசனும், சிற்றரசனும் செய்துகொள்ளும் உடன்படிக்கையை அவர்கள் விசுவாசத்துடன் கடைப்பிடிக்க வேண்டும். இஸ்ராயேல் மக்கள் என்றும் கைவிடாத இறைவனின் நிலைபெயரா அன்பை உடன்படிக்கைக்கு ஒப்பிடுவதை திருப்பாடலில் காணலாம்.

இறைவனோடு உறவாடி, உரையாடி ஓர் உயர்ந்த நிலையை அடையவும், தன் தேவைகளைக் கேட்கவும், கிடைத்த உதவிக்கு நன்றி செலுத்தவும், மனிதன் கடவுள்பால் தன் உள்ளத்தை எழுப்புவதே செபமாகும். உண்மை -யில் உயர்ந்த செபம் உள்ளத்தாலும் செயலாலும் ஒன்றுபட்டு இறைவனை நோக்கி எழும்ப வேண்டும். வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒருவன் தன் உண்மை நிலையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு இறைவனிடம் உள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையில் இறை உதவியை நாடுவதே செபம். திருப்பாடல்கள் இந்த எல்லாப் பண்புகளையும் தம்முள் கொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் செபிக்கக்கூடிய ஒரு சிறந்த உயர்ந்த செபமாக விளங்குகிறது.

எனவே திருப்பாடல்களை நாம் செபிக்கும்போது இறைவனுக்கும் எமக்குமுள்ள உறவைப் புதுப்பிப்போம். இதன்வழி இறைவனை எம் வாழ்வில் அனுபவிப்போம். மற்றவருக்காகவும் செபிப்போம். இதனால் திருப்பாடல்கள் எம்மிடையே இசைமீட்டும் இராகமாக அமையட்டும்.

## டைட்டாட்டினிக் கப்பலில் உயிர் தப்பிய இறுதி நபரும் காலமானார்

டைட்டானிக்! இந்தப் பெயரைக் கேட்கும்போது எவ்வளவு மலைப்பைத் தருகின்றதோ, அதே அளவுக்கு பயமும் தொற்றிக்கொள்கிறது.

இக்கோர நிகழ்வு நடைபெற்றது 1912இல் ஆகும். அன்றைய காலகட்டத்தின் மிகப் பெரிய கலம் (கப்பல்) அது. 2,227 பயணிகளுடன் தன் முதல் பயணத்தை இக்கலம் ஆரம்பிக்கும்போதே அதன் முடிவுரையும் எழுதப்பட்டு விட்டதை உணராமல் எல்லோரும் வெகு உற்சாகமாகப் பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் இறை சித்தம் வேறுவிதமாக எழுதப்பட்டிருந்தது. நடுக்கடலில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் கடலில் மிதந்துகொண்டிருந்த பனிமலையில் டைட்டானிக் மோதப்போவதை கப்பல் தளபதி அறிந்து திருப்ப முயன்றபோதும் போதிய நேர அவகாசம் இல்லாத காரணத்தால் டைட்டானிக் பனிப்பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது. 53,147 கிலோ இரும்பால் செய்யப்பட்ட டைட்டானிக் வெறும்



தண்ணீர் கட்டியில் மோதியதில் ஏற்பட்ட பாரிய வெடிப்பினால் நீர் உட்புகத் தொடங்கியது. உட்புகுந்த நீரினால் டைட்டானிக் தாழ்வதற்கு 2 மணி 40 நிமிடங்கள் எடுத்தன. இத்தருணத்தைப் பாவித்து பெரியோர்கள், ஆண்கள் உயிர்த் தியாகம் செய்து குழந்தைகளையும் பெண்களையும் தற்காப்புக்கு வைக்கப் - பட்டிருந்த சிறிய வள்ளங்களில் ஏற்றிவிட்டுத் தாம் கடலுக்கு இரையானார்கள்.

இருப்பதைக் கொடுப்பது தானம் தர்மம் என்றால், தான் அடுத்த நிமிடம் விறைத்து இறப்பதை அல்லது கடல் மீன்களுக்கும் சுறாக்களுக்கும் இரையாகப் போவதை உணர்ந்திருந்தும் உயிர்த் தியாகம் செய்த அம்மனிதர்களை நாமும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கத்தான் வேண்டும்.

அவ்வாறாக உயிர் பிழைத்தவர்களில் இரண்டு மாதக் குழந்தையாக இருந்த மில்வினா டீனும் அவர் தாயாரும் சகோதரரும் அடங்குவர். ஒருசில ஆண்டுகளின் முன் இவருடைய தாயாரும் சகோதரரும் இறந்து விட தன் வீட்டிலேயே வறுமையுடன் தனிமையில் மில்வினா வாழ்ந்து வந்தார். கடைசிக் காலத்திலும் கடவுள் வழி காட்டியது போல் 1985ஆம் ஆண்டளவில் டைட்டானிக் கப்பலின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன்னுடன் டைட்டானிக் காலத்தில் இருந்து தப்பி வரும் வேளையில் கொண்டுவந்த பொருட்களை ஏலத்தில் விட்டு கடைசிக் காலத்தை ஓட்டி வந்த மில்வினா டீன் என்னும் இப்பெண்மணி தனது 97ஆவது அகவையில் கடந்த 30.05.2009 அன்று காலமானார். மில்வினா டீன் மரணத்துடன் டைட்டானிக் யுகம் முடிவுற்றது என்று டைட்டானிக் சபை அறிவித்துக் கதையை மூடிவிட்டது.

- (நன்றி - தொடுவானம்)

## 'நீ இன்றி வாழ்வேது' கிறிஸ்தவப் பாடல்கள் இறுவட்டு வெளியீடு

(20ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் கல்வி வலையத்தின் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. பயஸ் ரதி பீரிஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் திரு. ரி. தனேஸ்வரன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை கல்லூரியின் அதிபர் எஸ். சண்முகலிங்கம் வழங்கினார். இறுவட்டு பற்றிய மதிப்பீட்டை வங்காலைப் பங்குத்தந்தை ஏ. ஜெயபாலன் குரூஸ் வழங்கினார்.

ஈற்றில் முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுவட்டை வெளிக்கொணர்ந்த திருமதி ஜெனிவி ஸ்ரீபன் அவர்கள் ஏற்புரையும் நன்றியுரையும் வழங்கினார்.

குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

# இன்றைய சூழலில் குருத்துவப் பணி

## புதிய வினாக்கள்

அருள்பணியாளர்களின் சிறப்புப் பணியும் தனித்தன்மையும் என்ன என்ற கேள்விகள் எழுந்துகொண்டேயிருக்கின்றன. மாறிவரும் சூழலில், அதுவும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு இந்தக் கேள்விகள் பரவலாகக் கேட்கப்படுகின்றன.

உலகத்தில் ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி மாறிவரும் சூழ்நிலைகளில் ஒன்றாகும். இறைநம்பிக்கை என்பது இயல்பாக, சமூக நிர்ப்பந்தத்தால், எளிதாக உருவாவதில்லை. இறைநம்பிக்கையின் தேவை நிரூபிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. மேலும் உளவியல் துறையின் வளர்ச்சியானது பணிக்குருக்களின் அறிவுரை – ஆலோசனைப் பணிகளை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்கமானது பொதுநிலையினரின் பங்கேற்பை வலியுறுத்தியது -மல்லாமல் அவர்கள் திருச்சபையின் குருத்துவத்தில், பொதுக்குருத்துவத்தில் பங்கேற்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்த நிலையில் அருள்பணியாளர்களின் சிறப்பியல்பும் பணியும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டியதாகியுள்ளது.

மதச்சடங்குகளைச் செய்யும் பூசாரிகள் என்ற வகையில் எல்லா மதங்களிலும் குருக்கள் உள்ளனர். இவர்களில் சிலர் முழுநேரப் - பணியாளராகவும் உள்ளனர். ஆனால் அது ஒரு தொழிலாகப் பலவேளைகளிலும் பார்க்கப்படுகிறது. கிறிஸ்தவப் பார்வையிலோ பணிசெய்வதற்கான அழைப்பு என்ற புரிதலே மேலோங்கி நிற்கின்றது. அதுமட்டுமன்றி அண்மைக்காலப் பாரம்பரியத்தில், பிளவுபடாத, ஒருமுகமான அர்ப்பணம் குருத்துவம் என்ற வகையில் பணிக்குருக்கள் மணத்துறவு பூணுவதும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய அர்ப்பணம் நிறைந்த பணியின் தன்மை என்ன என்று தெளிவுபடுத்துவது அவசியமாகிறது.

குருக்களைக் கடவுளின் பிரதிநிதிகளாகப் பார்த்து அவர்களே இறைவனாகிய கிறிஸ்துவைக் கையில் தொடும் ஆற்றல் பெற்றவர்கள், இறைமகனைத் தங்கள் வார்த்தையில் பிரசன்னமாக்குகிறார்கள் என்று சொல்லி வானவரைவிட உயர்ந்த ஆற்றலையும் மகிமையையும் அளிக்கும் புரிதலானது இன்றைய இறையியல், கிறிஸ்தியல், வழிபாட்டியல் தெளிவுகளின் முன் பொருத்தமானதாக இல்லை.

இந்நிலையில் இயேசுவின் குருத்துவத்தின் தன்மையையும் பணியையும் ஆய்வுசெய்து அதன் பின்னணியில் இன்றைய காலகட்டத்தில் இது எடுக்கும் வடிவத்தையும் விவரிக்க முற்படுவது பயனுள்ள புரிதலைத் தரலாம்.

## இயேசுவின் குருத்துவம் வித்தியாசமானது

இயேசுவின் காலத்தில் குருக்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் இருந்தார்கள். இவர்கள் ஆலயத்தில் பலிகள் செலுத்தும் உரிமை பெற்றிருந்தார்கள். இந்த உரிமை பிறப்பு வழியாக வந்தது. யாக்கோபின் புதல்வர்களில் ஒருவரான லேவியின் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்றோ ஆரோனின் வம்சாவழிகள் என்றோ கருதப்பட்டனர். இயேசு இந்த வகையைச் சார்ந்தவர் அல்ல. குருகுலத்தில் பிறக்கவில்லை. பலிகள் செலுத்தவில்லை.

இயேசு செபக்கூடங்களில் போதித்தார். அவருடைய போதனை வித்தியாசமானதாக இருந்தது. மக்கள் மத்தியில் வியப்பையும் மலைப்பையும் ஏற்படுத்திற்று. அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரமுள்ளவராகப் போதித்து வந்தார் (மாற். 1:22).

மறைநூல் அறிஞர் சட்டங்களையும் ஏடுகளையும் விவரித்திருப்பார்கள் - விளக்கியிருப்பார்கள். நடைமுறை சூழ்நிலையில் எவ்வாறு புரிந்துகொண்டால் அவற்றின் நோக்கம் நிறைவேறும் என்று சிந்தித்திருக்கமாட்டார்கள். ஆளும் வர்க்கம் கொடுத்த அழுத்தத்தின் அடிப்படையில் சட்டத்திலும் இறைவாக்கினரிலும் சிலரை விட்டுவிட்டு வேறு சிலவற்றை முன்வைத்திருப்பார்கள். விளைவு மக்களின் வாழ்வில், அடித்தட்டு மக்களின் வாழ்வில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இன்று மனித மைய மறைக்கல்வியில் வலியுறுத்துவது போல வாழ்க்கை அனுபவங்களினூடே அவர் விவிலியத்தைப் புரிந்துகொள்ள முற்பட்டிருக்க வேண்டும். இது அவருக்கு பல தெளிவுகளைத் தந்தது. அதன் விளைவாக இயேசுவின் போதனையிலும் பணியிலும் பல மாற்றங்கள் தெரிந்தன. இது ஆளும் வர்க்கத்திற்கு ஏற்றதாக இருக்கவில்லை. முதலில் பரிசேயர்களோடு அதன்பின் தலைமைக் குருக்களோடும் மோதலை ஏற்படுத்திற்று.

இயேசுவின் இப்பணியை யூத சமுதாயத்தில் இருந்த பல்வேறு சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றின் பணியாகவே பார்த்தார்கள். ஒரு புதிய இறைவாக்கினர் வந்திருக்கிறார் என்று சிலர் கருதினார்கள். அதைவிட மேலாக அவரே எதிர்பார்க்கப்பட்ட மெசியா, அவரிலே யூத சமுதாயத்திற்கு விடிவுகாலம் வந்துவிட்டது என்று வேறு சிலர் கருதினர்.

### யாருமே அவரை ஒரு குருவாகக் கருதவில்லை

தங்கள் ஆதிக்க நலன்கள் இயேசுவின் போதனையாலும் செயல்பாடுகளினாலும் பறிபோகும் ஆபத்தைத் தலைமைக் குருக்களும் அவர்களது வர்க்க நண்பர்களும் உணர்ந்தார்கள். சட்டம் உருவாக்கும் தீட்டினால் பெருவாரியான பாமர மக்களை அடக்கிவைத்து பணம் சுரண்டுவதற்கு இருக்கும் வாய்ப்பு பறிக்கப்படுவதை உணர்ந்தனர். எது பாமர மக்களின் ஆதரவைப் பெற்றதோ அதுவே பணக்கார வர்க்கத்தின் எதிரியாகக் கருதப்பட்டது. தங்களது சமூக பலத்தை ஒன்றுசேர்த்து உரோமை வல்லரசைப் பயன்படுத்திக்கொண்டு இயேசுவைக் கொன்றார்கள். இயேசு பாமர மக்களுக்காக, பாவிகளுக்காகக் கொல்லப்பட்டார்.

இயேசுவின் இறப்பிற்குப் பிறகும் திருத்தூதர்களும் இயேசுவின் சீடர்களும் தங்களை யூதமதத்தின் ஒரு பிரிவாகவே பார்த்தனர். ஆலயத்தில் வழிபடச் சென்றனர் செபக்கூடத்திற்குச் செல்லும் பழக்கத்தை விட்டுவிடவில்லை. இயேசு விரும்பியபடி அப்பம் பிட்டனர். ஆனால் அதனை வீடுகளில் வைத்துக் கொண்டனர். எப்போது யூதமத அமைப்பு சீடர்களைப் புறந்தள்ளிற்றோ அதுவரையிலும் இந்த நிலையே தொடர்ந்தது. அப்போதும் இயேசுவைக் குருவாகக் கருதவேண்டுமென்று தோன்றவில்லை. அதற்கு காரணமுண்டு ஆலயத்தில் பலிகளும் வழிபாடும் நடந்துகொண்டிருந்தன. லேவியரும் குருக்களும் இவற்றைச் செய்துகொண்டிருந்தார்கள்.

## பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் மறைதலும் இயேசுவைக் குருவாகப் புரிதலும்

எருசலேம் தேவாலயம் தரைமட்டமாக்கப்பட்டது முக்கியமான நிகழ்வாகும். பலிகள் நிகழ்த்தும் வாய்ப்பு இல்லாமலாகிவிட்டது. யூதர்களும் பல திசைகளுக்குச் சென்றார்கள். குருக்கள் லேவியர் போன்றோருக்கு வேலையில்லாமலாகிவிட்டது. இந்த நிலையில்தான் புதிய இஸ்ராயேலாகவும் புதிய எருசலேமாகவும் தன்னைப் பார்த்த துவக்கத் திருச்சபை குருத்துவத்தை மறுஆய்வு செய்துதான் ஒப்புக்கொடுக்கும் பலி எப்படிப்பட்டது என்று சிந்திக்கத் தொடங்குகின்றது. அதன் விளைவுதான் இயேசுவை குருவாகப் பார்த்த நிலை.

## புதிய பலியும் குருத்துவமும்

ஆனாலும் இயேசுவை ஒரு வித்தியாசமான குருவாகவே ஆதித்திருச்சபை உணர்ந்தது. இதனை எபிரேயருக்கு எழுதிய திருமுகம் விளக்குகிறது. எபிரேயர் 10: 5-7இல் “பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எனவே நான் கூறியது, என் கடவுளே உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன் என்றிருக்கிறது” இது திருப்பாடல் 40லிருந்து எடுக்கப்பட்டதாகும். அதில், “என் செவிகள் திறக்கும்படிச் செய்தீர்” என்றிருப்பது எபிரேயர் திருமுகத்தில், “ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர்” என்றிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகளையும் காணிக்கைகளையும்



விரும்பாத இறைவன் புதியதொரு பலிக்கு ஏற்பாடு செய்கிறார். அதற்கு அவர் செய்வது இயேசுவுக்கு ஓர் உடலைக் கொடுப்பது. இந்த உடல்தான் இனிமேல் பலியாகவேண்டும். அதைத்தான் இறைவன் ஏற்றுக்கொள்வார். இதனைப் புரிந்துகொண்ட இயேசுவும் அந்தப் பலியை ஒப்புக்கொடுக்க முன்வருகிறார் என்பது துவக்கத் திருச்சபையின் புரிதல். அது அவருடைய உயிர்ப்பலி. உயிரைப் பலமுறை கொடுக்க முடியாததால் ஒரே ஒருமுறை ஒப்புக் - கொடுத்துள்ளார் என்று எபிரேயர் 10:12 சொல்கிறது. இவ்வாறு இயேசு இறைவனுக்கு ஏற்புடைய பலியை ஒப்புக்கொடுத்து உண்மையான குருவாக விளங்குகிறார். அவருடைய குருத்துவம் வித்தியாசமானது. துவக்கத் திருச்சபையானது இயேசுவை குரு என்று தாமதமாகவே அழைத்தாலும் அவருடைய இறப்பு என்பது மக்களுக்காகச் செய்யப்பட்ட பலியாகும் என்ற புரிதல் நற்செய்தி ஏடுகளில் பரவலாகக் காணக்கிடக்கிறது.

## அர்ப்பண வாழ்வும் குருத்துவமும்

இயேசு வித்தியாசமான குரு. அவரது அர்ப்பணமே - அர்ப்பண வாழ்வே, அர்ப்பண இறப்பே - அவர் செலுத்தும் பலியாகும். பலி ஒப்புக்கொடுக்கும் குருவும் பலிப்பொருளும் ஒரே ஆள்தான். மக்களுக்காகப் பலியாகும் வாழ்வே இயேசுவின் குருத்துவமாகும். இயேசுவின் வாழ்வு (குருத்துவமும் பலியும்) எதில் அடங்கியிருந்தது? இயேசு சிறந்த தலைவராகவும் ஆயனாகவும் விளங்கினார். தலைவர் எப்படியிருக்க வேண்டுமென்று எசேக்கியேல் இறைவாக்கினர் 34ஆம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல மேச்சலிடத்தைக் காட்டவேண்டும் (34-14). நலிந்தவற்றைத் திடப்படுத்தி, பிணியுற்றவற்றிற்குக் குணமளித்து, காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போட்டு காணாமல் போனவற்றைத் தேடி வழிதப்பிய - வற்றைத் திரும்பக் கூட்டிவரவேண்டும் (34:4). மேய்ச்சல் நிலத்தில் கொழுத்த ஆடுகள் செய்யும் அநீதிக்கு எதிராக நலிந்த ஆட்டிற்கு நீதி வழங்கவேண்டும் (34:17-22). நீதி நிறைந்த செழுமையான வாழ்வுக்கு வகை செய்வதே தலைவனின் கடமை. அதில் ஏழைகளும் பலவீனமானவர்களும் சிறப்புக் கரிசனை பெறுகின்றனர்.

இயேசுவும் வாழ்வைப் பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு (யோ 10:10) பணிசெய்தார். மனிதர்களை மையமாக வைத்தே அவருடைய பணிகள் நிகழ்ந்தன. சட்டங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் - இவையெல்லாம் மனிதர்களின் நலனுக்காகவே இருக்கவேண்டும் என்ற புரிதல் இயேசுவிடம் தெளிவாகவே இருந்தது. அதனை அவர் பறைசாற்றியது மட்டுமல்ல அதனடிப்படையில் செயல்படவும் செய்தார். இது ஆளும் வர்க்கத்துடன் முரண்பாடுகளை உருவாக்கியது. இயேசுவின் செயல்பாடுகளாகத் தொகுத்துச் சொல்லும் மாற்கு ஐந்து முரண்பாடுகளையும் மோதல்களையும் சுட்டிக்காட்டுகின்றார். (2: 1-3:6) அதன் முடிவிலே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பரிசேயரும் ஏரோதியரும் தங்களுக்குள் சமரசம் செய்துகொண்டு இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர் (மாற்கு 3:6).

## இறையனுபவம் கொண்ட சமூகப் பணியும் குருத்துவமும்

மனித நலனுக்காக உழைத்து சமூக சீர்திருத்தத்தை முன்வைத்து அதில் ஏற்பட்ட எதிர்ப்பில் தன் உயிரை இழந்தார் இயேசு. இதுதான் அவரது குருத்துவப் பணியும் பலியும். இந்தப் பணியில் இறையனுபவம் நிரம்பியிருந்தது.

இறையனுபவத்தில் மூன்று கூறுகளைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டலாம். ஒன்று இறையனுபவம் பகுத்தறிவு சார்ந்தது. எது சரி எது நல்லது என்று தீர்மானிக்கும் ஆற்றலோடு தொடர்புடையது. மனசாட்சியைச் சார்ந்தது. எது நல்லது என்று சிந்திக்கும்போது நம்மை மட்டுமே மையமாக வைத்துத் தீர்மானிப்பது பகுத்தறிவிற்குப் புறம்பானதல்ல. நம்மைக் கடந்து பொதுநலனைக் காணவும் நம்மைக் காயப்படுத்திக்கொண்டு பொதுநலனுக்காக அர்ப்பணிக்கவும் நம்மில் ஆற்றல் உள்ளது. இதுவே இழப்பு அனுபவம், அர்ப்பணம் என்பது. இதுவும் இறையனுபவத்தின் பண்பாகும்.

இதனைச் செய்யும்போது கடமைக்காகவும் கட்டாயத்தினாலும் என்றில்லாமல் உறவோடு செய்வது, அதுவும் அன்பும் ஆற்றலும் நிறைந்த ஒருவரோடு உடனிருந்து செய்வது, மிகுந்த பாதுகாப்பையும், நிம்மதியையும் மகிழ்ச்சி - யையும் தருவது. இந்த மூன்றும் இறையனுபவத்தோடு சிறப்பாக இணைந்த - வையாகும்.

இயேசுவின் குருத்துவ அர்ப்பணமும் இவ்வாறு இறையனுபவத்தில் விரவி இருந்ததாகும். அவர் சாவைக்கண்டு பின்வாங்காமலிருந்தாலும் அதற்காக விவேகமற்று எதிரிகள் கையில் விழவில்லை. தலைமறைவாக இருந்திருக்கிறார். தன் உயிர் போனாலும் பரவாயில்லை ஏழை மக்கள் வாழ்வு பெறவேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. அதில் அவர் நிறைவோடிருந்தார். விரக்தியாகச் சாகவில்லை. ஏனெனில் அவர் செய்தது அனைத்துமே அன்பின் அழைப்பிற்குப் பதில் மொழியாக இருந்ததுதான்.

## பொதுக் குருத்துவமும் பணிக் குருத்துவமும்

இறையனுபவத்தில் தோய்ந்த சமூக சீர்த்திருத்தப்பணி இயேசுவின் குருத்துவமாக இருந்ததென்றால் அதுவே திருச்சபையின் குருத்துவமாகிறது. சில தலைவர்களை நியமித்து அவர்கள் வழியாகத் திருச்சபையை உருவாக்கவில்லை. இயேசுவின் சீடர்களிலிருந்து சில தலைவர்களை ஏற்படுத்தினார். இறைமக்கள் குழுவே இயேசுவின் அருட்சாதனம். அவர்களே இயேசுவின் பணிப்பொறுப்பை ஏற்றவர்கள். இறைமக்கள் கூட்டத்தை குருத்துவக்குலமாக பேதுருவின் முதலாவது மடல் குறிப்பிடுகின்றது. (2:9)

இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இறைமக்கள் குழுவையே முதன் முதலாவதாக திருநிலைப்படுத்தப்பட்டதாகப் பார்க்கிறது. “(ஆண்டவர் இயேசு) இத்திருநிலைப்பாட்டில் தம்முடைய மறை உடல் முழுவதும் பங்கடையச் செய்கிறார். நம்பிக்கை உடையோர் யாவரும் அவரில் தூய, அரச, திருப்பணியாளர் குலமாக ஆக்கப்படுகிறார்கள்: இயேசுக் கிறிஸ்துவின் வழியாகக் கடவுளுக்கு ஆவிக்குரிய பலிகளை ஒப்புக்கொடுக்கிறார்கள்” (திருப்பணியாளர் பணியும் வாழ்வும்,2)

இந்தக் குருத்துவ உடலுக்கு பணிசெய்யும் படியாகவே பணிக்குருக்கள் ஏற்படுத்தப் - படுகிறார்கள். “அதே ஆண்டவர் நம்பிக்கை கொண்டோரை ஓர் உடலாக ஒன்றுசேர்க்கும்படி, அவர்களில் சிலரைப் பணியாளராக ஏற்படுத்தினார்” (அதே எண் 2).

இயேசுவின் குருத்துவப் பணியில் ஒரு சமூகமாக, ஓர் உடலாக இறைமக்கள் பங்கெடுக்கவேண்டுமென்பது அவரது விருப்பம். உடல் உடலாகச் செயல்படுவதற்கு, இணைந்து செயல்படுவதற்கு தலை தேவை தலைமை தேவை - இந்தத் தலைமைப் பணியைச் செய்வதே திருப்பணியாளர்களின் தனித்தன்மையாகும்.

குழு உருவாவதற்கும், குழுவாகச் செயல்படுவதற்கும் தலைமை தேவை. உயிரூட்டுதல், ஏவுதல் தருதல், முடக்கிவிடல், உந்துதல் தரல், நெறிப்படுத்தல் தலைமையின் பணியாகும். அதுபோலவே ஒரு முகமாகச் செயல்படுவதற்குத் தேவையான ஒருங்கி - ணைத்தல் தலைமையின் பணியாகும். முரண்படாமல் இசைவாகச் செயல்படுவதற்கு தலைமையின் இந்தப்பணி அவசியம்.

பொதுநலனுக்குக் குந்தகம் விளைவிப்போர், இணைந்து செயல்படாதோர். தீமை செய்வோர் ஆகியோரின் செயல்பாடுகளை குறித்துக்காட்டி, தவறு என்பதைத் தெளிவுபடுத்தி மனம்மாற விரும்பாமல் இருப்போருக்குத் தண்டனை கொடுத்துக் குழுவை நெறிப்படுத்தும் அதிகாரம் தலைமைக்கு உண்டு. இவற்றையெல்லாம் திருச்சபையில் உத்தரவாதப்படுத்தும் பொறுப்பு பணிக்குருத்துவத்தினுடையதாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)

முன்பு நம் முன்னோரும் இப்போது புலம்பெயர் நாடுகளில் நாமும் செய்கின்ற பாவங்களில் இருந்து மனந்திருந்தி வாழ இறைவன் அழைக்கின்றார்!

# பாவத்தின் சம்பளம்!

அருட்பணியாளர் அன்ரனி பாலா தற்போது ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனராகச் செயற்பட்டு வருகின்றார். இவரை ஆசிரியராகக்கொண்டு தற்போது வெளிவரும் 'தொடுவானம்' என்ற இரு மாதக் கத்தோலிக்க பத்திரிகையின் யூலை, ஓகஸ்ட் மாத இதழின் ஆசிரிய தலையங்கத்தில் அடிகளார் எழுதியுள்ள சிந்தனைகளைத் தூண்டும் கருத்துக்களை இங்கே தருகின்றோம். (பதிப்பாசிரியர்)

அண்மையில் வன்னி என்னும் நெருப்பாற்றைக் கடந்து வந்த சிலரோடு தொலைபேசியில் உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்போது அவர்கள் அதிர்ச்சியில் உறைந்தவர்களாக எதுவும் பேச முடியாதவர்களாக இருந்தனர். ஒருசில வார்த்தைகளே வாயில் இருந்து வெளிவந்தன. ஒருவேளை தாங்கள் காப்பாற்றப்பட்டு விட்டோமா அல்லது இன்னும் அங்கேதான் இருக்கின்றோமா என்ற அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம். "இறைவனுக்கு நன்றி கூறுங்கள்" என்று கூறினேன்.

'இறைவன்' என்று நான் கூறிய வார்த்தை அவர்களை மேலும் மௌனத்துக்குள் ஆழ்த்தியது. இரண்டு காரணங்களை நான் எண்ணினேன்.

ஒன்று, இறைவன் ஏன் தமிழ் மக்களாகிய எம்மினத்தின் பலரை இவ்வாறு அவலமாகச் சாக அனுமதித்தார்?

இரண்டு, நாம் ஏன் எவ்வாறு காப்பாற்றப்பட்டோம்?

இவ்வாறு அவர்கள் எண்ணியிருக்கலாம். தமிழ் மக்களுக்கு ஏன் இந்த அவல வாழ்வு என்று எண்ணும்போது எந்த மனித வார்த்தைகளிலும் இதற்கு விளக்கம் பெற முடியாது. எந்த இணையத்தளமும் மனிதர்களும் குழப்புமேயொழிய தேடற் பசியைத் தீர்க்காது. மாறாக இறைவார்த்தைதான் எமக்கு வழி காட்டும்.

இறைவன் இந்த இறப்புக்கள், இழப்புக்கள், படுகாயங்கள் உடல் உள ஊனங்கள், பசி பட்டினி எல்லாவற்றையும் அனுமதிப்பதற்கு மாபெரும் காரணம் உண்டு.

உலகில் முதல் மனிதனின் பாவத்தின் காரணமாக நுழைந்த தீமையை உலகு முடிவுவரை தந்தையாகிய இறைவன் எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறார். மனித சுயநலம், மனக்கடினம் போன்ற எல்லாப் பாவங்களும் எவ்வளவு கொடியன என்றால் இறைவன் தன் மகனையே சித்திரவதைக்குள்ளாக்கி சிலுவையில் எமக்காய்த் தொங்க விடுமளவிற்கு கொடியன. இயேசு தன் தந்தையோடு ஒத்துழைத்து தன்னையே கொடிய துன்பங்களுக்கும் சாவிற்கும் கையளித்தார்.

தலையாகிய கிறிஸ்து தீமையைத் தோற்கடிக்க இறந்தாரென்றால் அவரது மறையுடலாகிய நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் இறப்புகள், இழப்புகள், துன்பங்கள் மூலம் அவருடைய சிலுவைச் சாவை முழுமைப்படுத்தி இறைவனின் முயற்சியில் ஒத்துழைக்கின்றோம். நம்மில் பலர் புலம் பெயர் நாடுகளிலும் தாயகத்திலும் காப்பாற்றப்பட்டோம் என்றால் நாம் மனந்திருந்தி வாழ இறைவன் காலம் கொடுக்கிறார் என்பதே அதன் அர்த்தமாகும்

மேலும் தமிழ் மக்களாகிய நாம் (ஆணிவேர் சாய்க்கப்படா விட்டாலும்) அடி வேர்களோடு சாய்க்கப்பட்டுவிட்டோம். இதற்கான காரணத்தை ஆராய்ந்தால் தப்பி வாழும் எமக்கு ஏன் இறைவன் காலம் தருகிறார் என்பது விளங்கும். தமிழ் மக்களாகிய எமது முன்னோர், முன்னோரின் முன்னோர் செய்த கொடுமைகள் சொல்லி ஓயாது. நம்மில் எத்தனை பேரை நாம் நமது கிணறுகளில் தண்ணீர் அள்ள விடவில்லை? சிரட்டைகளில் தண்ணீர் கொடுத்திருப்போம்? அவர்கள் தமக்கெனத் தனிக் கிணறு வெட்டினால் ஊத்தையைப் போட்டு அசிங்கப்படுத்தியிருப்போம்? ஆலயங்களுக்குள் வரவிட்டாலும் இறைவனின் ஆலயத்தைப் பிரித்துக் கயிறுகட்டி சேட் கொலரில் பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஒரு மூலையில் இருத்தி நீ



அருட்பணியாளர் அன்ரனி பாலா

இங்கேதான் இருக்க வேண்டும், எமது வயலில் வேலை செய்யும் நீ, எமது கரவலையில் வலை இழுக்கும் நீ எப்படி எம்மோடு சமபந்தியில் அமர்ந்து நற்கருணை பெற முடியும் எனக் கேட்டிருப்போம்?

இவ்வாறு துன்புறுத்திய எமது முன்னோரின் துன்பங்களை எதிர்க்க முடியாமல் தாழ்த்தப்பட்டோர் என அடையாளங் காணப்பட்டோர் அனைத்தையும் தாங்கினர். நமது நன்றிகெட்ட தனத்தால் அவர்கள் எவ்வளவுதான் நன்மைகளைச் செய்தாலும் பழிவாங்கியே தீர்த்தோம். இந்தச் சிந்தனைகளையும் மூட்டை முடிச்சுகளுடன் இங்கும் கொண்டு வந்துள்ளோமா?

கொழும்பு தமிழரின் தலைநகரம் என்று அழைக்கப்பட்ட 1948 இலங்கையின் சுதந்திரத்தை யொட்டிய காலங்களில் வட கிழக்கில் இருந்து சென்ற பண முதலைகள் தென்னிலங்கையை பாரிய வர்த்தகக் கொம்பனிகளால் நிறைத்திருந்த காலமது. ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் தமிழரே சிங்களத்தேசப் பாடசாலைகளை ஆக்கிரமித்திருந்த காலமது. "யாழ்ப்பாண மாத்தையா வாறார்" என்று முருங்கக்காய்க் கட்டையும் பொதிகளையும் தூக்கிக்கொண்டு எம்மவர் பின்னாலே சிங்களவர்கள் அலைந்த காலமது.

புலம்பெயர் நாடுகளில் எத்தனையோ இலட்சம் தமிழர்கள் வாழுகின்றோம். எம்மத்தியில்தான் எத்தனை எத்தனை விபச்சாரச் செயல்கள்! கணவனின் சம்மதத்துடன் எத்தனை விபச்சாரச் செயல்கள்! கருச்சிதைப்புகள்! ஏழு நாட்களுக்குள் வயிற்றிலே குழந்தை உயிரோடிருக்கும். ஆனால் மூன்று மாதங்களுக்குள் அம்மா என்னை வயிற்றுக்குள் கொன்று விட்டாங்களே என்று கத்திக் கதறுகின்ற எத்தனையோ ஆயிரக்கணக்கான குழந்தைகளின் மரண ஓலங்கள் இறைவனை நோக்கி கதறியிருக்குமே! இதனாலேதான் எத்தனையோ குழந்தைகள் இப்போரினாலே இறந்தார்கள் இன்னும் முகாம்களில் வாடுகின்றனர் தென்பகுதி இல்லங்களுக்கு விற்கப்படுகின்றனர்

முன்பு எம் முன்னோரும் இப்போது புலம்பெயர் நாடுகளில் நாமும் செய்கின்ற பாவங்களில் இருந்து மனந்திருந்தி வாழ இறைவன் தரும் நீண்ட ஆயுளை நினைத்து மகிழ்கின்றோமா?

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி - 76

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்துக்குப் பின் கொரிந்திலிருந்த போலிப் போதகர்கள் (இந்நாட்களைப் போலவே அந்நாட்களிலும் போலிப்போதகர்கள் இருந்திருக்கின்றார்கள்) பவுலுக்கெதிராகக் கலகமூட்டியுள்ளார்கள். கொரிந்தியர் அவரில் நம்பிக்கை இழக்கக்கூடியவிதமாக அவரைப் பழித்துரைத்தார்கள்.

1. கொரிந்துக்கு வரும் திட்டத்தைப் புனித பவுல் மாற்றியதால் அவர் உறுதியற்ற மனமுடையவர் என்றனர்.
2. நன்கொடை திரட்டியதால் அவரை நேர்மையற்றவர் என்றனர்.
3. தற்பெருமை கொண்டவர் என்றனர்.
4. நற்தோற்றமும் பேச்சுவன்மையும் அற்றவர் என்றனர்.
5. யேசுவின் அப்போஸ்தலராய் இருக்கத் தகுதியற்றவர் என்றனர்.

இந்தச் சவால்களுக்கெல்லாம் முகம் கொடுக்கும் நோக்கமாகவே இந்த இரண்டாம் திருமுகம் அமைந்துள்ளது.

***இனி நமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 2 கொரிந்தியர் 5 முதல் 8 வரை உள்ள அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1. இவ்வுலகில் வாழும் நமது உடலை புனித பவுலடியார் எதற்கு ஒப்பிடுகின்றார்?
2. ஒருவர் எப்போது புதிதாகப் படைக்கப்படுகின்றார்?
3. நாம் கிறிஸ்து வழியாக ஒப்புரவாகித் தமக்கு ஏற்புடையவர் ஆகுமாறு கடவுள் செய்தது என்ன?
4. புனித பவுல் தாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை நிரூபிக்கக் கூறும் பண்புகள் பற்றி எந்த அதிகாரத்தில் எந்தெந்த வசனங்களில் கூறப்படுகின்றது?
5. வாழும் கடவுளின் கோவில் நாமே என்பதைச் சுட்டும் இறைவார்த்தை எது?
6. மீட்புத்தரும் மனமாற்றத்தை விளைவிப்பது எது?
7. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் 7ம் அதிகாரத்தில் வெளிப்படுத்தும் உள உணர்வு என்ன?
8. புனித பவுல் யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு நன்கொடை திரட்டுவதற்கு கொரிந்து மக்களிடம் எந்தத் திருச்சபைகளை உதாரணம் காட்டி விளக்குகின்றார்.
9. பிறருக்கு வழங்குவதை ஊக்குவிப்பதற்கு புனித பவுல் மறைநூலிலுள்ள எந்த வார்த்தைகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றார்?
10. நன்கொடை திரட்டுவதற்காக கொரிந்து மக்களிடம் அனுப்பப்பட்டவர்கள் மொத்தமாக எத்தனை பேர்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 74 இற்கான கேள்விகளுக்கு 29 பேர் விடையளித்திருந்தனர்

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

### கி. றெஜினா குமாரி

***கொண்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.***

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. அருள் மேரி, இல. K.106, கதிர்காம நி. கி. செட்டிகுளம்
2. ம. ஸ்ரெலா மாவிலங்கேணி, முருங்கன்
3 அ. இன்பராஜ் லெம்பேட், வங்காலை - 2
4. எ. கில்டா, கட்டையடம்பன்
5 அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
6. ஜெ. தர்சிக்கா, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
7. றீ. அன்ரனற் அபிநயா J. R. S. வீட்டுத்திட்டம், தலைமன்னார்.
8. அ. வினிஸ்ரன் கல்லடி, மட்டக்களப்பு
9. எ. தபிஷன் இல. 3, முதலியார்குளம், செட்டிகுளம்.
10. பெனடிக்ற் செந்தூரன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்

# என்னைப் பார்க்க யாராவது வருவார்களா?

அருட்சகோதரர் அ. விமலநாதன் (அமதி.)
டி மசெனட் இறையியலகம், கொழும்புத்துறை.



மனிதனின் வாழ்வு பிறப்பு தொடங்கி இறப்புவரை உறவுகளோடு அமையப்பெற்றுள்ளது எனலாம். மனிதன் மனிதனோடு கொண்டுள்ள உறவை மனித உறவென்றும், மனிதன் இறைவனோடு கொண்டுள்ள உறவை இறை மனித உறவென்றும் நாம் பார்க்கலாம்.

இவை அனைத்தும் மனித வாழ்கையில் இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகின்றது. ஒன்றோடு ஒன்று தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகளாக அமைந்துள்ளது. காலநிலையும், இட அமைப்பும், ஒரு மனிதனின் உறவு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒருவன் வாழுகின்ற சூழல், கலாச்சாரப் பின்னணி, ஒழுக்கவியல் கோட்பாடுகள், பேசப்படுகின்ற மொழி என்பனவும் ஒரு முழு மனிதனுடைய உறவை வளர்ப்பதற்கு ஏதுவான காரண கர்த்தாக்களாக விளங்குகின்றன. இவை அனைத்துக்கும் அமைவாகத்தான் இயேசுவினுடைய பிறப்பும், வளர்ச்சியும், பணிவாழ்வும் ஏன் அவரது இறப்பும் இருந்தது.

குடும்ப உறவில் வளர முதற்காரணியாக விளங்கியது அவரது தாயின் அன்புறவு என்று சொன்னால் அது உண்மையானதே. இயேசுவிற்கு பன்னிரண்டு வயது நடக்கின்றபோது, கோவிலிலே காணாமற்போகும் சந்தர்ப்பத்தில் அன்புத்தாய் தேடிச்செல்கின்றார். அவரின் உள்ளத்தில் "எனது பாசமிகு மகன் தன்னை யாராவது தேடி வருவார்களா? என எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பானே" என தனது உள்ளத்திலே கலங்கியவராய் தேடிச்சென்றார் தாய் மரி. (லூக் 2:44-45) இது ஒரு தாய்க்கு தனது காணாமல்போன மகன்மீது எழுந்த உள்ளார்ந்த கலக்கம்.

குடும்ப உறவைக் கடந்து சமூக உறவுக்குள் சென்ற இயேசு தனது பணியில் மனித உறவுகளைச் சந்திக்கின்றார். இலாசரின் இறப்பும் அதனால் ஏற்பட்ட உள்ளார்ந்த ஏக்கமும் சமூக உறவின் தாக்கத்தை படம்பிடித்து காட்டுகின்றது. ஒருபுறம் மார்த்தா தனது சகோதரனின் இறப்பால் துயர் கொண்டிருந்தார். இயேசுவின் வருகைக்காக ஏக்கத்தோடு காத்திருந்தார் (யோ 11:19-21). இன்னொரு புறம் மரியா தனது சகோதரனின் இழப்பால் அழுது புலம்பிக்கொண்டிருந்தார். தன் சகோதரனைத் தன்னிடம் திருப்பிக் கொடுக்கக்கூடிய யாராவது வருவார்களா என ஏங்கித்தவித்துக் கொண்டிருந்தாள் (யோவா 11:28-32). இயேசுவும் அவர்களது உள்ளுணர்வை அறிந்திருந்தார். அவர்கள் இருவரும் தனது வரவிற்காய் காத்திருப்பார்கள் என உணர்ந்தவராய் அவர்களைப் பார்க்கச் சென்றார்.


ஆலயங்கள் மூடப்பட்டுவிட்டன. வணக்கஸ்தலங்கள் வழிபாடுகள் இன்றி வறண்டு கிடக்கின்றன. பள்ளிக்கூடங்கள் கைவிடப்பட்ட கட்டடங்களாக்கப்பட்டு விட்டன. நெல் விளையும் வயல்நிலங்கள் செல் விழும் செத்த பூமியாக்கப்பட்டுவிட்டன. ஊரிழந்து, உடைமையிழந்து, உறவிழந்து, உயிர் பிரிந்த நிலையில் இன்று முட்கம்பிக்குள் முடக்கப்பட்டு ஒரு தொகுதியினர் வாழ்கின்றனர். துன்பங்களை சுமந்துகொண்டு சுவருக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த மக்களின் ஏக்கமும் இதுவாகத்தான் இருக்கின்றது. "எங்களைப்பார்க்க, எங்களோடு பகிர, எங்கள் செய்திகளை எம்மவர்க்கு போய்ச் சொல்ல யாராவது வருவார்களா?" என்பதுதான்.

முழுநிலா (பௌர்ணமி) நாளைக் காத்திருக்க வேண்டிய நிலையில் இன்னொரு தொகுதியினர் உள்ளனர். பார்ப்பதற்கும் கதைப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் ஏற்ற நாளாக இந்தநாள் மாறிவிட்டது. இயற்கை நம்மைக் கட்டுப்படுத்துகின்றதா? என்ற வினா எழுகின்றது.

இந்த வேளையில்தான் இயேசுவின் வாழ்வும் போதனையும் நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றது. திடமான செயற்பாட்டிற்கு நம்மை இட்டுச்செல்கின்றது. இயேசு தனது வாழ்க்கைச் சூழமைவிற்குள் நின்றுகொண்டு, தான் உறவு வைத்திருந்த தனது மக்களை நோக்கிச் சென்றார். மனித சமூகத்தோடு கொண்டுள்ள உறவை இங்கு வெளிப்படுத்துகின்றார். (யோவா 11: 42).

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

## இலக்கியத் தடாகம்



# விவிலியமும் தமிழ் இலக்கியமும்



ஒப்பீட்டுத் தொடர் 9.

- அருள் . செல்லத்துரை

### திருவிவிலியம்

## தாய் இறைவன்

1. (அ) பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டா திருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன். *- எசாயா 49:15*

(ஆ) தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன். *- எசாயா 66:13*

2. தாயைவிட அவர் உன்மீது அன்புகூர்வார். *- சீஞா 4:10*

3. (அ) என் தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும் ஆண்டவர் என்னை ஏற்றுக்கொள்வார். *- திபா 27:10*

(ஆ) என்னைக் கருப்பையினின்று வெளிக்கொணர்ந்தவர் நீரே; என் தாயிடம் பால் குடிக்கையிலேயே என்னைப் பாதுகாத்தவரும் நீரே! கருப்பையிலிருந்தே உம்மைச் சார்ந்திருந்தேன். *- திபா 22:9,10*

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப் -பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

### தமிழ் இலக்கியம்

## தாய் இறைவன்

1. (அ) பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாயதேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே! யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே! *- திருவாசகம் 544 - காண்: திருவாசகம் 1:61,647*

(ஆ) பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது மற்றழுதால் கேட்டும் வராதங்கே - சற்றிருக்கப் பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின் பொற்றாள் பொறாஎம் புலம்பு *- திரு அருட்பா 2017; - காண்: திரு அருட்பா 703, 820. 3906, 90, 471, 1088, 1328, 2731, 2319)*

(இ) நம்பசி கண்டு அந்தோ தரியாது நள்ளிரவில் சோறளித்த நற்றாய் காண்: *-திருஅருட்பா: நெஞ்சறிவுறுத்தல் 176*

(ஈ) ஊட்டுவிக்கும் தாயாகும் ஒற்றி அப்பா.*- திஅருட்பா 978*

2. (அ) தாயினும் பேர் அருளுடையார் என்னுயிரில் கலந்த தனித்தலைவர். *- திருஅருட்பா 5812*

(ஆ) தாயின் மேவிய தற்பரமே முல்லை வாயின் மேவிய மாமணியே. *- திருஅருட்பா 663*

3. (அ) தடித்த ஓர் மகனைத் தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்
இங்கெனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத்தாடும்
புனிதன்நீ ஆதலால் என்னை
அடித்ததுபோதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனி ஆற்றேன். *- திருஅருட்பா 3386*

(அ) 1. எந்தை 'யாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான் தனக்கு அஃதிலான்.
- திருவாசகம்: திருச்சதகம் 51

2. தாயிற் பெரிதும் தயவுடையான் குற்றம் புரிந்தோன்
தன்னையும் ஓர் சேயிற் கருதி அணைத்தான்
என்றுரைப்பார் உனைத்தான் தெரிந்தோரே *- திரு. 3595*

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

ம. வசந்தா
தாஸ்கோட்டம், வவுனியா.

## பேரிச்சம் பழப் பலகாரம்

### தேவையான பொருட்கள்



கோதுமை மா : 750 கிராம்
கச்சான் : 250 கிராம் (தோல் நீக்கியது)
பேரிச்சம்பழம்: 250 கிராம்
எண்ணெய் : 250 கிராம்
ஏலக்காய் : தேவையான அளவு
சீனி : 200 கிராம்

### செய்முறை :

முதலில் பேரிச்சம் பழம், கச்சான், சீனி ஆகியவற்றை நன்றாக இடித்துக் கலக்க வேண்டும். பின்பு நன்றாகப் பிசைந்து கலவையை ஒரு அளவில் உருட்டி எடுக்க வேண்டும். பின்பு கோதுமை மாவை நீரினுள் விட்டு கலந்து வேறொரு பாத்திரத்தில் ஊற்றி வைக்க வேண்டும். உருட்டிய உருண்டைக் கலவையை கோதுமை மா நீரினுள் தோய்த்தெடுக்க வேண்டும். பின் எண்ணையில் பொரித்தெடுத்தபின் பரிமாறலாம்.


## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

திருமதி. சுகந்தி மனோகரன்
ஒல்லிமோட்டை, சாவக்கட்டு, மன்னார்.

## மீன் கட்லட்

### தேவையான பொருட்கள்





மீன் 1/2 கிலோ
வெங்காயம் 15 கிராம்
ப. மிளகாய் 100 கிராம்
முட்டை 2
கறிவேப்பிலை தேவையான அளவு
பட்டர் தூள் தேவையான அளவு
உப்பு தேவையான அளவு
மரக்கறி எண்ணெய் தேவையான அளவு
மிளகு சீரக தூள் தேவையான அளவு

### செய்முறை :

மீனை உடனே அவித்துச் செய்யாமல் முதல் நாளே அவித்து வைப்பது நல்லது.

முதலில் அவித்த மீனை துப்பரவு செய்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும். வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை என்பவற்றை சிறிது சிறிதாக வெட்டி எடுக்கவும். முட்டை இரண்டு கருக்களையும் சிறிய கோப்பையில் இட்டு நன்கு அடிக்க வேண்டும். பட்டர் தூளை ஒரு கோப்பையில் வைத்துக் கொள்ளவும். பிறகு துப்பரவு செய்த மீன், வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, மிளகு, சீரகம்தூள், உப்பு அனைத்தையும் கலந்து பிசைந்து சிறு உருண்டைகளாகப் பிடித்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு கலக்கிய முட்டையில் ஒவ்வொன்றாகத் தோய்த்து அதை பட்டர் தூளில் புரட்டி கொதிக்கும் எண்ணெயில் போட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும். பிறகு விரும்பியபடி பரிமாறலாம்.

# மருத்துவப் பொழிவு

## சின்னச் சின்ன மருத்துவம்

தொகுப்பு: ப. தட்சாயினி
சாளம்பன், நானாட்டான்.

- தேள் கொட்டிவிட்டது என்று தெரிந்தவுடன் துளசி இலைகளைக் கொண்டுவந்து சுத்தம் செய்து பத்து இலைகளை வாயில் போட்டு நன்றாக மென்று தின்றுவிட வேண்டும். கொஞ்சம் இலைகளை எடுத்துக் கசக்கித் தேள் கொட்டின இடத்தில் வைத்து, பத்து நிமிடம் வரை நன்றாகத் தேய்த்து, நெருப்பில் சூடு காண்பித்தால் தேள் விஷம் உடனே இறங்கிவிடும். கடுப்பு நிற்கும்.

- தென்னை மரத்தில் தோன்றும் வெடிக்காத பாளையைக் கொண்டுவந்து அதை உடைத்து உள்ளே இருக்கும் இளம் மொக்குகளில் ஒரு பிடியளவு எடுத்து, காய்ச்சிய பசும் பால் விட்டு மைபோல அரைத்து ஒரு எலுமிச்சம் பழம் அளவு காலையில் ஒரு வேளையும், அதேஅளவு மாலையிலும் சாப்பிட்டுச் சிறிதளவு வெந்நீர் குடிக்க வேண்டும். இதேபோலத் தொடர்ந்து நாற்பது நாட்கள் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி நீங்கி, தாது வளர்ச்சி உண்டாகும். இல்லற இன்பம் அதிகரிக்கும். ஆனால் மருந்து சாப்பிடும்போது உடல் உறவு வைத்துக் - கொள்ளக்கூடாது.

- ஒரு மாதுளம் பழத்தின் முத்துக்களை ஒரு பாத்திரத்தில் உதிர்த்து, சுத்தமான கையைக்கொண்டு பிசைந்து சாறு எடுத்து அந்தச் சாற்றில் நான்கில் ஒரு பங்கு கற்கண்டுத் தூள் சேர்த்து காலை வேளையில் மட்டும் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நரம்புக்கு நல்ல பலம் கிடைக்கும்.

- வெளிப்புண் ஆனாலும் உள்புண் ஆனாலும் சரி, செந்தாமரை இதழைக் காய வைத்து, அதை ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு டம்ளர் அளவு தண்ணீர்விட்டு மூடி வைத்துவிட வேண்டும். இதை மாலை வேளையில் செய்ய வேண்டும். காலையில் அந்தப் பாத்திரத்தை எடுத்து நீரை மட்டும் வடிகட்டிக் குடிக்க வேண்டும். இந்தவிதமாகச் செய்துவந்தால் வெளிப்புண், உள்புண் யாவும் குணமாகும்.

- பேருந்துகளில் பயணம் செய்யும்போது வாந்தி வரும் போல் இருந்தாலோ அல்லது வாந்தி வந்தாலோ எலுமிச்சம் பழத்தை நறுக்கி அதில் சிறிது சர்க்கரையைத் தூவி சுவைத்தால் வாந்தி நிற்கும்.

- இரண்டு கிராம்பை உணவு முடிந்ததும் வாயில் அடக்கி வந்தால் வாய் நாற்றம் விலகும். 10 கிராம் கிராம்புடன் 5 கிராம் துவர்ப்பாக்கை கலந்து இடித்து வைக்கவும். உணவு முடிந்ததும், சிறிது வாயில் போட்டு அடக்கிவர வாய் நாற்றம் நீங்கும்.



- வெற்றிலை போடும் பழக்கமுள்ளவர்கள் தாம்பூலத்துடன் இரண்டு கிராம்பை சேர்த்துப் போடுங்கள். வாய் நாற்றம் பறந்து விடும். காலை உணவு - இரவு உணவுக்குப் பின் தாம்பூலத்துடன் 3 ஏலக்காய், 10 ரோஜா இதழ், 1ஸ்பூன் தேன் கலந்து மென்று விழுங்கி வரவும். காலையில் வெந்நீரில் ஏலக்காய் 5 கிராம்பு 3 தூளாக்கிப் போட்டு வாயினைக் கொப்பளிக்கவும். ஆப்பிள் தாதுளை அடிக்கடி சாப்பிட்டு வரவும். 1 மாதம் இவ்வாறு செய்து வர வாய் நாற்றம் மறையும்.

- சோம்பு - 50 கிராம், சீரகம் - 20 கிராம், அதிமதுரம் - 20 கிராம், சுக்கு - 20 கிராம், உலர்ந்த திராட்சை - 20 கிராம், கடுக்காய் தோல் 20 கிராம், சுத்தமான நீர் 1 லீட்டர்

ஒரு பாத்திரத்தில் திராட்சை நீங்கலாக மற்றவைகளை இடித்துப் போட்டு, சுத்தமான நீர் 1 லீட்டர் விட்டுக் காய்ச்சவும், அரை மணி நேரம் காய்ச்சி அதில் திராட்சையைப் போட்டு மீண்டும் அரை மணிநேரம் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டவும். மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை 150 மி. வீதம் ஒரு நாளைக்கு மூன்று முறை, மூன்று நாளைக்கு அருந்தவும். ஒவ்வொரு முறையும் கசாயத்தைச் சூடு செய்துகொள்ளவும். இது எல்லாவகை வாய் நாற்றத்தையும் போக்கும் நல்ல சிகிச்சையாகும்.

# சுத்தமான தேனில் மருத்துவம்

- சுத்தமான தேன் ஒரு சிறந்த உணவாகும். எளிதில் செரிக்கக்கூடியது. அதிக சத்து நிறைந்தது. ஐந்து கிலோ பாலுக்கு ஒரு கிலோ தேன் சமமாகும்.

- பித்த நீர்ச் சுரப்பு இல்லாதவர்கள் தொடர்ந்து தேன் அருந்தி வந்தால், பித்த நீர் சுரந்து தொண்டை, இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் சுலபமாக நீங்கிவிடுகின்றன.

- குழந்தைகளுக்கு உண்டாகும் பல்நோய் போன்றவற்றுக்கு தேன் ஒரு சிறந்த சஞ்சீவியாகும்.

- தேன் மூலம் சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு, கிருமி நோய், தாகம், வாந்திபேதி, தீப்புண், விக்கல், மலச்சிக்கல் ஆகிய நோய்கள் குணமாகும். பசியை அது வளர்க்கும். ஜீரணத்துக்கும் உதவும்.

- தேன் கொழுப்பைக் கரைக்கக்கூடியது. ஆகவே உடல் மிகவும் பருமனாக உள்ளவர்கள் தொடர்ந்து தேன் சாப்பிட்டு வந்தால் பருமனும் எடையும் குறையும்.

- இர்த்தப் பித்தத்துக்கு அதாவது வாய், மூக்கு முதலியவற்றிலிருந்து இரத்தம் வடியும் வியாதிக்கு, ஆட்டின் பாலில் தேனைக் கலந்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். நமது உடலின்மேல் ஏற்படும் புண் காயங்களுக்கு மாத்திரமின்றி, உள்ளே ஏற்படும் இரைப்பைப் புண் போன்றவற்றையும் தேன் சாப்பிட்டு குணமாக்கலாம்.

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29.02.1950



உதிர்வு 28.08.2007

### பேதுருப்பிள்ளை இராக்கினியம்மா

**முருங்கன் பிட்டி, முருங்கன்**

அன்பு அன்னையே, எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு இரண்டு வந்த வேளையிலும்
எம் உள்ளத்தில் நீங்காத
பாச இடம் பிடித்துக்கொண்ட பாச தீபம் நீங்கள்.
ஏற்றங்கள் நாம் காண ஏணியாய் இருந்தீர்களே!
உத்தமராய் நாம் வாழ கல்வியும் நற்பண்பும் ஊட்டினீர்களே!
துன்பங்கள் வந்தபோதும் தூணாய் இருந்து காத்தீர்களே,
உங்கள் பாசத்தை எண்ணி எண்ணி அழுகின்றோம் அம்மா!

பிரிவால் துயருறும்,
கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21.05.1971



உதிர்வு 01.09.2007

### திரு. இ. அமலகுவேந்திரன்


**சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.**

ஈராண்டு சென்றதப்பா, அப்பா என்றழைத்து
அந்தரத்தில் தவிக்கவிட்டு, நொடிப் பொழுதில்
சொல்லாமல் சென்றதேனோ?
அனலில் விழுந்த புளுவாகத் துடிக்கின்றோம்.
வாழப்போகும் உன் பிள்ளைகளுக்கு
வழிசமைத்து முடிக்காமல் விரைந்துபோன மர்மமென்ன?
விடைகாண முடியாமல் இறைவனிடம் வேண்டுகின்றோம்.
நின் ஆன்மா பரகதியில் மகிழ்வுற பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோர்
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11.06.1967



உதிர்வு 26.09.2007

### அருட்பணி. நீ. பாக்கியரஞ்சித்

அன்பென்னும் மலர் விரித்து அருளென்னும் மணம் பரப்பிய
அருட்திரு. நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித்
அடிகளார் அவர்களே!
ஆண்டவன் மடியில் நீர் சென்று ஆண்டுகள் இரண்டு
அரை நொடிபோல் போய்விட்டதே!
இரண்டாம் ஆண்டின் நீங்காத நினைவினிலே
இதயங்கள் இணைந்து உம்மை அஞ்சலிக்கின்றோம்.
உங்கள் அன்புப் பணி வாழ்வுக்காய்
மலர்கள் தூவி பாமாலை சூடுகின்றோம்.
அகதி மக்களுக்காய் நீர் ஆற்றிய
அளப்பரிய சேவைகள் அளவிட முடியாததே!
அகதி மக்கள் அழுகுரல் கேட்டவுடனே
அங்கே அந்த நொடியிலே விரைந்திட்டீரே!
வெறுமனே அல்ல இலட்சியத்துடனே - உம்
வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தினீரே!
அஞ்சா நெஞ்சம் ஆக்க ஊக்கம்
அனைத்தும் உமது அகத்தின் அணிகலன்களாயிற்று!
காலைப் பொழுதினில் ஜொலித்திடும் கதிரவனாய்
காண்போர் கண்களுக்கு சேவையின் ஒளியானீரே!
கீதங்கள் நாளும் ஒலித்திடும் சோலைப் பறவைபோல்
பாடிப்பறந்து திரிந்தீரே! அர்ப்பண வாழ்வுதனிலே
தென்றல் காற்றான உம் இனிய வாழ்வு
எம் நெஞ்சங்களைத் தட்டித் தொட்டுச் சென்றதே!
பணியாளனாய் உம்மையே பணிக்காய் மாற்றினீர்
பணிவிடை பெறுவதில் அல்ல மாறாக
பணிவிடை புரிவதில் மட்டுமே!
தேன் சொட்டும் சொற்களோடு எம்மிடையே
ஊடாடி உரையாடி உறவாய் வலம் வந்தீரே!
ஆர்வம் நிறை உம் பணி வாழ்வு - எம்
அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்ததே!
தேவையிலிருப்போரைத் தேடிச்சென்று
தேற்றும் உம் தெய்வீகப் பணியில் உமக்கு நிகர் யார்?
எம் இதயத் துடிப்பே பாக்கியமே,
எம் மூச்சிலே உம் எண்ணங்கள்,
எம் பேச்சிலே உம் வாழ்வு, எம் பார்வையிலே உம் முகநிழல்கள்
எல்லாம் இணைந்ததே எம் இதயத் துடிப்பு!
"அஞ்சலிக்கின்றோம் உம்மை அனுதினமும்"

**பிரிவால் துயருறும் :**
பாசமிகு அம்மா, தம்பி குடும்பத்தினர்
மற்றும் உற்றார் உறவினர்கள்


தொ. இல. தம்பி கனடா : 0014162658411
மாமா பிரான்ஸ் : 0033148399542

**இரங்கல் திருப்பலி நடைபெறும் இடங்கள :**

1. புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார்
26.09.2009 - காலை 5.45
2. கிறிஸ்து அரசர் ஆலயம், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்
26.09.2009 - காலை 6.00 3. பிரான்ஸ் 4. கனடா

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15.01.1920



உதிர்வு 21.08.2005

### திரு. அக்காஸ் லூயிஸ் குரூஸ்

**(இளைப்பாறிய அதிபர், தாழ்வுபாடு)**

நான்காண்டுகள் சென்றாலும்
நாங்கள் உமை மறவோமையா
நாவன்மை நற்பண்பு கொண்ட உம் நாமத்தை
நாளும் எம் வாழ்வில் பேணி வாழ்ந்தோமையா,
ஈரெண்டாண்டுகள் ஆனாலும் உம் ஆன்மா
சத்தியமாய் சாந்திபெற என்றும் செபிப்போம்.

**உம் நினைவில் : அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரர், பூட்டர்**

*இவரின் ஆன்மசாந்திக்காக 21.08.2009 அன்று தாழ்வுபாடு புனித வளனார் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.*

## 40ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01.10.1940



உதிர்வு 15.07.2009

### செபஸ்ரியான் ஞானம் குலாஸ்

**(வட்டாரம் 8, பேசாலை.)**

*"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில்*
*விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."*

எம்மை எல்லாம் பாசமாய் வளர்த்தெடுத்த பாசதீபமே,
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டுப்போன உம்
பிரிவைத் தாங்க முடியவில்லை அப்பா!
கண் இமைக்கும் நொடிப் பொழுதில் எல்லாம்
நடந்து முடிந்துவிட்டது. ஈரேழு ஜென்மங்கள் சென்றாலும்
உம்மை நாங்கள் மறவோம். என்றும் உங்களுடைய ஆன்மா
இறைவனின் சந்நிதியில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், சகோதர
சகோதரிகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## என்னைப் பார்க்க யாராவது ....?

(16ம் பக்கத் தொடர்ச்சி)

கண் இருந்தும் பார்க்க மனம் இல்லாதோராய் (குருடராய்), காது இருந்தும் கேட்க விருப்பமில்லாதவராய் (செவிடராய்), வாய் இருந்தும் கதைக்க முயற்சிக்காதவராய் (ஊமைகளாய்), இருக்கும் எம்முள் பலருக்கு இயேசுவின் போதனையும் சாதனையும் பெரும் சவாலாகவே தோன்றுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் வாழும் நம்மவர்க்கு இயேசுவின் வார்த்தைகள் சிந்திக்கத் தூண்டுகின்றன. "இவர்கள் பேசாதிருந்தால் இக்கற்களே கத்தும் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக் 19:40).

காலத்தின் தேவையை அறிந்துகொள்வதும் அதன் குரலை உற்றுக்கேட்பதும் இயேசுவின் சீடத்துவத்தில் எதிர்பார்க்கப் - படுகின்றது. நிச்சயிக்கப்பட்ட சூழமைவிற்குள் இருந்துகொண்டு நிதர்சனத்தை நோக்கிப் போகவேண்டியதுதான் இன்றைய சவாலாக அமைகின்றது. சவால்களை எதிர்கொள்வதும் சாதனைகளைப் பிரசவிப்பதும் மனிதநேயம் கொண்டவர்களினால் மட்டுமே இயலும் என்பதுதான் இக்கால யதார்த்தமாகும். எனவே மனிதம் மதிக்கப்படவேண்டும் என்று மார்பு தட்டிப்பேசுவதோடு மட்டும் எம்மை மட்டுப்படுத்திவிடாது, மனிதநேயம் கொண்டவர்களாக இயேசு காட்டிய வழியில் செல்பவர்களாவோம்.

## யார் இந்த வியான்னி?. 2ம் பக்க தொடர்

அதனால் ஒருமுறை தொடர்ந்து விடியற்காலைவரை பாவசங்கீர்த்தனம் கேட்டுக்கொண்டிருந்தார். 1830லிருந்து 1845 ஆம் ஆண்டு வரை தினமும் 300 மக்கள் பாவசங்கீர்த்தனத்திற்கு வந்தனர். பல நேரங்களில் லயன்ஸ் நகரில் ஒரு வாரத்திற்கு இரயில் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டுவிடும். 1853இல் மறைமாவட்டக் குருக்கள் பலர் அவருக்கு உதவி செய்ய முன்வந்தனர். பாவசங்கீர்த்தனத்திற்குக் கூட்டம் அதிகமானதால் அவர் மறைமாவட்டத் தியானம்கூட செய்யத் தேவையில்லை - யென்று ஆயர் அவருக்கு விதிவிலக்கு அளித்தார். 1855இல் ஓராண்டில் 20,000 மக்களும் 1858இல் 1,00,000 மக்களும் வாழ்வின் கடைசி வரை 80,000 மக்களும் அவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்தார்கள். கடைசி 5 நாட்கள் மரணப்படுக்கையிலும் பாவசங்கீர்த்தனம் கேட்டார்.

**இறப்பும், புனிதர் பட்டமும்** : 1859 ஆகஸ்ட் 4ஆம் திகதி தனது 73வது வயதில் இறைவனடி சேர்ந்தார். 1905இல் அருளாளர் பட்டம் அளிக்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டு மக்களின் பாதுகாவலரென திருத்தந்தை அறிவித்தார். 1925இல் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. 1929இல் பங்குக் குருக்களின் பாதுகாவலரென திருத்தந்தை அறிவித்தார். நாம் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? சிந்திப்போம் செயல்படுவோம்!

## வங்காலையில் ..... 4ம் பக்க தொடர்ச்சி

நற்கருணையை அருட்பணி. ஜெறோம் லெம்பேட் அடிகளார் தேரில் பவனியாக எடுத்துச் சென்றார். யூலை 26ம் திகதி அன்னை ஆனாளின் திருவிழாத் திருப்பலி நடைபெற்றது. முன்னாள் குருமுதல்வர் தலைமையில் பங்குத்தந்தையர்களும், அ.ம.தி. மறையுரைஞர்களும் இணைந்து திருநாள் திருப்பலியை வெகு சிறப்பாக ஒப்புக்கொடுத்தனர்.

அதன்பின்னர் அன்னை ஆனாளின் திருச்சொரூபத் தேர்ப்பவனி இடம்பெற்றது. ஆனாள் அன்னையின் கவி மாலைகள் பாடிச் சிறப்பித்தனர்.

திருவிழா அன்று மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளுக்கு அருட்பணி. ஜோய் அடிகளார் தலைமை தாங்கினார். இம்மகாஞானஒடுக்கத்தை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை முன்னைநாள் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளாரே திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திருவிழாவில் அருட்பணியாளர்கள் அருட்சகோதரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஏனைய பங்குமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். இறுதியாக அன்னையின் ஆசீருடன் யாவும் நிறைவுபெற்றது.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.89 எரேமியா22-28

உங்கள் விடைகளை 15.10.2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | ★ | | | | | | | 03 | |
| | | | | | 04 | | | | | |
| | | | 05 | | | | 06 | ★ | | |
| | | | ★ | | 07 | | | | | |
| ★ | 08 | | | | | | 09 | ★ | | ★ |
| | | | | 10 | | | | | | |
| | | 11 | | | | 12 | | | | |
| | | | 13 | | 14 | | | | | |
| | | 15 | | | 16 | | 17 | | 18 | |
| 19 | | | | ★ | | | | | | 20 |

### இடமிருந்து வலம்

1. அன்னியரையும் ..................................யும் கைம்பெண்களையும் ஒடுக்காதீர்கள்.
4. ஆண்டவர் பெயரால் இறைவாக்கு........................ இன்னொருவரும் இருந்தார்.
7. இப்பொழுதே அவர்கள் படைகளின் ஆண்டவரிடம் .................. பேசட்டும்.
10. உன் மேய்ப்பர்களைக் காற்றே ....................................
11. பபிலோனிய மன்னனது............ நான் முறித்தெறிந்து விட்டேன்.
12. இதோ ஆண்டவரின் சீற்றம் .................................... வீசுகின்றது.
14. என் மிகுந்த ஆற்றலோடும் ஓங்கிய ............................ம் மண்ணுலகையும் அதில் வாழும் மனிதரையும் விலங்குகளையும் படைத்தது நானே.
17. நாடு கடத்தப்பட்ட யூதமக்கள் அனைவரையும் இவ்விடத்திற்குத் ..............................க் கொண்டுவருவேன். (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
19.வாள், பஞ்சம், கொள்ளைநோய் ஆகியவற்றுக்கு .................. உம் மக்களும் ஏன் இரையாக வேண்டும்?

### மேலிருந்து கீழ்

1. நான் ..................... நட்டு வளர்ப்பேன். பிடுங்கி எறிய மாட்டேன்.
2. ஆண்டவரின் கோபக்கனலால் அமைதியான .................... தரைகள் அழிந்துபோயின.
3. நீங்களே எனக்குச் ..................... வில்லை என்கிறார் ஆண்டவர்
8. அவர்கள் ஆற்றல் தீயவற்றிற்குப் .............................. படுகின்றது
12. பூவுலகின் எல்லைகளிலிருந்து பெரும் .........................ன்று புறப்பட்டுப் போகின்றது.
13. அனைத்து இறைவாக்குகளும் அந்நாட்டின்மேல்...................ச் செய்வேன். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு மேலே உள்ளது)

### வலமிருந்து இடம்

2. கேதுரு...................... அதனை அணிசெய்து அதற்குச் செவ்வண்ணம் தீட்டுகின்றான்.
3. ஆண்டவர் தம் இதயத்தின் திட்டங்களைச் .................... நிறைவேற்றும் வரை அவர் சினம் தணியாது.
6. எனக்கு .................... மானவர்களிடம் அவற்றை நான் கொடுப்பேன்.
9. அவனைப் பொறுத்தவரையில் எல்லாம் ..................... இருந்ததே.
13. அவனுக்கு அடி...................... பொருட்டுக் காட்டு விலங்குகளையும் அவனிடம் நான் ஒப்புவித்திருக்கின்றேன். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)
15. நீ ........................ நுகத்தை முறித்தெறிந்தாய்.
16. தீர் மன்னனுக்கும் சீதோன் மன்னனுக்கும் செய்தி ............................. அனுப்பு.
20 அவர்கள் இவ்வாறு என் பெயரால் பொய்யை ...................... உரைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

### கீழிருந்து மேல்

5. இப்போழுதே உங்கள் .......................யும் செயல்களையும் சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள் (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன).
8. அந்த இனம் உழுது.........................அங்கேயே குடியிருக்கும்.
11. பாபிலோனிய மன்னனின் ........................ உங்கள் கழுத்தை நீட்டுங்கள்.
13. அதற்குப் ............................களை அமைத்துக்கொள்கின்றான் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
19. அவர் நாட்டில் .................... நேர்மையையும் நிலைநாட்டுவார்.
20. தொலையில் ...................... போது நான் கடவுள் இல்லையா?
10. அவற்றைப் பேணிக்காக்க நான் ........................ நியமிப்பேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 87ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

முதலாம் பரிசு:
**அ. அல்விரிடா**
தலைமன்னார் மேற்கு,
தலைமன்னார்

இரண்டாம் பரிசு:
**எம். எம். ஆர். கிறிஸ்ரோபர்**
18,கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு:
***பி. யூஜிற்றா***
இசைமாலைத்தாழ்வு, முருங்கன்

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 171 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 169 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.87ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. லோ. மேரி யுஸ்ரீனா, M/100, பெரியகமம், மன்னார்.
2. பர்னாந்து நிறஞ்சலா, வீ. இல. H34/07, கதிர்காமர் முகாம், மெனிக்பாம்.
3. ரா. சுசித்திரா, கற்கடந்த குளம், முருங்கன்.
4. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.
5. எஸ். நிஷாந்தினி கூஞ்ஞ, வட்டாரம் 8, வங்காலை.
6. கொ. மேரி இமல்டா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
7. பீ. கஸ்தூரி, இல. 123 2/1 புதுசெட்டித்தெரு, கொழும்பு - 13
8. பர்னாந்து சுலக்சன், மாவிலங்கேணி, முருங்கன்.
9. அருள் நேசன் றொகானி, நறுவிலிக்குளம், வங்காலை.
10. சகாயநாதன் லக்ஷி, தரம் 9B, தி. கு. கன்னியர் மடம், நானாட்டான்.
11. அ. டிப்னா, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
12. குணசேகர் றெபேக்காள், தரம்11B, தி. கு. கன்னியர் மடம், நானாட்டான்.
13. இல. 27/5, அட்டம்பொல வத்த, கெந்தல, வத்தல, கொழும்பு
14. எப். கில்மன் மணற்குளம், உயிலங்குளம்.
15. பி. நிஜா, தோட்டவெளி, மன்னார்.
16. யோ. லோறன்சா, ஜீவநகர், முருங்கன்.
17. றெ. மேரி யோசவின், கங்காணிதீவு, நானாட்டான்.
18. சீ. பெ. செல்வநாயகம், பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
19. அ. அ. பாக்கியநாதன் குரூஸ், 297. 3ம் கட்டை, திருகோணமலை.
20. ஜே. பி. ஜி. ஸ்ரிவின்சன், கங்காணிதீவு, நானாட்டான்.
21. வி. ஜீவிதா, துள்ளுகுடியிருப்பு, கீளியன்குடியிருப்பு பங்கு.
22. மா. சகாயராணி டயஸ், முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி.
23. எம். எம். ஜே. பசில் 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
24. எச். எஸ். ஜெயராஜ் 65, திருச்செந்தூர் கோ.வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
25. அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல் யாழ்ப்பாணம்.
26. செ. றொபின்சன் மடுறோட் கட்டையடம்பன், மடுறோட்.
27. இ. சுதர்சினி (றாஜினி), போயிட்டி, இளவாலை, யாழ்ப்பாணம்.
28. ஞா. எய்லின் ஸ்ரெபானி, 262, ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.
29 அ. சுதர்ஷன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
30. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
31. எஸ். பற்றசன் எழுத்தூர், மன்னார்.
32. எம். சுதர்சன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
33. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
34. அ. தேவறாஜ் லியோன், 3ம் வட்டாரம், முத்தரிப்புத்துறை.
35. சி. து. செற்றிக் றித்திகன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
36. சி. து. நெறிஸ் யதுஷன் "றெயின் போ அவனியூ" பெற்றா மன்னார்.
37. அமலதாஸ் உமாசிறி, சரஸ்வதி வீதி, பட்டித்தோட்டம், மன்னார்.
38. சூ. இராக்கினி லீனா, மரியாள் வீதி, தாழ்வுபாடு.
39. செ. ஜெசில்டா, மடுக்கோவில், மடு.
40. கி. ஆன் றொக்ஷகா, கொன். குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.
41. டா. சில்வேரியா, 8ம் வட்டாரம் மத்தி, நெடுந்தீவு.
42. பி. யூலியா டலிமா, 8ம் வட்டாரம், பேசாலை.
43. ஞானராஜ் எய்லின் கயானி 262, ஒ. மோட்டை, சாவக்கட்டு, மன்னார்.
44. த. பர்வின் நிலாந்தினி வீரபுரம் முகாம் வீரபுரம், வவுனியா.
45. டா. குயின்மேரி 8ம் வட்டாரம், மத்தி, நெடுந்தீவு.
46. கரோலினி கீர்த்திக்கா, 41/1, புனித மரியாள் வீதி, திருகோணமலை.
47. றொ. டயானா கூஞ்ஞ, தரம் -8 J. R. S. வீட்டுத்திட்டம், தலைமன்னார்
48. ச. ஜோ. சஞ்சுதன், 61/69 1/1 பெனடிற் மாவத்தை, கொட்டாஞ்சேனை
49. வே. நெவின் ராஜ் பிச்சகுளம், முருங்கன்.
50. அமலநாதன் ஜெறோமி, தரம் 9 தி. கு. கன்னியர் மடம், நானாட்டான்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 87 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யா[1] | ரு | மி | ல | ர் | பு[2] | ப் | ளி | த | ந் | கொ[3] |
| ம் | ய | த | இ[4] | ணீ | ரி | எ[5] | ப | லி | ❋ | டு |
| ந[6] | ன் | மை | ர | ண் | ந் | து | ல | ல் | வ[7] | க் |
| தை | கை | வா[8] | க் | கு[9] | து | ந் | ற | ம[10] | ❋ | கு |
| த் | ❋ | க் | க | ண் | ந் | து | ழை | நு[11] | று | ம் |
| ல | ர் | கை | ம் | க | லை | த | டு | வி[12] | ற் | ❋ |
| கா[13] | ல | ங் | க | ளை | அ[14] | றி | ந் | து | மா | து |
| ல் | தீ | மை | மே[15] | னி | ர | ❋ | ப | ற் | ஏ[16] | ந் |
| ந | கா | னி | ன் | க[17] | ண் | க | ள் | கி | ❋ | ர் |
| டை | ங் | இ[18] | மை | ய் | ரா | தி | எ[19] | தி[20] | ர் | மி |
| ❋ | க[21] | ட் | ட | ளை | ❋ | ள் | க | ல் | ழ | நி[22] |

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.88ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு ஒக்டோபர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## மன்னார் அமுதனின் "வீட்டு வீடுதலை காண்" (கவிதைகள்) வெளியீட்டு விழா

20ம் பக்கதொடர்ச்சி....

இவ்விழாவின்போது நூல் அறிமுகத்தை திரு. எம். எல். எம். அன்ஸார் வழங்கினார். தலைமை உரையை அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் நிகழ்த்தினார். நூல் ஆய்வுரையை இலங்கையின் மூத்த கவிஞர்களில் ஒருவராகிய திரு. மேமன் கவி வழங்கினார். அத்துடன் கலைவாதி கலீல், கவிஞர் கனிவு மதி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூலுக்கான வெளியீட்டு உரையை இம்மையத்தின் மேலாளர் திரு. ஓ. கே. குணநாதன் வழங்கினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பரீன் அப்துல் காதர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள இருந்த மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் கௌரவ ரிஸாத் பதியுதீன் அவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் கலந்துகொள்ளவில்லை.

மன்னார் அமுதன் அவர்கள் மன்னார் சின்னக்கடையை பிறப்பிடமாக கொண்டவர். இவரது குடும்பத்தினர் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்த சூழ்நிலையில் அங்கு தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர். தற்போது தனது குடும்பத்தினருடன் கொழும்பில் வசித்து வருகின்றார். அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கணனிப் பிரிவில் பணியாற்றுகின்றார்.

விரைவில் தனது தாயகமான மன்னாரில் இந்நூலின் அறிமுக விழாவை நடாத்த உள்ளார். இந்நூலின் விலை ரூபா 150. இதனை மன்னார் வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## முட்கம்பிக்குள் சிறைக்கைதிகள்...

1ம் பக்க தொடர்ச்சி .....

சகல பகுதிகளிலிருந்தும் அதிகளவு எண்ணிக்கையான யாத்திரிகர்கள் இங்கு குழுமியிருக்கின்றனர். ஆனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இங்கு சமூகமளித்திருக்கவில்லை. அவர்கள் யாவருமே அகதி முகாம்களில் இருக்கின்றனர் என்று யாழ், மறைமாவட்ட ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்திருக்கிறார்.

இந்த மக்கள் முட்கம்பிக்குப் பின்னால் சிறைக்கைதிகள் போன்று இருக்கின்றனர். தற்போது பெய்யும் மழையுடன் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று ஆயர் சவுந்தரநாயகம் கூறியுள்ளார். வடகீழ் பருவப் பெயர்ச்சி மழைக்காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்னதாகவே தற்போது வடக்கில் மழை பெய்ய ஆரம்பித்திருக்கிறது. முகாம்களில் வசிப்போர் கூடாரங்களிலும் தற்காலிக இருப்பிடங்களிலும் தங்கியிருப்பதால் சொல்லொணா நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். குடிநீர் பற்றாக்குறை முகாம்களில் காணப்படுவதாகவும் தொற்றுநோய்கள் வேகமாக பரவிவருவதாகவும் நிவாரணப்பணியாளர்கள் கூறிகின்றனர்.

மடுத்தேவாலயப் பகுதியில் இலட்சக்கணக்கான மக்கள் திருவிழாவின்போது குழுமிருந்தனர். இலங்கையின் சனத்தொகையில் 7 சதவீதமானவர்கள் கிறிஸ்தவர்களாகும். இவர்களில் சிங்களவர்களும் தமிழர்களும் அடங்கியுள்ளனர். மடு அன்னை அற்புதமான சக்தியுடையவரென பக்தர்களால் நம்பப்படுகிறது.

இந்த வருடம் விழாவில் கலந்து கொண்டவர்களில் பெரும்பான்மையானோர் தென் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்களாகும். அவர்கள் கார்கள், பஸ்கள், ரக் வாகனங்கள் என்பனவற்றில் அங்கு வருகைதந்திருந்தனர். தேவாலயத்தைச் சுற்றி வாகனங்கள் காணப்பட்டன. முன்னைய காலங்களில் 5 இலட்சம் மக்கள் தேவாலய உற்சவத்தில் கலந்துகொள்வது வழக்கமாகும். ஆனால் கடந்த வருடம் 500 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டுப்பாட்டுக்கு கண்ணி வெடிகளை அரசாங்கம் காரணமாகக் கூறியிருந்தது.

## மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 700.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 3000.00 (இலங்கை ரூபா)

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

**காசோலை மூலம் செலுத்துவதாயின்;**
**வங்கியின் பெயர் :**
Hatton National Bank Ltd. (Mannar Branch)
**பணம் பெறுபவரின் பெயர்:**The Editor - 'MANNA'
**வங்கிக் கணக்கு இலக்கம்:** S/A No. 02 -1678001-5

## நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4000.00
பல நிறத்தில் - ரூபா 7500.00

முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

# மன்னா

## நீயின்றி வாழ்வேது..!

### கிறிஸ்தவப் பாடல்கள்

### இறுவட்டு வெளியீடு




திருமதி. ஜெனிவி ஸ்ரீபன்

மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிழக்கைச் சேர்ந்தவரும் மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் கிறிஸ்தவ பாட ஆசிரியருமாகிய திருமதி. ஜெனிவி ஸ்ரீபன் அவர்களின் முயற்சியில் உருவாகிய கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய 'நீ இன்றி வாழ்வேது' என்ற பெயரிலான இறுவட்டு (C. D) வெளியீட்டு விழா கடந்த ஓகஸ்ட் மாதம் 02ம் திகதி பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் ஆதரவில் இடம்பெற்றது. இந்த இறுவட்டு வெளியீட்டு விழாவிற்கு மன்னா பத்திரிகை ஆசிரியர் தமிழ் நேசன் அடிகளார் தலைமைதாங்கினார். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் எ. விக்ரர் சோசை அடிகளார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

## மன்னார் அமுதனின்

## “விட்டு விடுதலை:காண்”

### (கவிதைகள்)

### வெளியீட்டு விழா



மன்னார் அமுதன்

'மன்னார் அமுதன்' என்ற பெயரில் இலக்கிய உலகில் அறிமுகமாகி உள்ள திரு. ஜோசப் அமுதன் டானியல் அவர்களின் 'விட்டு விடுதலை காண்' என்ற கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா கடந்த 16. 08. 2009 அன்று மாலை 4.00 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னா பத்திரிகை ஆசிரியர் தமிழ் நேசன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். எம். இமாம் அவர்களும் கொழும்பு திருமறைக்கலாமன்ற இணைப்பாளர் திரு. அம்புரோஸ் பீற்றர் அவர்களும் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## நீங்காத நினைவுகள்

3ம் ஆண்டு நினைவு | 1ம் ஆண்டு நினைவு



சவிரி சந்திரோகுப்பிள்ளை இராஜதுரை | திரேசம்மா இராஜதுரை

மலர்வு 25 - 12 - 1921 | மலர்வு 20 - 05 - 1933

உதிர்வு 02 - 09 - 2006 | உதிர்வு 10 - 09 - 2008

“அவரிடம் அடைக்கலம் புகுவோர்
அனைவரும் பேறுபெற்றோர்”

அன்பே உருவான எமது அம்மா ஐயா!
நீங்கள் எம்மை விட்டுச்சென்று, காலங்கள் பல கடந்திடினும் அன்போடு அரவணைத்து, நற்பண்போடு நாம் வாழ வழிசமைத்தீர்கள். எமது வாழ்வுப் பயணத்தில் உங்களோடு வாழ்ந்த அந்த இனிய நல்நினைவுகள், என்றும் எமக்கு மகிழ்வளிக்கும். அம்மா, ஐயா, நீங்கள் உங்களுக்காகவும் உங்கள் குடும்ப நலனுக்காகவும் மட்டும் வாழாது பொதுப் பணியும், இறைபணியும் செய்து, இல்வாழ்வில் இன்புற்று இறைவாழ்வில் நிறைவுற்றீர்கள். பிறப்பவன் என்றோ ஓர்நாள் இறப்பது வாழ்வின் நியதி என்றாலும் உங்களது பிரிவின் துயரம் எம் உள்ளங்களில் முள்ளாய் உறுத்துகின்றதே!

அன்போடு – பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## இணைபிரியா இல்லறவாழ்வில்

## 25 வருட நிறைவு




### திரு. திருமதி. செல்வநாயகம் ஜெயமலர்

பெரியகோமரசன்குளம், வவுனியா

எமக்கு அரணாக நிழலாக நின்று
எம் நல்வாழ்வுக்கு வழிகாட்டும்
எம் அன்புப் பெற்றோரே!
எம் இதயம் என்னும் கோவிலில்
பல்லாண்டு காலம் நீடூழி வாழ
25 வருட திருமண நன்நாளில்
உளமாற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அன்பு மகன் : மொறீன்
அன்பு மகள் : ஜனனி

பெரியகோமரசன்குளம் பரலோகமாதா
ஆலயத்தில் நன்றித் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## பிரான்சிஸ்க்கன் சபையின் 800 வது வருட நிறைவையொட்டி வெளியிடப்பட்ட

## இறுவட்டு




பிரான்சிஸ்க்கன் சபையின் 800வது வருட நிறைவையொட்டி அச்சபையைச் சேர்ந்த அருட்சகோதரன் எஸ். றீகன் லோகு (OFM) அவர்களின் முயற்சியில் உருவான 'நிர்மல தியாகமே' என்ற இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் மன்னாரில் இடம்பெற்றது. இந்த இறுவட்டுக்கான பாடல்களின் மெட்டு மற்றும் பாடல்வரிகள் அனைத்தையும் றீகன் அவர்களே எழுதியுள்ளார். அருட்சகோதரன் றீகன் மன்னார் மறைமாவட்டத்தின் அரிப்புத்துறைப் பங்கைச் சேர்ந்தவர். இவருக்கு மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இந்த இறுவட்டை மன்னார் வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விலை 225.00 ரூபாய்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784:1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது